மறைமலையடிகள்

இரா. இளங்குமரன்



இந்திய
இலக்கியச்

UG4270
R007C01
4270

மறைமலையடிகள்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

மறைமலையடிகள்

இரா. இளங்குமரன்

சாகித்திய அக்காதெமி

Maraimalaiadigal — Monograph in Tamil by
Ira. Ilangumaran, Sahitya Akademi, New Delhi, 1995. Rs. 15

© சாகித்திய அக்காதெமி

முதல் வெளியீடு *1995*
ISBN 81-7201-743-X

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி-110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4ஆவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா-700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய்-400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர்-560 002.

விலை ரூ. 15-00

அச்சிட்டோர் : **M/s உதயம் ஆப்செட்ஸ்,**
சென்னை-2.

முகவுரை

பள்ளிப் படிப்புத் தடையுற்றாரும் பன்மொழிப் புலமையும், பலதுறையறிவும் பெற்றுத் திகழமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் மறைமலையடிகள்.

''யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்'' என்றும் (மறைமலையடிகள் கடிதங்கள். பக்கம்.1), ''யான் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக ஏராளமான நூல்களை ஆராய்ந்து கண்ட முடிவுகளை நூல்களாக எழுதியிருக்கின்றேன்; பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தது போல, உண்மை காணும் உணர்ச்சியினால் நடுநின்று ஆராய்ந்திருக்கின்றேன். ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அறிய முடியாத உண்மைகளை எல்லாம் எளிதாக எழுதி வைத்திருக்கின்றேன். எல்லோரும் தமிழிலக்கியங்கள் யாவற்றையும் கற்கும் தொல்லையை மேற்கொள்ள வேண்டியதில்லை. அது முடியவும் முடியாது. தேவையும் இல்லை. எல்லா நூல்களிலும் உள்ள சிறந்த உண்மைகளை எல்லாம் பிழிசாறாக யான் வடித்துள்ளேன். என் நூல்களைப் படித்தாற் போதும். அதனால் தமிழ் முழுதுங் கற்ற பயனை அடையலாம்.'' என்றும் (மறைமலையடிகள் வரலாறு. பக்கம்.827) அடிகளார் கூறும் உரை, அவர்தம் தெளிவையும் உறுதிப்பாட்டையும் விளக்கும்.

அடிகளார் கொண்ட 'நுண் மாண் நுழை புலம்', ''பனிமலையின் உயரம்; நீல ஆற்றின் நீளம்: அமைதிவாரியின் ஆழம் - ஆகியவை ஒருங்கே அமைந்தவர் மறைமலையடிகள்'' என்று ஞா. தேவநேயப் பாவாணர் கூறுவதால் தெளிவாகும் (மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை பக்.X) அடிகளார் வாழ்வும், அவர் படைத்த நூல்களும் பற்றிய சுருங்கிய நூல் இது. முன்னுரை முதலாக அடிகள் ஆக்கிய நூல்கள் இறுதியாகப் பதினேழு தலைப்புகளில் இந்நூல் இயல்கின்றது.

அடிகளார் உள்ளம் உரை செயல் ஆகிய மூன்றிலும் தூயர் என்பதைக் காட்டுவது முன்னுரை (1).

அவர் இளமைப்பருவத்தில் நாகப்பட்டினத்தில் கற்ற கல்வி பற்றியது இளமையும் கல்வியும் (2).

தந்தையை இழந்த நிலையிலும், குடும்ப வறுமைச் சூழலிலும் மேலே படித்தலை விடுத்து, வீட்டிலே இருந்து கொண்டே கற்ற கல்வி பற்றியது தனிநிலைக் கல்வி (3).

இளந்தைப் பருவத்திலேயே இதழ்களில் கட்டுரைகளும் மறுப்புகளும் எழுதிச் சிறப்புற்றது எழுத்துத் திறம் (4).

சவுந்தரம் அம்மையாரை மணம் புரிந்து கொண்டது இல்லறம் ஏற்றல் (5). புத்தகக்கடை நாராயணசாமிப் பிள்ளை தொடர்பால் வாய்ந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தொடர்பும், மதுரை நாயகம், சோமசுந்தர

நாயகர், நல்லசாமிப்பிள்ளை ஆகியோர் தொடர்பும் பணிகளும் குறித்தது அறிஞர்கள் தொடர்பும் ஆசிரியப்பணிகளும் (6)

சென்னை, தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் வாய்ந்த தமிழ்ப் பேராசிரியர் பணியும் அக்காலப் பிறபணிகளும் பேராசிரியர் (7) ஆகும்.

'சைவ சித்தாந்த மகாசமாசம்' நிறுவுதல், 'ஞான சாகரம்' முதலிய இதழ்கள் நடத்துதல், அருட்பா - மருட்பாப் போரில் பங்குறல் என்பன பல நிலைப் பணிகள் (8).

பல்லவபுரத்தில் துறவு கொள்ளல், பொது நிலைக் கழக மாளிகை அச்சகம் ஆகியன அமைத்தல், வடநாடு இலங்கைச் செலவுகள் ஆகியன பற்றியவை பல்லவபுர வாழ்வு (9).

அப் பல்லவபுரப் பொது நிலைக்கழகத்தில் தனித்தமிழ் இயக்கம் உருக்கொண்ட நிகழ்ச்சியும் செயற்பாடுகளும் பற்றியவை தனித்தமிழ் இயக்கம் (10). அம்பலவாணர் - திருக்கோயில், மணிமொழி நூல்நிலையம், பொது நிலைக்கழக இருபதாம் ஆண்டு விழாச் சிறப்பு ஆகியவை பற்றியது பொதுநிலைக் கழகம் (11). அடிகளார் கைக்கொண்டதும் வலியுறுத்தியவையும் ஆகிய சீர்திருத்தங்கள் சிலவற்றை அவர் எழுத்தாலேயே காட்டுவது சீர்திருத்தம் (12). ஒவ்வொரு நாளும் அடிகளார் கடைப்பிடித்த நடைமுறைக் கடன்கள் பற்றியது நாள்வழிக் கடமை (13).

அடிகளின் இறுதிக்கால வாழ்வு, அவரைப் பற்றி அறிஞர்கள் கூறிய புகழுரைகள், அவர் பெயரால் விளங்கும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை 14, 15, 16 ஆம் பகுதிகளாம்.

நிறைவுப் பகுதி (17) அடிகளார் ஆக்கிய நூல்களைப் பற்றியதாகும். பொருள்வாரியான நூலடைவும், நூல்களுள் பெரும்பாலன பற்றிய சிறு குறிப்புகளும் கொண்டது அப்பகுதி.

அடிகளார் ஓர் இயக்கம்! அவர் தனி ஒருவர் அல்லர்! ஓர் இயக்கம் அவர் என்பதைத் 'தனித் தமிழ் இயக்கம்' பறை சாற்றும்!

காலமெல்லாம் கற்றலும், கற்ற கருத்துகளில் உள்ள மாசு மறு நீக்கி மணியான நூல்களாகவும், மேடைப் பொழிவுகளாகவும் வழங்கலும், நோன்பு எனக் கொண்டவர் மறைமலையடிகளார். அவ்வகையில் வரும் இழப்பு, எதிரீடு இவற்றைப் பொருளாக எண்ணாமல் துணிந்து நின்றவரும் அவர். தமிழ்ப்பற்றிலும், சைவ சமயப்பற்றிலும் தலைநின்ற அடிகள், இந்திய ஒருமை, உலக ஒருமை, உயிர் ஒருமை, பிறப்பு ஒப்பு, சமயச் சால்பு என்பவற்றிலும் தலைநின்றவராகவே திகழ்ந்தார்.

அடிகளார் வரலாறு அவரவர் மொழித் தூய்மைக்கும், மொழித் தொண்டுக்கும், மாந்த நேய உணர்வுக்கும், உயிரிரக்க மெய்யுணர்வுக்கும் வழிகாட்டும் என்பது உறுதியாம்.

இரா. இளங்குமரன்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	முன்னுரை	...	9
2.	இளமையும் கல்வியும்	...	11
3.	தனிநிலைக் கல்வி	...	14
4.	எழுத்துத் திறம்	...	18
5.	இல்லறம் ஏற்றல்	...	20
6.	அறிஞர்கள் தொடர்பும் ஆசிரியப்பணிகளும்	...	22
7.	பேராசிரியர்	...	26
8.	பலநிலைப் பணிகள்	...	31
9.	பல்லவபுர வாழ்வு	...	43
10.	தனித் தமிழ் இயக்கம்	...	57
11.	பொதுநிலைக் கழகம்	...	76
12.	சீர் திருத்தம்	...	86
13.	நாள் வழிக் கடமை	...	91
14.	அடிகளின் இறுதிக் காலம்	...	94
15.	புகழ் மாலை	...	96
16.	நினைவுச் சின்னங்கள்	...	99
17.	அடிகள் ஆக்கிய நூல்கள்	...	102

1. முன்னுரை

ஒவ்வொரு நொடியும் உயிர்களுக்குத் தேவைப்படுவது காற்று. அக்காற்றே உயிராக உயிரிகள் வாழ்கின்றன. அக்காற்று மிகத் தூயதாக இருக்க வேண்டும் அல்லவா! ஆனால் தூயகாற்றை உயிரிகள் அடைய முடிகின்றதா?

காற்றிலே மாசு எப்படி ஏற்பட்டது? தானேயா உண்டானது? இல்லையே! மக்கள் தாமே தூய காற்றைத் தீய காற்று ஆக்குகின்றனர். நல்ல காற்றை நாறுங் காற்றாய், நச்சுக் காற்றாய் மாற்றுகின்றனர்

வானில் இருந்து பொழியும் நீரை 'அமிழ்து' என்றார் திருவள்ளுவர். மழை 'வானமிழ்து' மட்டுமா? மண்ணில் அமிழ்தம் (உணவு) கிடைப்பதற்கு மூலமாக இருப்பதும் அவ்வானமிழ்துதானே!

வானமிழ்து மண்ணை அடைந்தபின், மக்கள் அதனைப் படுத்தும் மாசுக்கு அளவு உண்டா? தானும் உணவாகி மற்றை உணவுகளையும் ஆக்கித் தரும் உயிராக்கப் பொருளையாவது, தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வேண்டும் அல்லவா!

''நாம் உட் கொள்ளும் மூச்சுக் காற்றிலும் மாசு!
நாம் உட் கொள்ளும் நீரிலும் மாசு!
நாம் உட் கொள்ளும் உணவுகளிலும் மாசு!
எல்லாம் மாசு! எங்கும் மாசு!''

-என்னும் நிலை உலகில் உண்டாகி விட்டமையால் தான் ''மாசுக் கட்டுப் பாடு'' ''இயற்கைப் பாதுகாப்பு'' ''மரம் வளர்ப்பு'' என்றெல்லாம் பல்வேறு துறைகள் உண்டாக்கப்படும் கட்டாயம் நேர்ந்துளது.

காற்று நீர் உணவு முதலியவற்றில் மாசுண்டாக மூலம் என்ன என்பதை நாம் சிந்திக்கும் போது, திருவள்ளுவர் ஒளிகாட்டுகிறார். *''மாந்தர் மனத்தில் மாசு இருப்பது தான் உலக மாசுகளுக்கெல்லாம் மூலம்''* எனத் தெளிந்து காட்டுகிறார். ''மாந்தர் மனத்தில்

மாசில்லா நிலை உண்டாகிவிட்டால், மற்றை மாசுகள் எல்லாம் அற்றுப் போகும். அதுவே எல்லா அறங்களுமாம்'' என்கிறார். இதனை ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' என்னும் அருமைத் தொடரால் குறிப்பிடுகிறார்.

நாம் அறியப்புகும் மறைமலையடிகள் தம் உடல், உள்ளம், உணவு, உடை, இயல், செயல், பேச்சு, எழுத்து ஆகிய எல்லாவற்றையும் மாசில்லாமல் போற்றிக் காத்த மணியாவர். அவர் வரலாற்றை அறிவது தூய்மையை அறிவதாகும்.

''மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்''

என்பதால், அத் தூய்மையைக் கடைப்பிடியாகக் கொள்வதற்கு வாய்த்த நல்ல தூண்டலும் ஆகும்.

2. இளமையும் கல்வியும்

மறைமலையடிகளாரின் தந்தையார் சொக்கநாத பிள்ளை என்பவர். தாயார் சின்னம்மையார் என்பவர்.

நாகை என்றும் நாகப்பட்டினம் என்றும் வழங்கப்படும் நகருக்கு அண்மையில், காடம்பாடி என்றொரு சிற்றூர் உண்டு. அவ்வூர் இப்பொழுது நாகப்பட்டினத்தின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது. அவ்வளவு விரிந்துள்ளது நாகப்பட்டினம்.

சொக்கநாதர், காடம்பாடியில் குடியிருந்தாலும், நாகப் பட்டினத்திலேயே மருத்துவப் பணிபுரிந்து வந்தார். அவருக்கு வயது அறுபதுக்கு மேலும் ஆயிற்று. அவர்தம் அன்புத் துணைவியார் சின்னம்மையார்க்கு வயது நாற்பதுக்கு மேலும் ஆயிற்று. ஆயினும் மகப்பேறு வாய்க்கவில்லை. இந்நிலையில் சின்னம்மையார் திருக்கழுக்குன்றம் என்னும் திருத்தலத்திற்குச் சென்று, நாற்பது நாள்கள் நோன்பு கிடந்து வழி பட்டார். அதன் பின்னர் ஆண் மகவொன்று பிறந்தது. அதனால், திருக் கழுக்குன்றப் பெருமான் பெயரால் 'வேதாசலம்' என்னும் பெயரைப் பெற்றோர் தம் மகவுக்குச் சூட்டினர். வேதாசலம் என்னும் பெயர், பெருமைக்குரிய நிலையை அடைந்த நாளில் 'சுவாமி வேதாசலம்' என்று ஆயிற்று. அப்பெயரே தம் பெயர் தூய தமிழ்ப் பெயராக இருத்தல் வேண்டும் என்னும் கொள்கையினால் 'மறைமலையடிகள்' என்று ஆயிற்று.

(மறை-வேதம்; அசலம் மலை; அடிகள்-சுவாமி)

மறைமலையடிகள் பிறந்த நாள் கி.பி. 15.7.1876 ஆகும். அன்று மாலை 6.35க்குப் பிறந்தார் என்றும், அவர் பிறந்த விண்மீன் பரணி என்றும் குறிப்பர்.

சொக்கநாதர் மருத்துவராக இருந்ததாலும், நல்ல வருவாய் வாய்ப்பு இருந்தமையாலும் அடிகளின் குழந்தைப் பருவம் மிகச் சிறப்பாகவே அமைந்தது. உடல்நலம், உளநலம், பொருள்வளம், கல்வியறிவு இவையெல்லாம் ஒருங்கமைந்த குடும்பம் ஆதலால், வளமாகவும் வனப்பாகவும் அடிகளார் வளர்ந்தார். கல்வி

கற்பதற்குரிய வயது வந்த அளவில், பெற்றோர் நாகப்பட்டினத்தில் உள்ள 'வெசிலியன் மிசன்' பள்ளியில் சேர்த்துப் பயிலச் செய்தனர்.

''விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்பது போலத், தொடக்க வகுப்புகளிலேயே அடிகளாரின் கல்வித் திறம் பளிச்சிட்டது. குடும்பப் பழக்க வழக்கங்களின் சிறப்பால் பண்பட்ட மாணவராக விளங்கினார். அதனால், பெற்றோர் மகிழவும் ஆசிரியர்கள் பாராட்டவும் விளங்கினார். தொடக்கப் பள்ளியிலேயே 'வகுப்புத் தலைவர்' என்னும் சிறப்பும், 'தலைமை மாணவர்' என்னும் தேர்ச்சியும் ஒருங்கே பெற்றார் அடிகள் என்பது குறிப்பிடத் தக்கது.

ஐந்து வகுப்புகளை முடித்து ஆறாம் வகுப்பில் சேர்ந்தார் அடிகள். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு. அந்நிலையில் குடும்பக் காவலராகத் திகழ்ந்த தந்தையார் சொக்கநாதர் இயற்கை எய்தினார்.

கணவர் பிரிவால் கலங்கிய சின்னம்மையார், தம் இளம் பருவ மகனாரை எண்ணி உருகினார். உருக்கத்தின் இடையே அவர்க்கு உறுதியும் உண்டாயிற்று. ''தந்தையோடு கல்விபோம்'' என்னும் மொழியை யான் பொய்யாக்குவேன் எனத் துணிந்தார். தம் மகனின் கல்வி தடைப்படாவாறு தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பினார்.

பள்ளி சென்ற மகனாரும் தந்தையில்லாக் குடும்ப நிலையையும், தந்தை பொறுப்பைத் தாமே தாங்கிக் கொண்டு குடும்பத்தைக் காக்கும் தாயின் நிலையையும் புரிந்து கொண்டு, அக்கறையாகக் கற்றார். அப் பள்ளிக் கல்வியில் அடிகளாருக்கு ஆர்வமும் ஊக்கமும் இருந்தாலும், இரண்டு குறைகள் இருப்பதாக உணர்ந்தார்; உணர்ந்து பயனென்ன? அந்த இளம்பருவத்திலேயே தீர்வுகாணும் துணிவும் கொண்டார்.

முதற்குறை, அப்பள்ளியினர் ஆங்கிலப் பாடத்தில் காட்டிய அக்கறையின் அளவுக்குத் தமிழ்ப் பாடத்தில் அக்கறை காட்டவில்லை என்பது. அடிகளார் அந்த இளமைப் பருவத்திலேயே கொண்டிருந்த தாய் மொழிப் பயிற்சி உணர்வுக்கு அது சான்றாயிற்று.

இரண்டாம் குறை, கிறித்தவ சமயக் கல்வியை அறிவதற்கு வாய்ப்பு அப் பள்ளியில் இருந்ததே அன்றித், தம் சமயமாகிய சைவ சமயம் குறித்து அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பது.

இவ்வுணர்வால், அடிகளார் இளம்பருவத்திலேயே கொண்டிருந்த சைவசமயப் பற்று விளக்கமாகும்.

முதலாம் குறையை எவ்வாறு நீக்கி நிறைவாக்குவது என அடிகளார் எண்ணினார். அதனால், வீட்டிலே தமிழ்நூல்களை விரும்பிக் கற்கத் தொடங்கினார். பள்ளித் தமிழ்ப்பாட நூல்களைக் கற்கும் அளவில் நில்லாமல், கிடைத்த தமிழ் நூல்களையெல்லாம் ஆர்வமிகக் கற்றார்.

இரண்டாம் குறையை நீக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்நாளில் நாகையில் 'இந்துமதாபிமான சங்கம்' என ஒரு சங்கத்தை உருவாக்கி அவரொத்த மாணவர்களுக்குச் சமய அறிவை ஊட்டினார். இளைய மாணவராய அடிகளாரின் சமய உரை, இளைய மாணவர்களை வயப்படுத்தி அவர் வழியில் நிற்கச் செய்தது. அதனால், தாம் சமய அறிவைப் பெற்றதுடன், ஆர்வமிக்க மற்றைய மாணவர்களும் சமய அறிவு பெற்று விளங்க அடிகள் தூண்டலாக விளங்கினார்.

வீட்டிலே தமிழ்க்கல்வி, வெளியிலே சமயக்கல்வி என முயன்ற அடிகளார், பள்ளிக் கல்வியிலேயும் சிறந்தே விளங்கினார். ஆங்கிலம் முதலிய எல்லாப் பாடங்களிலும் முதல்வராகவே திகழ்ந்தார். அத் தேர்ச்சியால் அவர்தம் வீட்டுக் கல்விக்கும் வெளிக் கல்விக்கும் எவரும் தடை உண்டாக்கினார் அல்லர். ஊரவர் பாராட்டும் வகையிலேயே உயர்ந்து விளங்கினார். பள்ளித் தேர்விலும், போட்டி நிகழ்ச்சிகளிலும் பரிசும் பாராட்டும் பெற்றுச் சிறந்தார்.

இந்நிலையில், வருவாய் இழந்த குடும்பச் சுமையைத் தாங்குவதற்குச் சின்னம்மையார் அரும்பாடுபட்டார். அடிகளார், தம் குடும்பச் சூழலை நினைந்து, கல்வி கற்பதற்குப் பள்ளி செல்லுதலைத் தவிர்த்து, வீட்டிலே இருந்து கொண்டே கற்கலாம் எனத் துணிவு கொண்டார்.

3. தனிநிலைக் கல்வி

பள்ளியில் தக்க ஆசிரியர் வழியே கற்கும் கல்வி, வாய்ப்பு மிக்கது தான்! அக்கல்வியைப் பெறும் வாய்ப்புக் குறைந்தவர், வீட்டில் இருந்தே கற்கவும் முடியும்; வேறு வேலைகளைச் செய்து கொண்டும் தடையில்லாமல் கற்கவும் முடியும். ஏனெனில், நான்கு சுவர்களுக்கும், ஒரு வளாகத்திற்கும் இடையேதான் கல்வியைப் பெறவும் வளர்க்கவும் முடியும் என்பது இல்லையே! எங்கெங்கு நோக்கினாலும் அறிவு குவிந்து கிடத்தல் காணக் கூடியது தானே! ஆர்வம் இருந்தால் எந்நிலையிலும் எவரும் கற்றுக் கொள்ள முடியும்; மிகச் சிறந்த அறிஞராகத் திகழவும் முடியும்; என்பவற்றுக்கு எடுத்துக்காட்டாக அடிகள் விளங்கினார்.

நாகப்பட்டினத்தில் நாராயணசாமிப்பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் புத்தகக் கடை ஒன்று நடத்தி வந்தார். புத்தகம் விற்பனைபுரியும் வணிகராக அவர் இருந்தாலும், அரிய இலக்கண இலக்கிய சமய நூல்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தவராகவும் விளங்கினார். சங்க காலத்தில் வாழ்ந்த அறுவை வாணிகனார், கூல வாணிகனார், பொன் வாணிகனார் எனப் புகழ் வாய்ந்த-வணிகப் புலவர்களைப் போல நாகையில் வாழ்ந்த அவரால் நற்புலமை பெற்றவர்கள் பலர்.

புத்தக வணிகர் நாராயணசாமிப்பிள்ளை, மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடத்தும், உறையூர் இலக்கணப் புலவர் முத்து வீரைய உபாத்தியாயர் அவர்களிடத்தும் இலக்கிய இலக்கணங்களை இளந்தைப் பருவத்திலேயே கற்றுத் தேர்ந்தவர். அவர் கொண்ட கல்விக் காதலே அதனொடு தொடர்புடைய புத்தக விற்பனைக் கடை தொடங்கி நடத்தத் தூண்டியதாகும். அவர் புத்தகங்களை விற்பதுடன் புலமை மிக்கவர்களுக்குக் கற்றுத்தரும் தொண்டினையும் பயன் கருதாமல் புரிந்து வந்தார். அவரிடம் கற்றுச் சிறந்து விளங்கிய மாணவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள், பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களும், நாகூர்ப் புலவர் வா. குலாம் காதிறு நாவலர் அவர்களும், மதுரை நாயகம் பிள்ளை அவர்களும் ஆவர்.

நாராயணசாமிப் பிள்ளையின் நல்ல தொடர்பு அடிகளைத் தமிழ்க் கல்வியில் ஓங்கி உயரச் செய்தது. பள்ளியில் அடிகள் படித்த காலத்திலேயே அரும்பிய அத்தொடர்பு, அப்பள்ளிக் கல்வியை ஒன்பதாம் வகுப்பளவில் நிறுத்திவிட்ட அடிகளுக்குப் பெருகிப் பெரும்பயன் செய்தது. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்களையும், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார், தணிகைப் புராணம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை முதலிய இலக்கிய நூல்களையும், தருக்கசங்கிரகம், அன்னம் பட்டீயம் என்னும் சமயநூல்களையும் அடிகள் நாராயணசாமிப்பிள்ளையிடம் பாடங்கேட்டுத் தெளிந் தார்.

சொல் சொல்லாக உரை உரையாக அடிகளார் நாராயணசாமிப் பிள்ளையிடம் கற்றாரும் அல்லர்; ஆசிரியரும் கற்பித்தாரும் அல்லர். புலமை மிக்க மாணவர்க்குச் சிக்கல் உண்டாகும் இடத்தில் மட்டும் ஆசிரியர் வழிகாட்டுதல் இருந்தால் போதும் அல்லவோ! அந்நிலையிலேயே அடிகள் கற்றலும் ஆசிரியர் கற்பித்தலும் நிகழ்ந்தன என்பதை அடிகளார் பின்னாளில் எழுதிய எழுத்தே காட்டுகின்றது.

அடிகளார் இயற்றிய நூல்களுள் ஒன்று 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' என்பது. அதன் முகப்பில் அடிகளார் குறிப்பிடும் செய்தி வருமாறு:

''எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம்.''

''சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்னும் நூல்கள் இரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன. இவையேயன்றி நன்னூல் விருத்தி, இறையனார் அகப்பொருள் உரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டனவாகும்.''

''கல்லாடம் சிந்தாமணி பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை பொருட் சுவைகளில் பெரிதும் மூழ்கியிருந்தும், அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாய் இல்லை. என்றாலும், அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமதுள்ளத்தில் வேரூன்றி நின்றன.''

''இங்ஙனமாக விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பது ஆயிற்று'' என்பது அது.

அடிகளார்க்கு இருபத்தோராம் ஆண்டு என்பது கி.பி. *1897* ஆகும். அக்காலத்திற்குள் தொல்காப்பியம் *(1847, 1968, 1885)*, சிலப்பதிகாரம் *(1880)*, சிந்தாமணி *(1887)*. கலித்தொகை *(1887)*, பத்துப்பாட்டு *(1889)*, மணிமேகலை *(1894)*, என்பவை அச்சில் வெளிவந்திருந்தன. புறநானூறும் *(1894)* வெளி வந்திருந்தது. இவை பழந்தமிழ் நூல்கள்.

திருக்குறள் *1812*-ஆம் ஆண்டிலேயே வெளிவந்திருந்தது. அது மூலப்பதிப்பு. *1830* ஆம் ஆண்டில் உரைப்பதிப்பும் வெளிவந்தது. இதுவும் பழந்தமிழ் நூலே.

அடிகளார் தம் பதினைந்தாம் ஆண்டு தொடங்கி இருபத்தொன்றாம் ஆண்டுக்குள் கற்றதாகக் குறிப்பிடும் நூல்களையும், அச்சில் வெளிவந்த நூல்களையும் ஒப்பிட்டுக் கண்டால் அச்சில் வந்த பழந்தமிழ் நூல்களையெல்லாம் தவறாமல் கற்றார் என்பது புலப்படும்.

ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல் என்பன *1903* ஆம் ஆண்டு முதல் *1918* ஆம் ஆண்டுக்குள் வெளிவந்தவை ஆதலின், தம் இளந்தைப் பருவக் கல்வியில் இவற்றைக் குறித்தார் அல்லர். இவையும் பிறவும் பின்னே கற்றவையாம். அடிகளார் தம் இளந்தைப் பருவக் கல்வி பற்றி வரைந்த எழுத்தில் இரண்டு கருத்துகள் கல்வி விருப்பாளர் கருதிப் போற்றிக் கொள்ளத் தக்கவையாம்.

அவற்றுள் ஒன்று, ''நூல் முழுவதும் நெட்டுருச் செய்து முடித்தேம்'' என்பது. நூல் முழுதும் நெட்டுருச் செய்தல் என்பது இளந்தைப் பருவத்தில் இயலும் எளிய செயலாகும். அதனை மேற் கொண்டால், களஞ்சியத்தில் தவசத்தை நிரப்பி வைத்துக் கொண்டு வேண்டும் வேண்டும் பொழுதுகளில் எல்லாம் எடுத்தெடுத்துப் பயன் கொள்வது போலவும், வங்கியில் பெருந் தொகையை வைப்பாக வைத்துத் தேவைப்படும் போதெல்லாம் எடுத்துப் பயன் கொள்வது போலவும் அமையும். அப்பயிற்சியே அடிகளார் எப்பொருள் பற்றிப் பேச நினைத்தாலும் எழுதத் தொடங்கினாலும் முட்டுபாடு இல்லாமல் அந்நூற் பொருள்களும்

தொடர்களும் முந்து முந்து வந்து பேச்சையும் எழுத்தையும் வெற்றியுறச் செய்தனவாம்.

இரண்டாம் கருத்து, ''விழுமிய தமிழ்ப் பழநூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளந்தைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பது ஆயிற்று'' என்பது. எழுதும் திறம் வாய்க்கவே பேசும் திறமும் அமைந்து கிடந்தது என்பது விளக்கமாம்.

பழந்தமிழ் நூல்களில் பிறமொழிக் கலப்பு மிக அரிதாகவே இருந்தது. வர வரவே, பிறமொழிச் சொற்கள் தமிழ் நூல்களில் பெருகலாயின. ஆதலால், அடிகளார் பழந்தமிழ் நூல்களை முழுமை முழுமையாக மனப்பாடம் செய்து கொண்டமையால் ''சார்ந்ததன் வண்ணமாதல்'' என்னும் கொள்கைப்படி பிறமொழிக் கலப்பு இல்லாத செந்தமிழ் நடையில் பேசவும் எழுதவும் இயல்பாக வாய்த்ததாகும். மொழித் தூய்மையை விரும்புவார் எத்தகு நூல்களை எத்தகு முறையில் கற்றுக் கொள்ளவும் கடைப்பிடியாகக் கொள்ளவும் வேண்டும் என்பதற்குரிய வழிகாட்டுதல் இஃதாகும்.

4. எழுத்துத் திறம்

மிக இளம்பருவத்திலேயே இந்துமதாபிமான சங்கத்தின் வழியாகப் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்ட அடிகளார், எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் நல்வாய்ப்பு உண்டாயிற்று.

அந்நாளில் வெளிவந்து கொண்டிருந்த 'நாகை-நீலலோசனி', 'பாஸ்கர ஞானோதயம்', 'திராவிட மந்திரி' முதலிய வார இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள், மறுப்புக் கட்டுரைகள் ஆகியன எழுதும் வாய்ப்புக் கிட்டியமை, அடிகளாரின் எழுத்தாற்றலை வளர்த்ததோடு பெரியவர்கள் தொடர்பையும் உண்டாக்கி வைத்தது. அக்கட்டுரைகளை 'முருகவேள்' என்னும் புனை பெயரில் எழுதினார் அடிகளார்.

ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையிடம் பயின்ற மாணவருள் ஒருவர் மதுரை நாயகம் பிள்ளை என்பதை முன்னர்க் குறித்துள்ளோம். அவர் நாகை வெளிப்பாளையம் முறைமன்றத்தில் 'அமீனா' வேலை பார்த்து வந்தார்; சைவப்பற்றும் சைவ ஒழுக்கமும் அடியார் தொண்டும் மிக்கவர். அடிகளாரின் இளமைப் பருவ முதுமைப் புலமையைப் பாராட்டிப் போற்றுபவர். வயதில் மூத்தவராகிய அவரை அடிகள் தந்தையெனப் போற்றி மதித்து வந்தார். மதுரை நாயகர் அடிகளார்க்கு வேண்டும் நல்லுதவிகளையெல்லாம் விரும்பிச் செய்து வந்தார்.

இந்நிலையில் வெளிப்பாளையத்தில் சொற்பொழிவாற்றிய ஒருவர் சைவ சமயத்தை இகழ்ந்து சில செய்திகளைக் கூறினார். அச்செய்திகள் சைவப்பற்றுமைமிக்க மதுரை நாயகரை வெதுப்பின. தக்க 'பதிலடி' தரவேண்டும் என விரும்பினார்.

அந்நாளில் சென்னையில் சோமசுந்தர நாயகர் என்பார் சைவ சித்தாந்தத்தில் இணையற்ற புலமையாளராகவும் நாவன்மை யாளராகவும் விளங்கினார். அவர் திறம் அறிந்த சேதுபதி அவர்கள் 'சைவ சித்தாந்த சண்டமாருதம்' என்னும் விருது வழங்கினார். அச் சோமசுந்தர நாயகர் தொடர்பு முன்னரே மதுரை நாயகர்க்கு

இருந்தமையால், அவரை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபைக்குச் சொற்பொழிவாற்ற அழைத்தார். அவர் தம் பொழிவில் சைவ சமயப் பெருமையை நிலைநாட்டினார். அதன்பின், தொடர்ந்து சோமசுந்தர நாயகர் நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபைக்கு வந்து பேருரையாற்றினார்.

நாயகரின் சைவச் சொற்பொழிவுகளை மிகமிக ஈடுபட்டுக் கேட்டுப் பலப்பல ஐயங்களும் தீர்ந்து தெளிவு கொண்டார் அடிகளார். ஒருமுறை நாயகர் சொற்பொழிவில் இருந்து ஒரு கருத்தை மறுத்து 'ஸஜ்ஜனப் பத்திரிகா' என்னும் வார இதழில் ஒருவர் கட்டுரை வரைந்தார். நாயகர் சொற்பொழிவை நேரில் கேட்ட அடிகளார்க்கு, அவ்வார இதழ்ச் செய்தி மறுப்புக்கு உரியதாக இருந்தது. இதனால், வழக்கம் போல் 'முருகவேள்' என்னும் புனைபெயரில் அக்கட்டுரையை மறுத்து 'நாகை-நீலலோசனி'யில் கட்டுரை எழுதினார் அடிகளார்.

தம் சொற்பொழிவை மறுத்து எழுதியவர் எழுத்தையும், அதனை மறுத்து நீலலோசனியில் 'முருகவேள்' எழுதிய எழுத்தையும் படித்த நாயகர், முருகவேள் கட்டுரையின் நடை அழகிலும், மறுப்புத் திறத்திலும் வயப்பட்டுச் சைவ சித்தாந்த சபையினர்க்குக், கட்டுரையாசிரியர் எவர்? என்பதை எழுதிக் கேட்டார். அடுத்த முறை நாயகர் நாகைக்குச் சொற்பொழிவாற்ற வந்தபோது, மதுரை நாயகர் அடிகளை அழைத்துச் சென்று சென்னை நாயகர்க்கு அறிமுகப்படுத்தினார். அடிகளின் இளமைத் தோற்றமும் முதுமை அறிவும் சோமசுந்தர நாயகரை மிகவும் வியப்பில் ஆழ்த்தின.

நாயகர், அடிகளிடம் சில வினாக்களை வினாவினார். அடிகளும் உடனுக்குடன் மறுமொழி வழங்கினார். அதனால், அவர் கற்றறிந்த நூலின் பரப்பை நாயகர் உணர்ந்தார். ''இவ்விளைஞர் திறமை, இந்நாட்டுக்குப் பயன்படச் செய்தல் வேண்டும்'' என்று தீர்மானித்தார் நாயகர். அதனால், ''உன்னை விரைவிலே சென்னைக்கு வருவிப்போம்; நீ அந்தப் பக்கங்களில் இருப்பதே நல்லது'' என்று கூறினார். இத் தொடர்பு வளர்ந்ததை மேலே பார்க்கலாம்.

5. இல்லறம் ஏற்றல்

அடிகளார் தம் பள்ளிப் படிப்பை ஒன்பதாம் வகுப்பு அளவில் நிறுத்தினார் என்பதை அறிவோம். அப்பொழுது அவர்க்கு வயது பதினான்கு ஆகும். அதனால் தாமே முயன்று கற்ற கல்வியை ''எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப்பயிற்சி'' என எழுதினார். அவ்வாண்டு கி.பி. 1891 ஆகும். அவர் தம் இருபத்தோராம் ஆண்டு வரை கற்றதாகக் குறிக்கும் குறிப்பின்படி, அவ்வாண்டு கி.பி. 1896 என்பது தெளிவாகும்.

இச்சீரிய செந்தமிழ்க் கல்வியின் இடையே, அடிகளுக்கு அகவை 17 ஆக இருக்கும்போது, திருமணம் நிகழ்ந்தது (1893). மணப்பெண் அடிகளின் ஒன்றுவிட்ட மாமன் மகள் சவுந்தரவல்லி என்பார். அவர்க்கு அகவை 13 தானாம்! ஆயினும் உள்ளொத்த விருப்பினராக விளங்கினர். காதலில் திகழ்ந்தனர்.

அடிகளார் சிவந்த மேனியர்; சவுந்தர வல்லியார் கருமை நிறத்தார். அடிகளின் அன்னையார் சின்னம்மையாரும் சிவந்த நிறத்தார். அவர்க்குக் கரிய சவுந்தரத்தைச் சிவந்த மகனார் மணப்பதில் உடன்பாடு இல்லை. ஆயினும் அடிகளின் உறுதிப் பாடே வெற்றி கொண்டது.

மறைமலையடிகளின் திருமகனார் மறை. திருநாவுக்கரசு. அவர் தம் தந்தையாரின் வரலாற்றை விரிவாக எழுதியவர். அவ்வரலாற்றிலே திருமண நிகழ்வின்போது, சவுந்தர வல்லியார் அடிகளார் மேல் கொண்டிருந்த பேரன்பையும் பெருமதிப்பையும் காட்டும் நிகழ்ச்சிகள் இரண்டனைக் குறிப்பிடுகின்றார்.

''மணச்சடங்குகளில் ஒன்று அம்மி மிதித்தல். மணமகன் மணப்பெண்ணின் காலை நிலத்தில் இருந்து தம் இருகைகளாலும் பிடித்துத் தூக்கி யாவரும் காண அம்மியின் மேல் வைத்தல் வேண்டும். தம் அருங்கணவரின் பெருமையெல்லாம் அறிந்து இருந்த சவுந்தரம் தம் கணவர் தொடுதல் அவர் பெருமைக்கு ஒவ்வாது என்று கருதினார். அதனால் தம் காலை அவர் தொட முற்படுகையில் அதற்கு முன்பே காலை அம்மிமீது வைத்துப் பின் கீழே இறக்கிவிட்டார்.

''மற்றோர் சடங்கு, குடத்தில் மோதிரம் எடுத்தல். மணமக்கள் குடத்தில் இடப்படும் ஆழியை விரைந்து எடுத்தல் வேண்டும். ஓர் ஆழிதான் இடப்படும். அச்சடங்கு தொடங்கியது. இருவரும் குடத்தில் கைவிட்டனர். ஆழி சவுந்தரம் கையில் கிடைத்தது. அதை அவர் வெளியே எடுக்காமல் குடத்திற்குள் இருக்கும் தம் கணவர் கையில் யாரும் அறியாமல் கொடுத்து விட்டார். ஆழி எடுத்துக்காட்டி ஆண்மை பெறும்பேற்றை அடிகளுக்கு வழங்கி விட்டார்; அன்புமயமான பெண்மை நிறைந்த சவுந்தரம்'' என்பது அது.

அடிகளார்க்கு வயது 18. அவர் ஒரு மகவுக்குத் தந்தையானார். மகளின் பெயர் சிந்தாமணி.

சிந்தாமணி, தமிழ் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. விருத்தப்பாவில் அமைந்த தமிழ்க் காவியநூல் அது; திருத்தக்க தேவரால் அருளப்பட்டது. சமணசமயம் சார்ந்தநூல். அதன் சொற்சுவை பொருட்சுவைகளில் பெரிதும் மூழ்கியமையை அடிகள் தாமே உரைத்துள்ளார். அந்நூலின் பெயர் தாங்கிய வர்களும் ஊர்ப் பெயர்களும் மிகுதியாக இருத்தல் எவரும் அறிந்ததே. சைவச் சார்புடைய அடிகளார் தம் மூத்த மகளுக்குச் சிந்தாமணி எனப் பெயர் சூட்டியமை அவர்தம் சமயச் சால்பை நன்கு விளக்கும்.

6. அறிஞர்கள் தொடர்பும் ஆசிரியப்பணிகளும்

அடிகளாரின் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையின் மாணவர்களுள் ஒருவர் பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை என்பதை அறிந்துளோம். அவர் இயற்றிய 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலைக் கற்ற அடிகளார், அதன் சுவையழகிலும் நயத்திலும் வயப்பட்டார். தம்மையும் தம் ஆசிரியரையும் குறிப்பிட்டு, அந்நூல் நயத்தை அகவற்பாவில் கடிதமாகச் சுந்தரனார்க்கு வரைந்தார்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் மெய்ப் பொருள் நூற் பேராசிரியராகப் பணிசெய்து வந்தார். அவர் அடிகள் அகவற்பாக் கடிதத்தைக் கண்டு மகிழ்ந்து அவரையும் தம் ஆசிரியரையும் காணவிரும்பி, அவர்களைத் திருவனந்தபுரத்திற்கு வந்து செல்லுமாறு எழுதினார். அதன்படி 1895 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இறுதிக் கிழமையில் திருவனந்தபுரம் சேர்ந்தனர்.

அகவற்பாக் கடிதத்தின் சொல்நயம், பொருள்நயம், பாவன்மை முதலியவற்றைக் கண்ட பேராசிரியர், அடிகள் வயதால் மூத்தவராக இருக்கக் கூடுமென எண்ணியிருந்தார். அடிகளின் இளமையைக் கண்டு வியந்து போனார். ஒரு கிழமை அளவு உடன் வைத்திருந்து பல்வேறு நூற்பொருள் நயங்களை வினாவியறிந்த பேராசிரியர்க்குப் பெருவியப்பாயிற்று. அதனால், தம் கைப்படச் சான்றிதழ் ஒன்றனை 2.12.1895 இல் அடிகளார்க்குப் பேராசிரியர் வழங்கியுள்ளார். அதிலுள்ள செய்தி:

''நாகை திரு. வேதாசலம் பிள்ளை அவர்கள் ஒருபோது திருவனந்தபுரத்தில் ஒருவாரம் தங்கியிருந்த ஞான்று, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தமைக்குச் சாலவும் மகிழ்கின்றோம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப் புலமை மிகுந்து வருமென்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையவராயிருப்பது களிப்பூட்டுகின்றது. மற்றும் தாய்மொழிப் பற்றுக் குறைந்த இக்காலத்தில், இவர் தமது நுண்ணறிவைத் தமிழ் நூல்களில்

முற்றும் செலுத்தி நன்கு ஆராய்ந்துள்ளதும் பாராட்டிற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர் தம் அறிவுடைமையே என்னை இவர்பால் மதிப்புறுமாறு செய்தது. தமிழாசிரியர்களின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால், இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதியாக நம்புகின்றோம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராய் இருக்கின்றார் எனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எப். ஏ. (F.A) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ்நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுநர் ஆவாரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்'' என்பது அது.

திருவனந்தபுரத்தில் மார்த்தாண்டன் தம்பி என்பர் ஓர் ஆங்கிலப் பள்ளி நடத்திவந்தார். அதற்கு ஒரு தமிழாசிரியர் தேவைப்பட்டார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் எண்ணத்தில் மறைமலையடிகள் நின்றார். அதனால் அடிகளை 1896 இல் திருவனந்தபுரத்திற்கு வருமாறு செய்தார். அடிகள் தமிழாசிரியப் பணியை அப்பள்ளியில் ஏற்றுக் கொண்டார்.

திருவனந்தபுரத்தில் சைவ சபைகள் இரண்டு இருந்தன. அடிகளின் சைவ சமயப் புலமையையும் பற்றுதலையும் கேள்வியுற்ற அவ்வவ்வையினர் அடிகளை அழைத்து உரையாற்றச் செய்வித்தனர்.

நாடக நுணுக்கங்களையெல்லாம் நன்கறிந்து நாடகம் இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தாம் பணி செய்த அரசர் கல்லூரியில் 12.9.1896 இல் 'நாடகத்தமிழ்' என்னும் பொருள் ஆராய்ச்சிப் பொழிவு செய்ய வேண்டினார். அந்நிகழ்ச்சிக்குப் பேராசிரியரே தலைமையும் தாங்கினார். அடிகள் உரை, தலைவர் முதல் அனைவர் உள்ளங்களையும் உவப்பில் ஆழ்த்தியது. பேராசிரியர் அடிகளின் புலமைத் திறத்தையும் நாவன்மையையும் நன்கு பாராட்டினார்.

அடிகளார்க்குத் திருவனந்தபுரத்தின் பருவநிலை ஒத்துக் கொள்ளவில்லை போலும்! அதனால் உடல்நலக்கேடு உண்டாயிற்று. நீடித்து அங்கிருத்தல் நலமாகாது எனக்கண்ட அடிகள், திருவனந்தபுரப் பணியை விடுத்து நாகப்பட்டினத்திற்கே

திரும்பிவிட்டார். அடிகளார் திருவனந்தபுரத்தில் பணி செய்த காலம் இரண்டரைத் திங்களேயாகும்.

அடிகளார் திருவனந்தபுரத்தில் இருந்து நாகப்பட்டினத்திற்கு வந்த செய்தியை சோமசுந்தர நாயகர் அறிந்தார். அவரை எழுத்துத்துறையில் செலுத்த வேண்டும் என்றும், குடும்ப வாழ்வுக்குத் தக்க வருவாய்க்கு வாய்ப்புச் செய்தல் வேண்டும் என்றும் எண்ணினார்.

'துகளறு போதம்' என்பது சீர்காழி, சிற்றம்பல நாடிகள் அருளிய நூல். சைவ சித்தாந்தப் புலமை மிக்க அடிகள் அதற்கு உரைவரைதல் நலமாம் என நாயகர் கருதினார். தம் கருத்தை அடிகளார்க்கும் எழுதினார். அடிகளார் துகளறு போதம் 100 பாடல்களுக்கும் உரைவரைந்து விடுத்தார். அதனைக் கண்டு மகிழ்ந்த நாயகர் தம் செலவிலேயே நூலை வெளியிட்டார். அதற்குப் பின்னர், அடிகளார் முன்னமே வரைந்த சில கட்டுரைகளையும் 'முதற்குறள் வாத நிராகரணம்' என்னும் கட்டுரையையும் தொகுத்துத் தாமே வெளியிட்டார்.

''உன்னைச் சென்னைக்கு வருவிப்போம்'' என்று முன்னே நாயகர் சொல்லியதை மறந்தார் அல்லர். நாயகரின் மாணவர்களுள் ஒருவர் நல்லசாமிப் பிள்ளை என்பார். அவர் சித்தூர் முறைமன்றத்தில் நடுவராக இருந்தார். சைவப் புலமை மிக்க அவர் சைவசித்தாந்தம் தொடர்பாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் திங்கள் இதழ் வெளியிட விரும்பினார்.

சைவசித்தாந்தத் தனிப்பெரு நூலாகிய சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அரும்புலமையாளர் நல்லசாமி. அவர் ஆங்கில இதழ் வெளியீட்டுப் பொறுப்பை எடுத்துக் கொண்டார். தமிழ் இதழுக்குத் தக்க ஒருவர் வேண்டுமே என்று விரும்பியபோது சோமசுந்தர நாயகர், அடிகளாரை அப்பொறுப்பில் அமர்த்த விரும்பினார். அதனால் நாயகர் அடிகளாரைச் சென்னைக்கு அழைத்து, நல்லசாமியுடன் தொடர்புபடுத்தினார். அடிகளார் புலமையை அறிந்து மகிழ்ந்த நடுவர் நல்லசாமி மகிழ்வுற்றுச் சித்தாந்த தீபிகையின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பை அடிகளாரிடம் ஒப்படைத்தார். 'சித்தாந்த தீபிகை அல்லது உண்மை விளக்கம்' என்பது அதன் முழுப்பெயர்.

சித்தாந்த தீபிகையின் முதல் இதழ் 21.6.1897 இல் வெளிவந்தது. முதல் ஐந்து இதழ்களுக்கு அடிகள் ஆசிரியராக இருந்தார். அவ்விதழ்களில் திருமந்திரத்திலுள்ள அன்புடைமை, இரந்தார்க்கு ஈதல், அறஞ்செயான்திறம் என்னும் மூன்று

இயல்களின் முப்பது பாடல்களுக்கும் விரிவுரை எழுதினார். சிவஞான சித்தியார் அளவை இயல் காப்புச் செய்யுட்களோடு பதினான்கு செய்யுட்களுக்கு விரிவுரை வரைந்தார். தாயுமானவர் அருளிய பரிபூரணானந்தம் பத்துப் பாடல்களுக்கும் பொருள் வணக்கத்தில் எட்டுப் பாடல்களுக்கும் உரை இயற்றினார். குறிஞ்சிப்பாட்டுக்கு உரை வரைந்தார். இன்னும் அன்பு அருள் பற்றிய தனிக் கட்டுரைகளும் மூன்று கனவு என்னும் ஆங்கில மொழி பெயர்ப்பும் வரைந்தார்.

7. பேராசிரியர்

தீபிகையின் ஐந்தாம் இதழுக்கு மேல் அடிகளார் ஆசிரியப் பொறுப்பில் தொடர்ந்தார் அல்லர். சித்தூரில் இருந்து நாகைக்குச் சென்றார். சென்ற சிறிது காலத்தில், சென்னைக் கிறித்தவக் கல்லூரிக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவை என்னும் விளம்பரம் கண்ட சோமசுந்தர நாயகர் அடிகளாரை மீண்டும் சென்னைக்கு வருமாறு எழுதினார்.

அந்நாளிலேயே தமிழாசிரியர் ஒருவர்க்குப் புலமையாளர்கள் அறுவர் போட்டியிட்டனர். அந்நாள் அக்கல்லூரி முதல்வர் புகழ்மிக்க 'வில்லியம் மில்லர்' என்னும் துரைமகனார். தமிழ்த்துறைத் தலைவராக இருந்து, தமிழாசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு நடத்தியவர் முத்தமிழ்ப் புலமை மிக்க வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார். அவரே தம்பெயரைப் 'பரிதிமாற் கலைஞ'ரெனக் கொண்டவரும் ஆவர்.

தேர்வுக்கு உரிய நாளில் தேர்வுக்கு வந்த அனைவரினும் இளைஞராக இருந்தவர் மறைமலையடிகளாரே! இம்முதிய கூட்டத்தினரிடையே எமக்கு எப்படி வேலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு இல்லாது இருந்த அடிகளுக்கு, ''உடனே வேலைக்கு வந்து சேர்க'' என்னும் ஆணை கல்லூரியில் இருந்து வந்து வியப்பாக்கிற்று. அடிகளார்திறம் மட்டுமா அவ்வெற்றி! தேர்வு செய்தவர் நடுவு நிலைமையும் தகுதியை மதித்த மதிப்பும் கூடி வழங்கிய வெற்றிதானே!

4.3.1898 இல் தம் நாட்குறிப்பில் ''இன்று நல்லநாள் இல்லையாதலால் கிறித்தவக் கல்லூரிப் பொறுப்பு ஏற்கவில்லை'' என்று அடிகளார் எழுதியுள்ளார். பின்னர் *9.3.1898* இல் பணியேற்றார் என்பதை அறிகின்றோம். அதுமுதல் பதின்மூன்று ஆண்டுகள் அடிகளார் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றியுள்ளார் (*1989* முதல் *1911* வரை). கல்லூரிப் பணிக்குச் செல்லும்போது அடிகளார் வயது *23*. கல்லூரிப்பணியில் இருந்து விடுதலை அடைந்தபோது அடிகளார் வய்து *36*.

அடிகளார் இனிய சொல்லினர்; இசைவல்ல நாவினர்; ஆற்றொழுக்கன்ன உரையினர்; கடலன்ன கல்வியினர்; ஆழ்ந்தகன்ற ஆய்வினர்; உறுதி பிறழா நடுவு நிலையினர்; சமயச் சால்பினர்; எல்லா உயிரும் இன்புற்றிருக்க விரும்பும் அருளாளர்; குல வேறுபாட்டைக் கடிபவர்; பகுத்தறிவுப் பார்வையர் - ஆகவே அவர்தம் ஆசிரியப்பணி எவராலும் விரும்பப்படுவதற்கு ஐயமில்லை. மாணவர்களைப் போலவே பொதுமக்களும் புலமையாளர்களும் அடிகளை மதித்துப் போற்றினர். கல்லூரியில் பணி செய்த காலத்தில் அடிகளார் செய்த சமயப்பணி, நூலாக்கப்பணி, இதழாசிரியப் பணி, சொற்பொழிவுப் பணி என்பவை மிக விரிந்தனவாகும்.

பள்ளிக் கல்விக் காலத்திலேயே தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் வல்ல அடிகளார், பின்னே வடமொழியிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். கல்விக்கடலென ஆசிரியப்பணி ஏற்பதற்கு முன்னரே விளங்கிய அடிகள், ஆசிரியப் பணி ஏற்ற பின்னும் கற்ற கல்வி பெரிது.

> "ஓதுவது ஒழியேல்"
> "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா"
> "பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்"

என்னும் நன்மொழிகளுக்கு ஏற்ப நாளெல்லாம் திகழ்ந்தார். அவர்தம் நாட்குறிப்பில் உள்ள கலையார்வக் குறிப்புகள் சிலவற்றைக் கண்டாலே அவர்தம் விரிபுலமை விளங்கும்.

7.1.1899 குர்-ஆனில் கூறப்பட்டிருக்கும் இசுலாமிய மதக்கருத்துகளை இந்துத்தானி முன்சி வாயிலாக அறிந்து கொண்டேன்.

3.3.1900 இராமகிருட்டிணர் வரலாற்று நூலை இன்று முழுவதும் படித்தேன்.

30.8.1900 பேராசிரியர் மாக்சு மூலரின் COMPARATIVE PHILOLOGY படித்தேன்.

3.12.1900 வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையைத் தொடங்குவதற்குரிய அறிக்கையைத் தயாரித்தேன்.

25.3.1901 உபநிடதங்கள் வாடகை நூலகத்திலிருந்து பெற்றேன்.

22.12.1901 விவேகானந்தரின் பக்தியோகம், கர்மயோகம், ஆத்மா ஆகிய நூல்களை வாங்கினேன்.

5.5.1905 பாலகங்காதர திலகரின் வேதம் பற்றிய நூலைப் படிக்கத் தொடங்கினேன்.

2.12.1905 ஈசோப நிடதத்திற்குத் தமிழ் 'விளக்கவுரை எழுதி முடித்தேன்.

22.12.1906 பிராணாயாமம் பற்றிய உரையை எழுதினேன்.

27.1.1907 தவத்திரு இராசானந்த சுவாமிகள் எனக்கு நிட்டை அருளினார்.

27.11.1907 சிவஞான போதத்துக்கு விரிவுரை எழுதத் தத்துவ நூல்கள் பல வாங்கி வருகிறேன்.

14.1.1910 வேதாந்த சூத்திரங்களுக்குரிய நீலகண்ட பாடியத்தைக் கற்கத் தொடங்கினேன். மொழி பெயர்ப்பாளர் செந்திநாத அய்யர்க்குநந் தமிழ்ச் சைவர் கடப்பாடுடையர்.

6.8.1910 விவேகானந்தரின் கர்மயோகம் என்னும் அருமையான நூலைப் படித்தேன். இரண்டொரு கருத்துக்களைத் தவிர விவேகானந்தரின் பொழிவுகள் நெஞ்சை உருக்கும் தன்மையவாய்ச் சைவ சித்தாந்தக் கருத்துகளுடன் ஒத்துள்ளன.

''கற்பிப்பவர் என்றும் கற்பவராகவும் இருத்தல் வேண்டும்'' என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அடிகளாரின் குறிப்புகளுள் சில இவை. கல்லூரியில் பணியாற்றிய காலத்தொடு கூடியவை.

பத்துப்பாட்டு:

கல்லூரி மாணவர்களுக்கு 1903 ஆம் ஆண்டில் பத்துப்பாட்டில் ஒன்றாய முல்லைப் பாட்டு பாடமாக இருந்தது. 1906ஆம் ஆண்டில் அப்பத்துப் பாட்டில் ஒன்றாய பட்டினப் பாலை பாடமாக இருந்தது. பத்துப் பாட்டுக்கு ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை உண்டு. எனினும் ஆசிரியர் அடிகளார் ஆற்றொழுக் கான உரை கண்டார். அவ்வுரை கண்ட மாணவர், உவந்து கற்றதுடன் அந்நூல் பலர்க்கும் பயன்படும் வகையில் தாமே வெளியீட்டுச் செலவு தந்து வெளியிடச் செய்யும் கொடையாளரும் ஆயினர். இதனை அடிகளாரே அவ்வாய்வு நூல் முகப்புகளில் படைத்துள்ளார்.

''இம்முல்லைப் பாட்டு கி.பி. 1903 ஆம் ஆண்டு கலை நூற் புலமைக்குப் பயிலும் மாணாக்கர்க்குப் பாடமாக வந்தது. சென்னைக் கிறித்தவ கல்லூரியில் அப்பொழுது யாம் தமிழாசிரியராய் இருந்து மாணாக்கர்க்குத் தமிழ்நூல் அறிவுறுத்தி

வந்தமையால் இம்முல்லைப் பாட்டிற்கும் உரைவிரித்து உரைக்கலானேம்.

இச்செய்யுட்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும் கூடவே விளக்கி வருகையில் செய்யுளியற்றிய ஆசிரியர் கொண்ட பொருள்முறை ஒரு பக்கமாகவும், உரைகாரர் கொண்ட பொருள்முறை மற்றொரு பக்கமாகவும் ஒன்றோடு ஒன்று இணங்காதாய் மாறுபட்டு நிற்றல்கண்டு, மாணாக்கர் பெரிதும் இடர்ப்படுவார் ஆயினர். அதுவேயும் அன்றி, 'ஆக்கியோன் அமைத்த சொற்றொடர் நெறியைச் சிதைத்துச் சொற்களையும் அடைமொழிகளையும் ஒரு முறையுமின்றிப் பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்கும் நச்சினார்க்கினியருரை சிறிதும் ஏலா உரையேயாம்' என்றும் அவர் கருதுவாராயினர்.

முன்னரே ஆக்கியோன் கருத்தை ஒட்டி, வேறோர் உரை செய்து வைத்திருந்த யாம், அதனை எடுத்து அவர்க்கு விளக்கிக் காட்டினேமாக அதுகண்டு அவரெல்லாம் 'தமதுரை ஆக்கியோன் கருதிய பொருளை நேர்நின்று விளக்குவதோடு, பண்டைக் காலத்துத் தண்டமிழ்ச் சிறப்புகளைப் பின்றைக் காலத்துக்கு ஏற்றபடி தெற்றென நன்கு தெரிவிப்பதாயும் இருத்தலின் தமது விரிந்த இவ்வாராய்சியுரையினையே பதிப்பிட்டு எமக்குத் தந்தருளல் வேண்டும்'' எனக் கேட்டு அது பதிப்பிற்காம் செலவும் ஒருங்கு சேர்ந்து முன் உதவினர்.

''கி.பி. 1906 ஆம் ஆண்டு கலைநூல் புலமைக்குப் பயிலும் மாணாக்கர்க்குப் பத்துப் பாட்டுகளில் ஒன்றான பட்டினப்பாலை என்னும் அருந்தமிழ்ச் செய்யுள் பாடமாய் வந்தது. யாம் முல்லைப் பாட்டிற் கெழுதிய ஆராய்ச்சியுரையினைப் பற்றிக் கேள்வியுற்ற அவ்வாண்டின் மாணாக்கர்களும் தமக்குப் பாடமாய் வந்த பட்டினப்பாலைக்கும் அதனைப் போலவே ஓர் ஆராய்ச்சியுரை எழுதித் தரும்படி வேண்டி, அதனைப் பதிப்பிடுதற்காகும் செலவின் பொருட்டுத் தாமும் ஒருங்கு சேர்ந்து பொருளுதவி செய்தனர்'' என்பவை அவை.

இவ்விரு நூலுரை ஆய்வுகளால் நேர்ந்த பலவகை நலப்பாடுகளையும் குறித்துக் கூறுகிறார் அடிகளார்:

''அவ்வுரை நூலை வாங்கிக் கற்ற மாணாக்கரும் ஏனைத் தமிழறிஞரும் புதுமுறையாக எழுதப்பட்ட அவ்வுரைப் பாங்கினைப் பெரிதும் வியந்து பாராட்டி, அம்முறையினைப் பின்பற்றிப் பழைய தமிழ்நூல்களை ஆராய்வதில் கிளர்ச்சி பெறலானார். இப்புதுமுறையுரை தமிழ் நூலாராயும் வகைகளை

இனிது விளக்கி அறிஞர் பலர்க்கும் அகமகிழ்ச்சியினை விளைத்தமை கண்டு இனி, இத்தகைய உரைகளையே எழுதுதல் வேண்டும் என எமதுள்ளம் பெரிதும் விழைந்தது'' என்பது அது.

மாணவர்கள்:

அடிகளார் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் அவரிடம் தமிழ் கற்ற மாணவர்கள் பிற்காலத்தில் மிகச்சிறந்து விளங்கினர். அம்மாணவர்களுள் சிலர்: தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை, இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், பெருநாவலர் ச. சோமசுந்தர பாரதியார், திவான் பகதூர் ஆர்.வி. கிருஷ்ணையர், திரு. சி.என். முத்துரங்க முதலியார், பேரறிஞர் ச. வையாபுரிப் பிள்ளை, டாக்டர் பி. சுப்பராயன் என்பார்.

8. பலநிலைப் பணிகள்

சோமசுந்தர நாயகர்:

அடிகளார் கல்லூரி ஆசிரியராகச் சென்னைக்கு வந்தது, சோமசுந்தர நாயகர்க்குப் பெருமகிழ்வாயிற்று, அடிகளார்க்கோ அவ்வாய்ப்புப் பெருநலமாயிற்று.

அடிகளார் நாயகரையும், நாயகர் அடிகளாரையும் அடிக்கடி கண்டு மகிழவும், உரையாடவும், சொற்பொழிவாற்றவும் சென்னை வாழ்க்கை உதவியது. அடிகளார், குடும்பத்தோடு சென்னைக்கு வந்துவிட்டமையால் குடும்பத்தோடு இருந்த நாயகர்க்கு மேலும் நெருக்கமாயிற்று. விடுமுறை நாள்க ளெல்லாம் இருகுடும்பத்தவரும் இணைந்து இனிதுவாழ வாய்த்தது. அடிகளார்க்குத் தந்தையும் தாயும் போலவே நாயகரும் அவர்தம் அருமை மனைவியார் சிவஞானத்தம்மையாரும் விளங்கினர் என்பது மட்டுமில்லை. அடிகளாரின் துணைவியார் சவுந்தரவல்லியார்க்கும் தந்தையும் தாயுமாகவே அவர்கள் விளங்கினர் என்பது இனிய செய்தியாம்.

அடிகளார் நாயகரை வழக்கம் போல் சந்தித்து உரையாடிய ஒரு பொழுதில் நாயகரிடம் தாம் சிவஞானபோதம் பாடம் கேட்க வேண்டும் என்னும் விருப்பத்தை வெளியிட்டார். நாயகர் ''அப்பன்! நீயே சிறந்த அறிஞன்; புலவன்; சிவநெறியின் சாத்திர நூல்களையெல்லாம் முன்பே கற்றுத் தெளிந்திருக்கிறாய். சித்தாந்தக் கருத்துகளை எடுத்து நுட்பமாக விளக்கி உரையாற்றுகின்றாய், கட்டுரைகள் வரைகின்றாய். உனக்கு யான் பாடஞ் சொல்ல என்ன இருக்கிறது?'' என்றார்.

அதற்கு அடிகளார், ''ஐயா, குருவிடம் முறைப்படி அறிவு நூல்களைப் பாடம் கேட்டல் மாணவன் கடமையன்றோ! தங்களிடம் பாடம் கேட்டேன் என்னும் பேறு எனக்கு வேண்டும் அல்லவோ! அன்றியும் நம் சித்தாந்த உண்மைகளையும் விளக்கங் களையும் எடுத்துரைக்கும் ஆற்றலுடையார் தங்களையன்றி யாருளர்? ஆதலின், அருள் கூர்ந்து சிவஞான போதத்தைப் பாடஞ்

சொல்ல வேண்டும்'' என்று வேண்டினார். நாயகர் புன்முறுவல் புரிதல் வழியாக ஏற்றுக் கொண்டார்.

''இன்று மகாசிவராத்திரி கொண்டாடினேன். சூளை சென்று தெய்வத் தன்மையுள்ள என் குருவை வணங்கினேன்'' என்று அடிகளார் தம் நாட்குறிப்பில் எழுதியுள்ளது அவர்தம் பத்திமையை விளக்கும். அடிகளார் துறவு கொண்ட பிற்காலத்தில் வாழ்ந்த பல்லவபுர மாளிகை மாடி மண்டபத்தில் அமைத்த நூலகத்தின் நடுவே அம்பலவாணர் திருக்கோயில் எழுப்பினார். அதன் எதிரில் சோமசுந்தர நாயகரின் திருவுருவப்படம் ஒன்றை விளங்கச் செய்தமை அடிகள் நாயகர்பால் கொண்ட தெய்வத்திரு அன்பை வெளிப்படுத்தும்.

அடிகளார் சென்னை வாழ்வை மேற்கொண்டு மூன்று ஆண்டுகளும் நிரம்பவில்லை. அதற்குள் அவர்தம் உடலாய் உயிராய் உணர்வாய்த் திகழ்ந்த நாயகர் 22.2.1901 இல் இயற்கை எய்தினார். அப்பிரிவைத் தாங்குதல் அடிகட்கு அரிதாக இருந்தது. அந்நிலையில் 'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் இரங்கல் மாலை ஒன்றனை இயற்றி நீத்தார் கடன் நிகழ்ந்த பதினாறாம் நாளில், இரங்கல் கூட்டத்தில் படைத்தார். பின்னே நூலும் ஆயிற்று அது.

சில புலவர்கள் அந்நூலில் பழமுறைக்கும் இலக்கணத்திற்கும் மாறான சில பிழைகள் இருப்பதாகக் கூறிப் பரப்பினர். அடிகளார், அவர்கள் பரப்பிய குறைகளுள் எதுவும் இல்லை எனச் சான்றுடன் வரைந்தார். அது 'சோம சுந்தரக் காஞ்சி ஆக்கம்' எனப்பட்டதாம்.

ஞானசாகரம் (அறிவுக்கடல்)

நாயகர் மறைவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னே ''அப்பன், நமக்குப் பின் நாம் துவங்கிய சைவசித்தாந்த விளக்கத்தை நீயே நம் திருஞான சம்பந்தப் பெருமான் துணைக் கொண்டு நன்கு நடத்திச் செல்க'' என்று உரைத்தார். அவர் மறைவின்பின், அச்சொல் அடிகளாரைப் பெரிதும் தூண்டி நின்றது. அதனால் 1902 இல் 'ஞானசாகரம்' என்னும் திங்கள் இதழ் அடிகளாரால் தொடங்கப்பட்டது.

முதல் இதழில் சகளோபாசனை, தமிழ் வட மொழியினின்றும் பிறந்ததா? தமிழ்ச் சொல் உற்பத்தி, சைவம், சைவநிலை, காப்பியம், தொல்காப்பியப் பரிசீலனம், உள்ளது போகாது இல்லது வாராது, தொல்காப்பிய முழுதன்மை, கேநோபநிடத மொழிபெயர்ப்பு, சமயப் பெருமை, இலக்கண ஆராய்ச்சி, நெஞ்சறிவுறுத்தல், தமிழ் மிகப் பழைய மொழி,

இறையனார் அகப்பொருளுரை வரலாறு, ஆனந்தக் குற்றம், மணிவாசகர் கால நிருணயம், மெய்ந்நல விளக்கம், தமிழ் வேத பாராயணத் தடை மறுப்பு, நாலடியார் நூல்வரலாறு, முனி மொழிப் பிரகாசிகை, பரிமேலழகர் உரையாராய்ச்சி என்பன இடம் பெற்றன.

எல்லாக் கட்டுரைகளும் அடிகளார் எழுதியனவே. ஒவ்வொரு சித்திரையிலும் ஆண்டின் முதல் இதழ் தொடங்கியது. முதற்கண் மாணவர்க்கு ஆண்டுக் கட்டணம் ஒன்றரை ரூபாவும், மற்றவர்க்கு இரண்டரை ரூபாவுமாக இருந்துள்ளது. பின்னே மூன்று ரூபாவாகவும், நான்கு ரூபாவாகவும் வளர்ந்துள்ளது. அடிகளார் தனித்தமிழ் இயக்கம் கண்டபின் 'ஞானசாகரம்' 'அறிவுக்கடல்' என்னும் பெயர் கொண்டது.

அடிகளார்க்குக் கல்லூரிப் பணி இருந்தது. விடுமுறை நாள்களில் உள்ளூரிலும் வெளியூரிலுமாகச் சொற்பொழிவுப் பணி இருந்தது. நூலெழுதும் பணியுண்டு. இவற்றோடு இதழ்ப் பணியையும் மேற்கொண்டார். ஆதலால் பணிச்சுமை மிகுதி யாயிற்று. ஆனால், ஒரு புதுநெறியை மேற்கொண்டார். நூல்கள் எழுதும் பணியை இதழ்ப்பணியோடு இணைத்துச் செய்தலாக அமைந்த நெறி அது.

அடிகளார் இயற்றிய அரும்பெரும் ஆய்வு நூல் 'மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி' என்பது. அது முதல் இதழ் தொடங்கி ஞானசாகரத்திலேயே நடைபெற்று நூலும் ஆகியதாகும். 'மணிவாசகர் கால நிருணயம்' என்னும் கட்டுரை முதல் இதழிலேயே இடம் பெற்றுள்ளதன்றோ! இவ்வாறே திருவாசக உரை முதலியனவும் ஞானசாகரத்தின் வழியே வெளிவந்தனவே.

இனி இதனாலும் இதழ் தடையற வெளிவந்தது என்பதற்கு இல்லை. உறுப்பினர் கட்டணம், நன்கொடை ஆகியவற்றை நம்பியே நிகழ்ந்தது ஞானசாகரம். ஆதலால், பொருள் முட்டுப் பாடும் இதழ் இடை இடையே தடைப்பட்டு வரக்காரணம் ஆயிற்று. ஆயினும் விடாமல் நடத்தினார். விடாமல் நடத்துதலின் நன்மையையும் அடிகளே குறிப்பிடுகிறார்.

''திங்கள் தோறும் கையொப்ப அன்பர்கள் அறிவுக்கடலை எதிர்பார்ப்பார்களே என்ற கவலையால் யான் ஆராய்தலும் எழுதுதலும் செய்கின்றேன். என் இப்பணிக்கு அறிவுக்கடல் வெளியீடு பெரிதும் தூண்டுதலாய் உள்ளது. ஆதலின்,

அறிவுக்கடல் தொடர்ந்து நடைபெறுதல் நல்லதே'' என்று கூறுவார் (மறைமலையடிகள் வரலாறு)

அருட்பா - மருட்பா:

வள்ளலார் இராமலிங்க அடிகள் அருளிய பாடல் தொகுதிக்கு 'அருட்பா' என்பது பெயர். ''அப்பாடல்களை அருட்பா என்று கூறுதல் ஆகாது; தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், குமரகுருபரர் பாடல் என்பது போல இராமலிங்க சுவாமிகள் பாடல் என்றுதான் சொல்ல வேண்டும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிய தேவார திருவாசகப் பாடல்களே 'அருட்பா' எனப்படுவன என்று ''சைவப் பற்றுமை மிக்க சிலர் எதிர்ப்புக் காட்டினர். அவர்களுள் தலைமையாக நின்றவர் ''நாவலர் பெருமான்'' என்று சிறக்கப் பெற்ற ஆறுமுக நாவலர் ஆவர்.

'அருட்பா' அன்று என்ற மறுப்பு, அதனை 'மருட்பா' என்று அதை அறைகூவும் நிலைக்குக் கிளர்ந்தது. சமய அறிஞர்களும் தமிழ்ப் புலமையாளர்களும் 'அருட்பா-மருட்பா'ப் போரில் ஈரணியாக நின்றனர். முறை மன்றத்தில் வழக்குத் தொடுத்து வாதாடுதல் ஒரு பக்கம் நிகழவும், பொது மேடைகளில் சொற்போரிட்டு வழக்காடுதல் மற்றொரு பக்கமும், கட்டுரைகள் எழுதி மறுப்பும் மறுப்புக்கு மறுப்புமாக எழுத்துப் போர் இன்னொரு பக்கமுமாக நிகழ்ந்து வந்தன.

இந்நிலையில் ஈழத்தைச் சேர்ந்த பேரறிஞர் நா.கதிரைவேற் பிள்ளை என்பார், சென்னை இராயப்பேட்டை வெசுலி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கினார். அவர் எழுத்துவன்மையும், சொல்வன்மையும் ஒருங்கே கொண்டவர். இராமலிங்கர் பாடல்கள் மருளினால் (மயக்கத்தால்) எழுந்தனவே அன்றி அருளினால் எழுந்தன அல்ல என்பதை விளக்கும் வகையில் 'மருட்பா' என்றொரு நூலை இயற்றினார். அன்றியும், சென்னையில் பல்வேறு இடங்களில் வள்ளலாரையும், அவர் பாடல்களையும் இகழ்ந்தும் மறுத்தும் பேசினார்.

புலவர்களிடையே பரபரப்பாகப் பேசப்பட்ட அருட்பா மருட்பாப் போரில் அடிகளார்க்கு முதற்கண் ஈடுபட ஆர்வம் இல்லை. ஆனால், வள்ளலார் அன்பர்களின் வேண்டலாலும், உண்மை உணர்த்த வேண்டும் என்னும் ஆர்வத்தாலும் அடிகளார் அக்கறை கொண்டார். வள்ளலார் பாடிய பாடல்கள் அருட்பாக்களே என்பதை வலியுறுத்தி மெய்ப்பிக்கக் கிளர்ந்தார்.

உண்மை உணர்த்த விரும்பும் ஆர்வலர்களால் சென்னை, சிந்தாதிரிப் பேட்டையில் 20.9.1903 இல் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் அடிகளாரும் கதிரைவேலரும் அருட்பா மருட்பா பற்றி வழக்காடி மெய்ம்மை நிலைநாட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி முறைமன்ற நடுவர் ஒருவர் தலைமையில் கூட்டம் நிகழ்ந்தது.

வள்ளலாரின் பாடல்கள் அருட்பாடல்களே என்பதை அடிகளார் பல்வேறு சான்றுகள் காட்டி விரித்துரைத்தார்; பாடல் நயங்களை எடுத்துரைத்தார்; இசைத்தும் காட்டினார். அப்பொழிவின் திறம் அவையை வயப்படுத்திற்று. அதனை மறுத்துப் பேச வந்த கதிரைவேலர், அடிகளார் கூறியவற்றை முறையாக மறுத்துப் பேசாமல் பொருந்தாத சில செய்திகளைச் சுருக்கமாக உரைத்து விரிவாகப் பின்னொரு முறை பேசுவதாகக் கூறிக் கூட்டத்தில் இருந்து சென்றார். தலைவர் உரை, 'வள்ளலார் அருளிய பாடல்கள் அருட்பாடல்களே' என அமைந்தது.

மறுநாளே கதிரைவேலர் அடிகளார்க்கும் தமக்கும் நிகழ்ந்த வழக்குரையில் தம் பக்கமே வெற்றி இருந்ததாக ஓர் அறிக்கை வெளியிட்டார். அதனால், அவ்வழக்காடுதல் அவ்வளவில் நில்லாமல் தொடர்வதாயிற்று.

அருட்பா-மருட்பா வழக்காடுதல் 27.9.1903 இல் அதே சிந்தாதிரிப் பேட்டையில் அதே இடத்தில் அடிகளாரும் கதிரைவேலரும் மீண்டும் வழக்காடுதற்கு இடை நின்றவர்கள் ஏற்பாடு செய்தனர். உரிய பொழுதில் அடிகளார் வந்தார்; ஆனால் கதிரைவேலர் வந்திலர். வாராமையால், அடிகளார் மட்டுமே வள்ளலார் பாடல்களின் அருமை பெருமைகளை உரைத்த அளவில் கூட்டம் முடிவதாயிற்று.

அருட்பா மருட்பாப் போர்க்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும் என்னும் ஆர்முடையவர்களால் 18.10.1903 இல் சென்னை 'வேணுகோபால் மைய மண்டபத்தில்' ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு அடிகளார் வந்தார்; கதிரைவேலர் வரவில்லை. அடிகளார் பொழிவு நிகழ்ந்தது. இறுதியில் வள்ளலார் அருளியவை அருட்பாக்களே என அவை முழங்கியது.

கதிரைவேலர் அடிகளாரொடு வாதிட வரவில்லை எனினும் தம் கருத்தில் அழுத்தமாகவே இருந்தார். காஞ்சி, திருச்சி ஆகிய நகர்களுக்குச் சென்று தம் கருத்தை வலியுறுத்தினார். அவற்றை அறிந்த அடிகளார் தாமும் அவ்விடங்களுக்குச் சென்று வள்ளலார் அருளியவை அருட்பாவே எனத் தெளிவுறுத்தி வந்தார்.

அடிகளாரும் கதிரைவேலரும் கருத்து வகையால் இவ்வாறு எதிரிடை நிலையில் இருந்தாலும் ஒருவரை ஒருவர் வெறுத்தார் அல்லர்; மதித்தலில் குறைந்தாரும் அல்லர்.

வள்ளலார்மேல் பெரும் பற்றுடைய சிலர் கதிரைவேலர்க்குத் துன்பம் உண்டாக்க எண்ணுகின்றனர் என்றும், முயல்கின்றனர் என்றும் அறிந்த அடிகளார், அவர்களை அழைத்து வள்ளலார் கொள்கைகளுக்கு மாறானது அவர்கள் எண்ணம் என்பதைக் கண்டித்துக் கூறியதுடன், கதிரைவேலர்க்கும் விழிப்பாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்தையும் வழங்கினார். அடிகளார் மேல் பகைமை கருதாக் கதிரைவேலர் அடிகளாரை அவர் இல்லத்திற்குச் சென்று நேரில் 1.8.1903 இல் சந்தித்துள்ளார். தம் நாட்குறிப்பில் அடிகளார், ''கதிரைவேற்பிள்ளை என் வீடு வந்து எனக்குத் தங்கள் கல்லூரியில் வேலை வாங்கித் தரவேண்டும்'' என்றார். நான் ''உங்கள்பால் எனக்குச் சினமில்லை. அப்படியே செய்வேன் என்றேன்'' என்று எழுதியுள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்:

பண்டே தமிழ்ச்சங்கம் கண்ட மதுரையில் மீண்டும் ஒரு புதுச்சங்கத்தைப் பொன். பாண்டித்துரைத் தேவர் என்பார், சேதுபதி வேந்தர் துணையுடன் 1901 இல் நிறுவினார். தாம் வாழ்ந்த மாளிகையையே தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கினார். தமிழ்த்தேர்வு, தமிழ்க்கல்லூரி, அச்சகம், இதழ் வெளியீடு, ஆராய்ச்சி நூலகம், பழஞ்சுவடித் தொகுப்பு எனப் பலவகைகளாலும் தொண்டாற்றியது தமிழ்ச்சங்கம்.

தமிழ்ச்சங்க மூன்றாம் ஆண்டு விழாவில் 24.5.1904 இல் அடிகள் உரையாற்றினார். அவ்வுரை சங்க நிறுவனர் பாண்டித்துரையாரையும் தமிழாய்ந்த புலவர் பெருமக்களையும் ஒருங்கே கவர்ந்தது. இப்பொழிவு போலவே அடிகளின் தோற்றப் பொலிவும் கூட்டத்தினரை மிகக் கவர்ந்ததாம். அதனை, ''பொன்மேனி, ஒளிவீசும் தாமரையன்ன திருமுகம், நேர்க்கோடு எடுத்துச் சீவிமுடிக்கப்பட்டுப் பின்கொண்டை கொண்ட தலைமீதுள்ள சரிகைத் தலைப்பாகை, நெற்றியில் வெண்ணீறு, குங்குமத்தை இடையிற் கொண்ட சந்தனப் பொட்டு, உடம்பில் ஒளிரும் அல்பாகா கோட், 'டை'யுடன் கூடிய கழுத்துப்பட்டை, பட்டையிடப்பட்ட சரிகை மேலாடை, கால்சட்டை கால் உறையுடன் கூடிய 'பூட்ஸ்', பீடுநடை, இளவரசர் தோற்றம்'' என வரைகின்றார் அடிகளார் வரலாறு வரைந்த அவர்தம் மகனார் மறை. திருநாவுக்கரசு.

மூன்றாம் ஆண்டு விழாவில் சிறப்புற்ற அடிகளார் அடுத்த ஆண்டு விழாவுக்கும் தொடுத்து அழைக்கப்பட்டார். 24.5.1904, 25.5.1904 ஆகிய இரண்டு நாள்களிலும் 'தமிழர் நாகரிகத்தின் பழமையும் அதன் சிறப்பும்' என்பது பற்றியும், பண்டைக் காலத்தமிழர் ஆரியர்' என்பது பற்றியும் உரையாற்றினார். அடிகள் உரையில் திளைத்த புலவர்கள் தாம்தாமே பாமாலை சூட்டிப் பாராட்டினர்.

தமிழ்ச்சங்க ஐந்தாம் ஆண்டு விழாவில் 26.5.1906 ஆம் நாள் அடிகளார் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் தலைமையில் விரிவுரையாற்றினார். அவர் விரிவுரை, அவர் இயற்றிய பட்டினப் பாலையின் புத்துரை பற்றியது. அவ்வுரை நயம் ஆய்வுத்திறம் ஆகியவற்றைக் கேட்ட அவைத்தலைவர் சாமிநாதர், ''ஸ்ரீமான் வேதாசலம் பிள்ளையின் சொற்பொழிவின்பத்தில் மூழ்கிவிட்டேன். அவர் இனிய பேச்சொலிகள் என் இரண்டு காதுகளிலும் இன்ப முழக்கம் செய்கின்றன. என்ன பேசுவதென்று தெரியவில்லை என்றார். சோழவந்தான் அரசஞ் சண்முகனார் முதலிய புலவர்கள் அடிகளின் பொழிவைப் பாராட்டிப் பாட்டிசைத்தனர்.

மதுரைத் தமிழ்ச்சங்க ஏழாம் ஆண்டு விழாவில் (24.5.1908) பாண்டித்துரையார் தலைமையில் அடிகளார், ''குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி'' என்னும் தலைப்பில் அரிய ஆய்வுரை நிகழ்த்தினார். அடுத்த நாள், இறையன்பு பற்றித்தாம் ஆங்கிலத்தில் இயற்றிய பாடல்களைக் கூறி அதன் நயங்களை எடுத்துரைத்தார் அடிகளார். இவ்வாறு பொழிவுத் தொண்டு செய்ததுடன், மதுரைத் தமிழ்ச் சங்கம் புதியதோர் அகராதி தொகுக்க வேண்டும் எனத் தீர்மானித்துச் சொற்றொகுப்புப் பணி மேற்கொண்டபோது, அடிகளார் சங்க நூல்கள் சைவ சமய நூல்கள் ஆகியவற்றில் சில நூல்களின் சொற்றொகுப்புகளைச் செய்துதர இசைந்து கடமை புரிந்தார்.

சைவ சித்தாந்த மகாசமாசம்:

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் பணி செய்து வந்த காலத்தில் அடிகளார் நிறுவிய நிறுவனம் ஒன்று 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என்பதாகும். பல்வேறு சமய நூல்களையும் கற்றவர் அடிகளார். அச்சமயங்களின் வளர்ச்சிக்கு அவற்றின் அன்பர்களும் அடியவர்களும் செய்து வந்த தொண்டுகளையும் கண்கூடாக அறிந்தவர் அடிகளார். அன்றியும், 'ஆரிய சமாஜம்' 'பிரம்ம சமாஜம்' எனப் புதிய அமைப்புகள் உருவாகித் தொண்டாற்றி

வருவதையும் அறிந்தார். அவ்வகையில் தம் சைவ சமயத்திற்குத் தக்க தொண்டினைச் செய்வதற்கு வாய்ப்பாக 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என்றோர் அமைப்பினை நிறுவக் கருதினார்.

தாம் நிறுவ விரும்பும் அமைப்பை எவர் தலைமையில் நிறுவலாம் என அடிகள் எண்ணினார். அந்நாளில் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தின் ஐந்தாம் பட்டம் தவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்களின் பெருந்தக்க தலைமையே தகுதியானது என அடிகள் தீர்மானித்தார்.

சிவாச்சாரிய சுவாமிகள், பெருநாவலர்; பெரும் புலமையர்; தென் தமிழ், வடமொழி ஆகிய இரண்டன் பரப்பும் கண்டவர்; சிவக்கோலமே தவக்கோலம் எனக் கொண்டு தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் கைம்மாறு கருதாமல் காலமாரியெனக் காலமெல்லாம் நாத்தழும்பேறக் கற்பித்தவர். தமிழுலகம் 'ஞானியாரடிகள்' என்ற பெயராலே பாராட்டப் பெற்ற பெருமையர்.

7.7.1905 இல் அடிகளார் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தில் 'திருச்சிற்றம்பல விளக்கம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றினார். நிகழ்ச்சிக்கு ஞானியாரடிகளே தலைமை ஏற்றிருந்தார். அக்கூட்டத்தின் நிறைவில் ஞானியாரடிகள் முன்னிலையில் 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' நிறுவப்பட்டது. அதன் செயலாளராக அடிகளார் இருந்து கடமை புரிந்தார்.

சைவ சித்தாந்த மகாசமாசத்தின் கிளைகளாகச் சென்னையில் திருவருட் பிரகாச சபை, மெய்கண்ட சித்தாந்த சபை என்பனவும், நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் சைவ சித்தாந்த சபையும், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய நகர்களில் 'சைவ சித்தாந்த சபை'களும் தொண்டாற்றின. இவற்றிலெல்லாம் அடிகளார் சிவமணமும், தமிழ் மணமும் கமழப் பல்கால் உரையாற்றிச் சிறப்பித்தார்.

சமாசத்தின் முதல்விழா சிதம்பரத்தில் 26.12.1906 ஆம் நாள் இலங்கை சர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் தொடங்கியது. இரண்டாம் விழா பொன். பாண்டித்துரைத் தேவர் தலைமையில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 25.12.1907 ஆம் நாள் தொடங்கியது. மூன்றாம் விழா நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் நல்லசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் 25.12.1908 ஆம் நாள் தொடங்கியது. நான்காம் விழா திருச்சியில் இலங்கை சர்.ஏ. கனகசபைப் பிள்ளை அவர்கள்

தலைமையில் தொடங்கியது. ஒவ்வொரு விழாவும் மூன்று மூன்று நாள்கள் நிகழ்ந்தன. நான்கு ஆண்டுகள் அளவும் தாமே செயலராக இருந்து சமாசத்தை வளர்த்த அடிகளார், பின்னே அப்பொறுப்பில் இருந்து விடுபெற்று, வேண்டும் அளவால் காலமெல்லாம் உதவி வந்தார். சமாசத்தின் தொண்டுகள் பாராட்டத் தக்க வகையில் அமைந்தன. அத் தொண்டுகளில் தலையாய தொண்டு, சமய நூல்களை வெளியிட்ட அளவுடன் நில்லாமல், சங்க இலக்கியம் முழுவதையும் புலவர்கள் அகர வரிசையில் வெளிப்படுத்திய அரிய பதிப்புத் தொண்டாகும். அதனைச் செய்தவர் அடிகளாரின் மாணவர் ச. வையாபுரிப் பிள்ளை ஆவார்.

அடிகளார் சமாசப் பொறுப்பில் இருந்து தம் பணிச்சுமையால் ஒதுங்கினார் என்பதற்கு இல்லை. சமாசப் பணிச்சிறப்பில் பொறாமை கொண்டவர் மறைமுகச் செயற்பாடுகளே அடிகளாரை ஒதுங்கச் செய்தது என்பது அறிவுக் கடலின் ஐந்தாம் மலர் 8, 9 ஆம் இதழ் வழியால் அறிய வாய்க்கின்றது. அது:

''பண்டிதர் நாகை-வேதாசலம் பிள்ளையவர்கள் சென்ற பத்து வருஷங்களாக அல்லும் பகலும் இடைவிடாது முயன்று, இதற்கு முன் என்றும் நடவாத சைவ சித்தாந்த மகாசமாசம் என்னும் அரிய பெரிய வருஷ சபையினைத் திருவருள் வலத்தால் உற்பத்தி செய்து, அதனைச் சென்ற நான்கு வருஷங்களாக மிகவும் விமரிசையோடு நடத்தி வந்த விவரங்கள் எல்லாம் இவ்விந்திய தேசம் முழுவதிலும் உள்ள அறிஞர்கள் நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். பண்டிதரவர்களின் சைவ சித்தாந்த உணர்ச்சியினையும், சைவ சித்தாந்தத்தை எங்கும் பரவச் செய்வதற்கு அவர்கள் செய்து வரும் அற்புத முயற்சியினையும், மிகவும் இளம் பிராயத்திலே அவர்களது பிரசங்க வல்லமையையும், அவர்களின் தமிழ் இலக்கண இலக்கிய உணர்ச்சி விசேஷத்தையும், மற்ற நற்குணங்களையும் கண்டு அவர்களை அகமகிழ்ந்து புகழ்ந்து கொண்டாடாதவர்கள் இத் தென்னாட்டில் யாருமே இல்லை. இப்படிப்பட்ட இந்த ஞானச் செல்வரை எல்லோரும் புகழ்ந்து கொண்டாடுவதற்கு ஒரு திருஷ்டி பரிகாரம் வேண்டும் என்றோ, வீணர் சிலர் இப்பெருமானைக் கண்டு பொறாமை கொண்டு, இவர் செய்யும் நற்காரியங்களுக்கு இடர் செய்ய முந்தினார்கள். இப்படிப் பட்ட தீயவர்கள் சிலர் தமது காரியத்திற்கு இடர் செய்ய வந்திருக்கிறார்கள் என்பதைப் பண்டிதரவர்கள் தெரிந்தவுடனே அவர்களைப் பகைத்துக் கொள்ள மனம் இல்லாதவர்களாய் சமாசப் பிரதம காரியதரிசி

வேலையினின்றும் தம்மை நீக்கிக் கொண்டார்'' என்பது. இதனை எழுதியவர் வா. அண்ணாமலை என்பவர்.

சிவராசயோகம்:

அடிகளார் தொல்காப்பியத்தை முழுதுற வரச்செய்து ஆழங்காற்பட ஆய்ந்தவர். அதன் நெறி தமிழர் நெறி எனக் கண்டவர். அதன்படி இல்லறவாழ்வின் கடமைகளாகிய மக்கட்பேறு பெற்று, அவர்களுக்கு வேண்டும் கடமைகளைப் புரிந்து, தக்க வழிகாட்டிய பின்னர்த் தம் வாழ்வைப் பொது நலப்பணிக்கு உரிமைப்படுத்தும் வகையில் துறவு கொள்ளல் வேண்டும் என்னும் ஆர்வத்தில் இருந்தார். மனை, மனைவி, மக்கள் ஆகியவர்களைத் துறவாமல் மனத்துறவு கொண்டு கடனாற்றலே அத்துறவு ஆகும். அதற்குத் தக்க குரு ஒருவரை உள்ளுள் தேடிக் கொண்டிருந்தார் அடிகளார்.

தேடிய பொருள் நாடி வந்தது போல், குடந்தை நகரைச் சார்ந்தகோட்டையூரில், திருமூலர் வழி வந்த மெய்யுணர்வு மேலோர் 'சிவராச யோகி' இராசானந்த சுவாமி என்பார் இருக்கக் கண்டார். அவரை 21.1.1907, 22.1.1907 ஆகிய இரண்டு நாள்களும் கண்டு வணங்கினார். அடிகளின் தகுதி கண்ட இராசானந்தர் அடிகளுக்கு 'நிட்டை' கற்பித்தார். 7.6.1908ல் மீண்டும் அடிகளார் இராசானந்தரைக் கண்டு வணங்கினார். அவர் அடிகளார்க்குச் சிவராசயோகக் கலையை அறிவுறுத்தினார். அடிகளார் உள்ளம் துறவில் நாட்டம் கொண்டது. மெய்யுணர்வு வளர வளரத் துறவில் நாட்டம் செல்லுதல் இயற்கையேயாம்!

அடிகளார் உள்ளம் துறவில் சென்றாலும் அவர்தம் கல்லூரிக் கடமை, எழுத்துக்கடமை, பொழிவுக்கடமை என்பவை துறக்கத் தக்கன அல்லவே. அந்நிலையில் அக்கடமைகளையும் விடாமல் தொடர்ந்து சிறப்பாகவே ஆற்றி வந்தார்.

ஆங்கில இதழ்கள்:

1908 இல் அடிகளார் ஆங்கில இதழ் ஒன்றனைத் தொடங்கினார். அது கீழை நாட்டு மக்கள் மனவசியச் செயல்களை ஆங்கிலங் கற்ற உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் அறிந்து கொள்ளும் வகையால் வெளியிட்ட இதழாகும். அதன் பெயர் "THE ORIENTEL MYSTIC MYNA" என்பதாகும்.

திங்களுக்கு ஓரிதழாக ஓராண்டு காலம் பன்னிரண்டு இதழ்களை வெளியிட்ட அளவில் அவ்வெளியீடு நின்றது. அதன்

உறுப்பினர்கள் பிரிட்டன், பிரான்சு, செருமனி, அமெரிக்கா, ஆத்திரியா முதலிய நாடுகளிலும் இருந்தனர்.

பின்னாளில் இருதிங்களுக்கு ஓரிதழாக THE OCEAN OF WISDOM என்னும் பெயருடைய ஆங்கில இதழ் ஒன்றனை வெளியிட்ட அடிகளார் அவ்வெளியீட்டின் நோக்கத்தையும் வெளியிட்டு உள்ளார். அது ''செந்தமிழ் மொழியிலும் சைவசித்தாந்தத்திலும் பொதிந்து கிடக்கும் அரும் பெரும் பொருள்களை இவ்வுலகெங்கணுமுள்ள ஆங்கில மொழியில் எழுதி இரண்டு திங்களுக்கு ஒரு கால் ஒரு வெளியீடாகச் சென்ற ஒன்றரையாண்டுகளாக வெளியிட்டு வருவதால்'' என்று, 'முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்னும் நூன் முகவுரையில் எழுதுவதால் விளங்கும். இக்கருத்தினாலேயே அடிகளார் தாம் இயற்றிய நூற் பொருளைத் திரட்டியமைத்து நூன் முகப்பிலே, ஒவ்வொரு நூலுக்கும் ஆங்கிலத்தில் முகவுரை வரைந்தமை உணரப்படும்.

வேலையில் இருந்து விடுதலை:

அடிகளார் செய்து வந்த கல்லூரி ஆசிரியப் பணியை விடுவதற்கான சூழல் ஒன்று ஏற்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தார், ஆங்கிலமும் வடமொழியும் கட்டாயமாகப் படித்தல் வேண்டும் என்றும், தாய் மொழிப் பாடத்தை விருப்பப் பாடமாகக் கற்பிக்கலாம் என்றும் ஒரு தீர்மானம் ஆட்சிக் குழுவில் கொண்டு வந்தனர். அதில் ஆங்கிலமும், வடமொழியும் கட்டாயப் பாடம் என்பதும் மாறி, ஆங்கிலம் மட்டுமே கட்டாயப் பாடமாதல் வேண்டும் என்று முடிவு செய்தனர். ஒன்று விருப்பப் பாடம்' ஆகிய பின்னர், அதனைக்கற்க வரும் மாணவர் எண்ணிக்கை குறைந்து விடுதல் இயல்புதானே! மாணவர் எண்ணிக்கை குறைந்தால், ஆசிரியர் எண்ணிக்கை குறைக்கப் பட்டுத் தானே ஆகவேண்டும்! இந்நிலையில், அடிகளார் புரிந்த கல்லூரிப் பணியை விடுக்க நேர்ந்தது.

31.1.1911 ஆம் நாள் தம் நாட் குறிப்பிலே, மார்ச்சு 31 உடன் பணிக்காலம் முடியும் என்ற செய்தி 'துறவறம் பெறலாம்' என்ற எண்ணமுடையவனாக இருப்பினும் சிறிது கலக்கத்தைத் தந்தது என்று வரைந்துள்ள எழுத்தால், பணிவிலக்கத்தை அறியலாம். அடிகளார்க்கு இருந்த துறவு ஆர்வத்தின் இடையேயும் பதவி விலக்கம் கலக்கம் ஏற்படுத்தியது எனினும், அதுவே விரைந்து அவரைத் துறவில் செலுத்தியது என்பதும் தெளிவாகும்.

ஆசிரியப் பணிக்காலத்தில் அடிகளார் சென்னையில் அண்ணாப்பிள்ளைத் தெரு, முல்லா சாய்பு தெரு, இலிங்கிச்

செட்டித் தெரு, அரண்மனைக்காரன் தெரு ஆகியவற்றில் குடியிருந்தார். நெருக்கடியும் பரபரப்பும் மிக்க நகர வாழ்க் கையினின்றும் புறநகர் வாழ்க்கையை அடிகளார் துறவுள்ளம் விரும்பியது. அந்நாளில் அமைதியான சூழலுடையதாக விளங்கிய பல்லவபுரத்தில் (பல்லாவரம்) குடியேற அடிகள் விரும்பினார். அதனால் சாவடித் தெருவில் மனையிடம் ஒன்றனையும் 22.2.1911 இல் வாங்கியிருந்தார். ஆங்குச் சமரச சன்மார்க்க நிலையம் தோற்றுவித்தல் வேண்டும் என்னும் உள்ளுணர்வும் அடிகளார்க்கு உண்டாயிற்றுப்போலும். அதனால் 24.4.1911 ஆம் நாளே அதனைச் சென்னையிலேயே தொடங்கிவிட்டார். 1.5.1911 இல் பல்லவபுரத்தில் அடிகளார் குடியிருக்கப் புகுந்தார். அது சாவடித் தெருவில் அமைந்த வாடகை இல்லமே. அவ்வில்லம் சமரச சன்மார்க்க நிலையமாயிற்று. பின்னே தனித்தமிழ் இயக்கம் கண்ட நாளில் அது 'பொது நிலைக் கழகப்' பெயரால் பொலிந்தது.

9. பல்லவபுர வாழ்வு

சமரச சன்மார்க்கம்:

அடிகளார்க்கு, வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார் மேல் மட்டற்ற பற்றுமையுண்டு. அப்பற்றுமை வள்ளலாரின் உயிரிரக்கக் கொள்கை, சாதி சமயப் பிணக்கறியாப் பெருநெறி, கண்மூடித்தனம் போலிச் சடங்குகளை ஒழித்தல், உயிர்க்கொலை புலைப்புசிப்பு நீக்கம் என்பவை பற்றிய பற்றுமையாகும்.

அடிகளார், வள்ளளார் அருளியவை அருட்பாவே என்று வழக்காடியதும், பல்வேறு இடங்களுக்கும் சென்று மருட்பா என்ற பழித்தவர் உரை பொய்யாகச் செய்த்மையும் முன்னர் அறிந்தனவே. அப்பற்றுமையுடைய அடிகளார் வள்ளலார் தோற்றுவித்த பெயர் கொண்டே அவர் செய்த தொண்டின் வழித் தொண்டாகவே சமரச சன்மார்க்க நிலையம் கண்டார். அதுபற்றி ஞானசாகரம் ஆறாம் மலர், இதழ்கள் ஒன்று, இரண்டு ஆகியவற்றில் செய்தியும் நிலைய நோக்கங்களும் வெளிப் படுத்தப்பட்டன.

''எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் அங்கீகார மான சீவகாருணிய ஒழுக்கத்தையும் சமரச சன்மார்க்கத்தையும் பிற்காலத்தில் மிக வலியுறுத்திப் போதித்த ஆசிரியர் ஸ்ரீமத்-இராமலிங்க சுவாமிகளே ஆவார். அச்சுவாமிகள் வலியுறுத்திய அவ்விரண்டு கொள்கைகளையும் எங்கும் வலியுறுத்தி விளக்கி அன்பர்களை ஒருங்கு கூட்ட வேண்டி அச்சுவாமிகள் இட்ட பெயராலேயே 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும் இது தாபிக்கலாயிற்று. இந்நிலையத்திற்கு முன் ஆசிரியர் திருவள்ளுவ நாயனார். பின் ஆசிரியர் இராமலிங்க சுவாமிகளாவர்.

இது அந்தரங்க நிலை, பகிரங்க நிலை என்னும் இரண்டு பிரிவுகளையுடையதாகும். அந்தரங்க நிலையிற் சேர்தற்கு உரியோர் பக்குவப்பட்ட துறவிகளும் பிரமசாரிகளும் பக்குவப் பட்ட இல்லறத்தார்களும்.

குருபோதகர் சாமி வேதாசலம், சகோதரர் சீடர் உருத்திர கோடீசுவரர், சுவாமி ஜனார்த்தனம், சீனிவாஸ மூர்த்தி, அண்ணாமலை. இதன் நோக்கங்கள்:

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டும் சீவகாருணியத்தை விளக்கும் முகத்தாற் கொலை நிறுத்தல், புலாலுணவு விலக்கல். இந்நோக்கம் ஈடேறும் பொருட்டாக ஏழைப் பிராணிகளை ஆயிரம் ஆயிரமாகக் கொன்று பலியிடுவித்துச் சிறு தெய்வத் திருநாட்கள் கொண்டாடப்படும் இடங்கட்கும் வேறு முதன்மையான நாடு நகரங்கட்கும், இந்நிலையத்தில் சேர்ந்தவர்களை அனுப்புவித்து உபந்நியாசங்கள் நிகழ்வித்தல், துண்டுப் பத்திரங்கள் சிறு புத்தகங்கள் வெளியிடுதல்.

2. எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே என்று வலியுறுத்தி, அவரை அடைதற்கு அன்பு ஒன்றே வழியெனக் காட்டுதல்.

3. ஏழைகட்கும் வலியற்றவர்கட்கும் அன்னம் இடுதல், ஏழைப் பிராணிகட்குத் தீனி கொடுத்தல், எவ்வுயிரையும் கொடுமையாக நடத்துதலினின்றும் காத்தல். இந்நோக்கம் ஈடேறும் பொருட்டுச் சீவகாருணியம் வாய்ந்தவர்களின் பொருளுதவி கொண்டு பல்லாவரம் முதலான இடங்களில் அன்னசாலைகள் அறச்சாலைகள் கட்டுவித்து அறம் நடப்பித்தல்.

4. பெரும்பாலும் மருந்தில்லாமல் நோய் நீக்குதல்.

5. மேன் முயற்சிகளுக்கு அவசியமான யோகம், மந்திரம் முதலிய அப்பியாசங்களையும் கலைஞானங்களையும் ஒழுக்கங் களையும் போதித்தல். இவ்வரும் பெரு நோக்கம் நிறைவேறும் பொருட்டுத் தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் முதலான பாஷைகளின் கலைஞானங்களைச் செவ்வையாக மாணாக்கர்க்குப் போதிக்கும் பெருந்தமிழ்ச் சர்வ கலாசாலை ஒன்று அமைப்பித்து நடைபெறுவிக்கப்படும். அடிகளாரிடம் கெழுதகை அன்பு பூண்டு சிற்சில போது ஐயங்களைத் தெளிந்து கொண்ட அன்பர் பலரில் இருவர்: பாரிப் பாக்கம் புலவர்' திரு. கண்ணப்ப முதலியார், தசரத இராமசாமி நாயுடு.

இவ்விருவகை நிலையங்களிலும், சீடர்க்கும் மாணவர்க்கும் மாதந்தோறும் மந்திரம், யோகம், வசியம் முதலிய அப்பியா சங்களைப் பற்றிய பாடங்கள் கடிதமூலமாகப் போதிக்கப்படும்: அப்பாடங்களை அவர்கள் அதிரகசியமாக வைக்க வேண்டும்.

இந்நிலையத்தின் ஆதரணைக்காக அந்தரங்க சீடர் பன்னிரண்டு ரூபாவும், பகிரங்க மாணவர் ஆறு ரூபாவும் ஆண்டு ஒன்றிற்குக் காணிக்கையாகச் செலுத்துதல் வேண்டும்.

இக்கழகம் செயல் சிறக்கத் தொண்டாற்றி வரும் காலத்தில் 'பொதுநிலைக் கழகம்' என்னும் பெயரால் துண்டு வெளியீடு ஒன்று வெளி வந்தது. அது 'மறைமலையடிகளார் உரைமணிக் கோவை' என்னும் தொகுப்பு நூலில் முதல் கட்டுரையாக இடம் பெற்றது. அதனால் அருட்பெரு நோக்கமே பொது நிலைக் கழகமாகத் தோன்றிப் பணி செய்து வருதல் விளக்கப்பட்டுள்ளது.

''தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் தமக்கே உரிய பண்டைப் பேராசிரியரின் அருளுரைகளின் வழி நில்லாது, பிற்காலத்தில் இடையே புகுந்த புராணக் கதைகளின் வயப்பட்டுப் பலவகைச் சாதிப் பிரிவுகளும், பல்வகைச் சமயப் பிரிவுகளும், பல்வேறு பழக்க ஒழுக்கங்களும் உடையவராய் ஒருவரோடு ஒருவர் பெரிதும் மாறு கொண்டு அன்பு அருள் ஒழுக்கங்களை முற்றும் மறந்து, கல்வியும் ஆராய்ச்சியும் இல்லாதவர்களாய் மிகச் சீர்குலைந்து நிற்பாராயினர்.

தெய்வத் தொல்லாசிரியர்களாகிய தொல்காப்பியர், திருவள்ளுவர், நக்கீரர், மாணிக்கவாசகர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், பட்டினத்தடிகள், மெய்கண்ட தேவர் முதலாயினாரும் அவர்க்குப்பின் அப்பழைய மரபு பிழையாது தாயுமான அடிகளும், அவர்க்குப் பின் இக்காலத்தில் இராமலிங்க அடிகளும் தோன்றி எல்லா உலகத்துக்கும் எல்லா உயிர்க்கும் ஒரே முழுமுதற் கடவுள் தலைவராயிருந்து அவற்றை அசைத்தும் அறிவித்தும் வரும் அருட்பெருஞ் செயலையும், அத்தலைவராகிய தந்தைக்கு எல்லா உயிர்களும் அருமைப் பிள்ளைகளாய் இருக்கும் உண்மையையும் நெஞ்சங்கரைக்கும் செஞ்சொற் பாடல்களாற் பலகாலும் எடுத்து அறிவுறுத்தி இடையிலே கலைந்துபோன அன்பொழுக்க அருளொழுக்கங்களை மீண்டும் ஒன்று சேர்த்து நிலைபெறுத்துவாராயினர்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'

என்னும் நம் தவ ஆசிரியர் திருமூலரின் மெய்யுரையினைக் கைக்கொண்டு ஒரே முழுமுதற் கடவுளை, அன்பினால் அகங்கரைந்து உருகி வணங்கும் வணக்கமும், அதனால் உயிர்களெல்லாம் அவன் அருமை மக்களே ஆவர் என்னும் உணர்ச்சியும் கிளர்ந்து விளங்கினால் அன்றி அன்பும் அருளும்

இந்நில உலகில் நிலைபெற மாட்டா அன்றோ? இதுபற்றியே இராமலிங்க அடிகளார் சமரச சன்மார்க்க சங்கம் அல்லது பொது நிலைக்கழகம் என்பதனை வகுத்து எல்லாத் தேயத்தார்க்கும் எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாய் நின்று அருள் வெளியிலே ஆடல் புரியும் அம்பலவாணனாகிய ஒரு தனித்தலைமைக் கடவுளின் வழிபாட்டை வலியுறுத்தி, அவ்வாற்றாற் சாதிப்பிரிவு, சமயப்பிரிவு, சாதிச் செருக்கு, சமயச் செருக்கு, முதலிய பொல்லாங்குகளை அறவே ஒழித்து, மேலே காட்டிய தெய்வத் தொல்லாசிரியரின் அருளொழுக்க முறைகளை எல்லா மக்களிடையும் பரவச் செய்தற்கு அரிய பெரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து வைத்து மறைந்தனர்.

ஆனால், அவர்கள் செய்து வைத்த அருமருந்தன்ன ஏற்பாடுகளும் கூட, நாளடைவில் அறிவு அன்பு அருள் இல்லா நம் மக்களாற் பின்னும் நிலை குலைக்கப்பட்டுச் சாதி வேற்றுமை சமய வேற்றுமைகளுக்கும் அவற்றால் வரும் போராட்டங்களுக்கும் இடனாக மாற்றப்பட்டு வருவதை வடலூர் செல்லும் அறிஞர் கண்டு வருந்தா நிற்கின்றனர். இங்ஙனமாக நம் தெய்வ ஆசிரியர்கள் நம் மக்கள் முன்னேற்றத்தின் பொருட்டுக் கரை கடந்த பேரருளாற் காலங்கள் தோறும் புதுக்கி வரும் பழைய தெய்வக் கோட்பாடுகள் இனியாயினும் சிதைவுறாமல் உரம் பெற்று நின்று நம்மனோரை முன்னேற்ற வேண்டும் என்னும் இரக்க எண்ணம் கொண்டே ஆசிரியர் மறைமலையடிகள் இந்நாகரிக காலத்திற்கு ஏற்ற நாகரிக முறையில் அத்தெய்வ ஆசிரியர் கோட்பாடுகளைப் பின்னும் புதுக்கி இக்கழக வாயிலாக எங்கும் பரப்பி வருகின்றார்கள்'' என்பது அது.

துறவு:

1898 இல் அடிகளார் சென்னைக்கு வரும்போது, அவர் அன்னையார் சின்னம்மையார், துணைவியார் சவுந்தரம் அம்மையார், செல்வி சிந்தாமணி, அடிகளார் ஆகிய நால்வரைக் கொண்ட குடும்பமாக இருந்தது. *1911* இல் பல்லவ புரத்தில் குடிபுகும் போது நீலாம்பிகை, திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி, என்னும் மக்களும் அடங்கிய ஒன்பதின்மர் குடும்பமாக இருந்தது. பல்லவபுரம் புகுந்த சில மாதங்களில் திருபுரசுந்தரி பிறந்து குடும்பம் பதின்மரைக் கொண்டதாயிற்று, இந்நிலையில் தான் *27.8.1911* இல் அடிகள் துறவு மேற்கொண்டார். சைவத்துறவியர்க்குரிய காவியாடை புனைந்து கொண்டார்.

அதுவரை 'நாகை வேதாசலம் பிள்ளை' என்று வழங்கப்பட்ட பெயர், 'சுவாமி வேதாசலம்' ஆயிற்று.

தனியராக இருக்கும் ஒருவர் துறவு மேற்கொண்டால், பொருட்சிக்கல் குறைவு. பெருங்குடும்பத்தவர் ஒருவர் - அதிலும் குடும்ப வருவாயாகவே இருந்த ஒருவர் - பணி இழந்து துறவு மேற்கொண்டால் குடும்ப வாழ்வுக்கு எவ்வளவு முட்டுப் பாடாகும் என்பது எவர் எண்ணத்திலும் ஏற்படுவதேயாம். ஆனால், அடிகளார் இளந்தைப் பருவக் கல்வியே, பொருள் தேடும் வேலைக்காகக் கற்ற கல்வி அன்றாம். அவர் செய்த வேலைகள் தற்செயலாக வாய்த்த வாய்ப்பால் கிட்டியவையேயாம். அடிகளார் அவ்வேலைகளே தஞ்சம் என என்றும் இருந்தாரும் அல்லர். நூல் இயற்றல் பொழிவு ஆற்றல், மாதிகை வெளியிடல் என உரிமையமைந்ததும் தடைப்பாடு இல்லாமல் இயல்வதுமாம் அறிவார்ந்த பணிகளுக்குத் தம்மை என்றும் உரியவராக ஆக்கிக் கொண்டிருந்தார்.

அடிகளார் எழுத்தைப் போலவே, சொல்லும் திறமும் கவர்ச்சி மிக்கதாகவே இருந்தது. அவர் வழங்கும் கருத்துகளோ அறிவியல் அடித்தளத்தில் இருந்து வெளிப்பட்டவையும், சீர்திருத்தம் கொண்டவையும், பகுத்தறிவுக்கு ஏற்றவையும், உலக ஒருமைப்பாட்டைத் தழுவியவையும், உயிர் நேயம் உடையவையும் ஆகியவை. இவையெல்லாம் துறவுக்கோல உடையில் இருந்தும், ஒழுக்கத்தில் இருந்தும் வெளிப்படும்போது, பொது மக்களுக்கும் சிவனடியார்களுக்கும் பெரும் பற்றுதலாக விளங்கலாயின. அடிகளாரை அழைத்துத் தங்கள் இல்லத்தில் விருந்து செய்து காணிக்கை படைத்தலிலும், தங்கள் அவைக்கு அழைத்துப் பெருமை கொள்வதிலும் திருக்கோயில் விழாக்களில் கலந்து கொள்ளச் செய்து பொலிவு பெறுதலிலும் பேரார்வம் கொண்டனர். அதனால் அடிகளார் கொண்ட துறவு அவர்க்கும் அவரைச் சார்ந்த குடும்பத்திற்கும் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் சேர்த்ததே என்பது கண்கூடான செய்தி. இத்தகைய தகுதியும் திறமும் இல்லாத ஒருவர் துறவு மேற்கொண்டு வருவாய் இழந்து குடும்பத்தைத் தவிக்க விட்டிருந்தால் அத்துறவு பழிப்புக்கு உரியதே ஆகியிருக்கும்.

அடிகளார் வெளியூர் விழாக்களுக்குத் தலைமை தாங்கச் செல்லுங்கால் மேற்கொண்ட கடைப்பிடிகள் எவை என்பதை அவர் மகனார் மறை திருநாவுக்கரசு வரைகின்றார்:

''அடிகள் தம்மைத் தலைமையாக அழைக்கும் கழகத்தார்க்கு முதலில் தாம் புரிந்து வரும் தமிழ்த் தொண்டு சிவத்தொண்டுகளை விரித்துக் கூறி, அதனால் மக்கள் பெறும் வாழ்க்கை நலங்களை எடுத்துரைப்பார். தாம் வேறு வகையில் வருவாய் உடையவர் அல்லர் என்றும், நற்செயல்கள் நிறைவுற நாடுபயனுற ஆராய்ச்சிக்காக நூல்கள் வாங்கவும் நூல்கள் எழுதவும் அவற்றை அச்சிடவும் இத்தொண்டுகள் புரியும் தாமும் தம் குடும்பத்தவரும் வாழவும் தாம் தலைமை தாங்கும் முயற்சிக்காக முந்நூறு ரூபாய்கள் முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும் என்றும், இரண்டாம் வகுப்புக் கட்டணமும், தமக்கு உதவியாக வரும் இருவர்க்கு மூன்றாம் வகுப்புக் கட்டணமும் பின்பு அனுப்பப்படல் வேண்டும் என்றும் எழுதுவார்.

அத்துடன், விழா நாட்கள் மூன்றிலும் அதற்கு முன்பின்னாக நான்கு நாட்களிலும் தாம் இருப்பதற்கு வசதியான தனி மாளிகையும், சமையலாட்களும் ஊழியரும் தேவை என்றும் இவ்வேழு நாட்களிலும் தமக்கும் தம்மைச் சார்ந்துள்ளார்க்கும் வேண்டிய உயர்வகை அரிசி, நெய், பால், தயிர், வாதுமைப் பருப்பு, துவரம் பருப்பு, உழுத்தம் பருப்பு, காய்கறிகள், பழுப்புச் சர்க்கரை, பிறபண்டங்கள் இவை என்றும் நீண்ட பட்டியல் ஒன்றையும் விடுப்பார். இவ்வேற்பாடுகளில் பேரம் பேச இணங்கார். அப்படிப்பேசுவோர் அழைப்பினை மறுத்துவிடுவார்.'' அடிகள் தாம் அவ்வாறு கண்டிப்பாக இருக்க நேர்ந்த காரணத்தையும் வெளிப்படவே கூறியுள்ளார்.

'இருபது ஆயிரம் ரூபாய்களுக்கு நூல்கள் வாங்கி ஆராய்ந்து வருகின்றேன். எனது நூல்களைஅச்சிட ஆயிரக் கணக்கில் செலவிடுகின்றேன். குறைந்த தொகைக்காக உங்கள் விழாவுக்கு வந்தால் என் முயற்சியினாலாம் வருவாயும் குறையும். என் வாழ்க்கைச் செலவுக்கும் யான் என் செய்வேன்? இந்நாட்டில் என்போன்ற ஆராய்ச்சியாளர்க்கு அரசாங்க உதவி ஒன்றும் இல்லை. செல்வர் பலர் பாழ்வழிகளிலும் ஆடம்பர ஆரவாரத் தந்நல வழிகளிலும் பணத்தை வாரி வாரி இறைக்கின்றனர். ஒரு சிலரும் விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலரும் ஏழை மெய்யன்பர்கள் சிலருமே என் அறிவுப் பணிக்கு உதவி வருகின்றீர்கள். இவ்வுதவியும் குறைந்தால் என்பணிகள் தமிழகத்திற்கு எவ்வாறு கிடைக்கும்?

மேலைநாடுகளில் கற்றவர்கட்கு ஏராளமாய் உதவுகின்றனர். அவர்கள் எழுதிய நூல்களை ஆயிரக்கணக்கானவர்கள் வாங்கிப்

படிக்கின்றனர். அதனால் புலவர்கள் தம் வாழ்க்கையைத் துன்பமின்றி இனிதே நடத்துகின்றனர். அதனால் அரிய பல நூல்களை எழுதுகின்றனர். இப்பாழ்த்த தமிழ்நாட்டில் அப்படி எல்லாம் உதவிகள் ஒன்றும் இல்லையே! ஏழை மக்களும் பயனற்ற பலவழிகளில் பணத்தைப் பாழாக்குகின்றனரே! அவர்கள் சிறிது சிறிது கொடுத்தாலும் என் தொண்டு மேலும் பயன் தருமே' என்று கேட்போர்கள் மனங்கரைந்துருகப் பேசுவார்'' என்கிறார்.

21.6.1909 இல் அடிகளார் எழுதிய அஞ்சல் ஒன்றில், ''யான் சென்ற 35 நாட்களாகத் தஞ்சை, நாகை முதலிய இடங்களுக்குச் 'சைவ சித்தாந்த மகாசமாஜ' வேனிற்கால உபந்நியாசங்கள் செய்யப் போயிருந்து, நேற்றுத்தான் சென்னைக்கு வந்து தங்கள் கடிதத்தைக் கண்டேன்'' என்று எழுதுகின்றார். இனி, வேனில் விடுமுறை, விழாக்கால விடுமுறை என்பது வேண்டுவது இல்லையே! அடிகளார் தம் விருப்பம்போல் எந்த நாளிலும் எங்கும் செல்லும் வாய்ப்புப் பெற்றுள்ளார் அல்லரோ! அதனால், தொடர் சுற்றுக்கும் அவர் கல்லூரி வேலைத்துறவே, வெற்றித் துறவு ஆக்கிற்று எனலாம்.

தென்னகச் செலவு:

அடிகளார் செய்யக் கருதியிருந்த தொண்டே, தொழிலாக வாய்ப்பது போல், சைவ சித்தாந்த மகாசமாசப் பேச்சாளராக அமர்த்தப் பெற்றார். அதன் அந்நாள் செயலாளர் ஆதிமூல முதலியார் ஏற்பாட்டின்படி அவருடன் அடிகளார் திருக்கோயில் வழிபாட்டு உலா மேற்கொண்டார். கரும்பு தின்னக் கூலியும் வாய்ப்பது போல, ஆங்காங்குச் சொற்பொழிவுகளும் செய்தார்.

திருச்சி மதுரைத் திருக்கோயில்களை வழிபாடு செய்து இராமநாதபுரத்தை அடைந்தார் அடிகள். சேதுபதிகளாலும், மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித்துரையாலும் சிறப்பிக்கப் பெற்றார். ஆங்குச் 'சைவ சித்தாந்தம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு செய்தார் (16.10.1911). பரமக்குடியில் அன்பு என்னும் பொருளில் உரையாற்றினார் (24.10.1911) மதுரைக்கு மீளவும் வந்து மதுரையில் திருஞானசம்பந்தம் என்னும் பொருளில் சிறப்புரையாற்றினார். (27.10.1911) திருவண்ணாமலை சக்தி விலாச மண்டபத்தில் 'சமரச சன்மார்க்கம்' என்னும் பொருளில் உரையாற்றினார் (12.12.1911). வேலூர் தோப்பாசாமி மடத்தில் வேதாந்தமும் சித்தாந்தமும் என்னும் தலைப்பில் பேருரையாற்றினார். கோயில்பட்டி பத்திவிளை கழகத்தில் 'சைவ

சித்தாந்தத்தின் முடிவு' என்னும் பொருளில் பொழிந்தார். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 28 ஆம் ஆண்டு விழா அடிகளார் தலைமையில் நிகழ்ந்தது. அடிகளார் தம் தலைமைப் பேருரையில் உலக மதமும் சமரச சன்மார்க்கமும் என்பது பற்றிச் சீருரையாற்றினார். (17.12.1911 - 19.12.1911) இவை ஒரு சுற்றில் நிகழ்ந்தனவாகும். இவ்வாறு பல ஆண்டுகள் பலமுறை சுற்றியுள்ளார். சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்துள்ளார்.

வடநாட்டுச் செலவு:

தென்னாட்டில் பலமுறை சுற்றிச் சிவப்பயிர் வளர்த்த அடிகளாரை பூரி சகந்நாதத்தில் கூட இருந்து இந்து சமய மகாசபைக்குச் சென்று உரையாற்றுமாறு தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினர் தம் சார்பாளராக விடுத்தனர்.

21.3.1913 இல் அடிகள் வடநாட்டுச் சுற்றுலாவை மேற்கொண்டார். 23 ஆம் நாள் விசயவாடாவிற்கும், 27 ஆம் நாள் தவளேசுவரத்திற்கும் 30 ஆம் நாள் பூரி சகந்நாதத்திற்கும் சென்றார். திட்டமிட்டபடி அங்கு மாநாடு நிகழவில்லை. ஆகவே தம் சுற்றுலாவைத் தொடர்ந்து 1.4.1913 இல் புவனேசுவரம் அடைந்தார். எழில்மிக்க திருக்கோயில்கள் 300க்கு மேலும் கொண்ட அந்நகரில் மூன்று நாள்கள் தங்கி வழிபட்டு 4.4.1913 இல் கல்கத்தாவை அடைந்தார்.

7.4.1913 இல் பேலூர் மடத்திற்கும் தட்சணேசுவரத்திற்கும் சென்று வழிபாடு செய்தார். இராமகிருட்டிணர் மேலும், விவேகானந்தர் மேலும் மட்டற்ற பற்றுடைய அடிகளுக்கு அவ்விடங்கள் மிகப் பேரின்பம் செய்தன. கல்கத்தாவில் 'திருஞானசம்பந்தர்' என ஆங்கிலப் பொழிவு ஒன்றும் ஆற்றினார். 4.5.1913 இல் கல்கத்தாவில் 'சன்மார்க்க சபை' ஒன்றனை நிறுவினார்.

கல்கத்தாவில் இருந்தபோது ஒருநாள் இமயம் சார்ந்த தார்சிலிங் மலையைக் காண்பதற்காகத் தொடர் வண்டியில் சென்றார். கடல் மட்டத்திற்கு 6400 அடி உயரத்தில் அமைந்தது அவ்விடம். அடிகள் அவ்விடத்தை மாலைப் பொழுதில் அடைந் தார். குளிர் மிகுந்தது; இருள் சூழ்ந்தது. அடிகள் எதிர்பார்த்தவர் வந்திலர். என் செய்வார்? இறைவனை எண்ணி உருகினார். இறைவனே தோன்றாத் துணையாய் உதவியது போல் உலாவுவதற்கு வந்த இருவர் அடிகளைக் கண்டு நிலைமையை அறிந்து கொண்டனர். தம்மோடு அழைத்துச் சென்றனர்.

எல்லா வாய்ப்புகளையும் கொண்ட பெரிய மாளிகை ஒன்றில் அடிகளைத் தங்கச் செய்து அளவளாவி மகிழ்ந்தனர். அவர்கள் அடிகளின் புலமையை அறிந்த அளவில், அறிவுடையார் பலர் கூடி, பல்வேறு பொருள்கள் பற்றி ஆய்ந்தனர். வேதம், வேதாந்தம், இந்துமதம், மெய்யியல், இலக்கியம், அடிகள் வரலாறு ஆகியன பலவும் பற்றி வினாவினர். அடிகளார் ஆங்கிலத்தில் உரையாற்றியதுடன், வடமொழி மேற்கோள்களையும் இசையுறக் காட்டினார். வந்தவர்கள் அனைவரும் அரச மரபினர். அவர்கள் அடிகளின் துறவையும் அறிவுப் பரப்பையும் உணர்ந்து அடிகளைத் தொட்டுத் தொட்டு வணங்கிச் சிறப்புச் செய்தனர். நான்கு நாள்கள் அங்கே தங்கி இயற்கை இறை இன்பம் துய்த்தார் அடிகளார்.

பின்னர்க் காசிக்குச் சென்று ஒரு கிழமை தங்கினார் அடிகளார். கங்கையில் நீராடி, விசுவநாதரைத் தாமே முழுக்காட்டி வழிபட்டுத் திளைத்தார். ஒருநாள் அன்னிபெசண்டு அம்மையார் ஆற்றிய உரை ஒன்றனைக் கேட்டார். பின்னர் பிரயாகைக்கு வந்தார். கங்கை யமுனை சரச்சுவதியாகிய மூன்று ஆறுகள் கூடுமிடத்து நீராடி இன்புற்றார். அதன்பின் அரித்துவாரம் சென்று பன்னிரண்டு நாள்கள் தங்கினார். 'உலகமதம்' என்னும் பொருளில் ஓர் ஆங்கிலக் கட்டுரை வரைந்தார். குகைக்கோயில், பிரமகுண்டம், ரிசிமூலம் முதலிய இடங்களைக் கண்டார். அங்கிருக்கும் நாளில் அறிமுகமான பலதேவ்சிங் என்பவர் அடிகளைத் தம் 'தேராதூன்' மாளிகைக்கு அழைத்துச் சென்று விருந்தோம்பினார். இமயச் சாரலில் காணவிரும்பிய இடங்களையெல்லாம் கண்டார். 15.6.1913 இல் தில்லிமாநகர் சேர்ந்தார்.இராமச் சந்திரவர்மா என்னும் பஞ்சாபிய இளைஞர் அடிகள் மேல் பேரன்பு கொண்டார். தில்லியில் காண வேண்டும் இடங்களையெல்லாம் காட்டி ஒன்றி உடனானார். பின்னர் அவரே ஆக்ரா நகர் வரை வந்து, தாசுமாலையும் காட்டிப் பிரிவரிய உணர்வில் பிரிந்தார். பின்னர் அடிகள் பம்பாய் எய்தினார். அங்குக் காண்பன கண்டு களித்துச் செகந்திராபாத் சேர்ந்தார். அங்கிருந்த அன்பர் ஏகாம்பர முதலியார் பேரன்பில் திளைத்ததுடன் 'அன்பு' 'ஆத்ம லட்சணம்' 'கோயில் வணக்கம்' என்னும் பொருள்களில் சொற்பொழிவும் ஆற்றினார். அந்நகர்க்கு அணித்தான போலவரத்திற்கு அடிகளின் நண்பர் வேதாசல முதலியார் என்பார் அழைத்துச் சென்றார். ''சுந்தரர், மாணிக்கவாசகர்'' ''திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர்'' என்னும் பொருள்களில் உரை நிகழ்த்தினார். ஆங்கிருந்து சென்னைக்கு 11.7.1913 இல் வந்து

சேர்ந்தார். 20.7.1913 இல் மயிலாப்பூர் இரானடே மண்டபத்தில் வடநாடு சென்று திரும்பிய அடிகளார்க்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது.

''காசுமீரம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தியா ஒரு நாடு. இதைச் சைவ வைணவ சமயிகளும் தமிழர்களும் மறத்தலாகாது. வடநாட்டில் நம் சிவவழிபாடு மாண்புடன் போற்றப்படுவது நமக்குப் பெருமையும் வலிமையும் தருவதாகும். நம் சமயங்கட்குப் பிற நாட்டவரால் தமிழ்நாட்டில் ஊறுநேர்ந்தால் வடவரும் உயிர் கொடுத்துப் போராடி நம் சமயங்களையும் கோயில்களையும் பாதுகாப்பர். சைவம் என்று நாம் கருதுகையில் தமிழ்நாட்டை மட்டும் கருதலாகாது; இந்தியா முழுவதையுமே கருத வேண்டும்'' என்றும், ''வடவர்க்கு நம் சைவசித்தாந்த உண்மைகள் தெரியா. நாயன்மார்கள் அருமை பெருமைகளை அவர்கள் அறியார். திருமுறைகளின் மாண்பை உணர்ந்திலர். இவற்றை அவர்கள் அறியுமாறு தமிழ் மக்களாகிய நாம் அங்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றின் - நூல்கள் வரைந்து பரப்பின் - நற்பயன் உண்டாம்'' என்றும் அடிகளார் தம் வடநாட்டுச் செலவின் பின் ஆர்வந் ததும்பக் கூறியதாக மறை. திருநாவுக்கரசு கூறுதல் அறியத்தக்கதாம். (மறைமலையடிகள் வரலாறு 195-6).

இலங்கைச் செலவு:

அடிகளார் தம் தந்தையாரை இளமையிலேயே இழந்தவர் ஆயினும், அருமை அன்னையார் சின்னம்மையார் நீடு வாழும் பேற்றைப் பெற்று விளங்கினார். என்றும் தம் இனிய மகனாரின் பேணுதலில் சிறக்கும் பேறும் பெற்றார். அவர் தம் 75 ஆம் வயதில், 8.12.1913 ஆம் நாள் இயற்கை எய்தினார். அடிகள் துறவியர் ஆயினும், அன்னை முதியர் ஆயினும், அவர் தம்மை ஈன்ற தாயார் அல்லரோ! அவ்வருத்தத்தின் ஊடேயும், அன்பு வடிவாம் அன்னையார் மறைவின் போது அருகே இருந்து செய்யும் கடமைகளையெல்லாம் சீராகச் செய்விக்க வாய்த்தது என்னும் நிறைவு அடிகளுக்கு இருந்தது. அந்நிகழ்வுக்கு முன்னரே அடிகளார் கொழும்பு மாநகர்க்கு அழைக்கப்பட்டிருந்தார். அச்செலவை அடிகளார் மேற்கொள்ள வேண்டியவரானார்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆண்டு விழாப் பொழிவு அடிகளை விரும்பியிருந்தது. அதனை நிறைவித்து 7.1.1914 இல் அடிகள் கொழும்புத்துறையை அடைந்தார்.

அடிகளாரைக் கொழும்புக்கு அழைத்தவர், அடிகளாரைக் கண்டறிந்தார் அல்லர்: கேட்டறிந்தவரே; அவரும் முதியர் அல்லர்; இளைஞரே; செல்வரும் அல்லர்; ஒரு கடையில் ஊழியம் செய்தவரே. ஆர்வம் இருந்தால் எதுதான் நிகழாது? அடிகளாரைக் கொழும்புக்கு அழைத்தவர் திருவரங்கம் என்பார். அவரே பின்னாளில், 'திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக'த்தை நிறுவிய திருவரங்கனார் ஆவர்.

கொழும்பில் 'திருஞானசம்பந்தர்' என்னும் தலைப்பில் தம் முதற் சொற்பொழிவை ஆற்றினார். இரண்டாம் சொற்பொழிவு 'சிவலிங்கம்' பற்றியது. அதன் கருத்தை மீளவும் கேட்டுத் திளைக்க விரும்பிய அன்பர்களின் ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் இருமுறை அத்தலைப்பில் பேசினார். விவேகானந்தர் சபையில், 'வேதாந்த சித்தாந்த சமரசம்' என்னும் தலைப்பிலும், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் விருப்பப்படி 'ஆத்ம லட்சணம்' என்னும் தலைப்பிலும் உரையாற்றினார். மேலும், 'கொல்லாமை' 'உயிர்களிடத்தன்பு' என்னும் தலைப்புகளிலும் பொழிந்தார்.

சமரச சன்மார்க்க சபை ஒன்று 27.2.1914 இல் கொழும்பு நகரில் நிறுவப்பட்டது. அதில் 1.3.1914 ஆம் நாள் அடிகளார் 'சமரச சன்மார்க்கம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். மாத்தளையில் 'இந்துமதம்' 'அன்பு' 'சிவலிங்கம்' என்னும் தலைப்புகளில் பேசினார். திருவரங்கனாரின் இவ்வழைப்பு அடிகளார்க்குப் பெரும் கிளர்ச்சியைத் தந்தது. அவர், தாம் வாங்கிய மனையிடத்தில் மாளிகை எழும்பிவிடும் என்னும் நம்பிக்கையைத் தந்தது, ஆங்குத் தண்டித் தரப்பட்ட காணிக்கை ரூபா 1435 ஆகும்.

கொழும்பில் இருந்து அநுராதபுரம் தலைமன்னார் திருக்கேத்தீசுவரம் முதலிய இடங்களுக்குச் சென்று கப்பலில் புறப்பட்டு இராமேசுவரத்தை அடைந்து 25.3.1914 இல் பல்லவபுரம் எய்தினார்.

1914 இல் தொடர்ந்து நெல்லை, நீலமலை, தேவகோட்டை எனப்பல நகரங்களுக்குச் சென்று சிறந்த உரையாற்றினார். அடிகளின் சுற்றுப்பணியும், மனைகட்டும் பணியும் நூல்வெளியீடு இதழ் வெளியீடு ஆகியவற்றுக்குத் தடையாய் அமைந்தன. இவற்றையும் அடிகளார் வேண்டுகையையும் ஞானசாகரம் ஏழாம்பதும அறிக்கைகளால் அறியலாம்.

''சமரச சன்மார்க்க நிலையத்திற்கு ஒரு சிறந்த திருமடம் சுகபூமியாகிய பல்லாவரத்தின்கண் அழகிய ஓர் ஏரிக்கரையின் மேல் அமைக்கப் பெற்று வருகின்றது. இதுவரையில் இதற்கு நாலாயிரத்து ஐந்நூறு ரூபா செலவாகியிருக்கிறது. இக்கட்டிடம் அமைக்கப்பட்டவுடன் பதினாயிரம் ரூபா பெறும் ஒரு புத்தகசாலை இதன்கண் வைக்கப்படும். அதன்பின் ஓர் அச்சுக்கூடம் அமைக்க ஏற்பாடாகும். இவ்வரும்பெருந் தன்மங்களின் மேன்மை உணர்ந்து உளங்கனிந்து இவற்றிற்குப் பொருளுதவி செய்யும் மேன்மக்களின் உதவிச் செயல் நல்லோரால் என்றும் நினைவு கூறத்தக்க நன்மைகளை விளைவிக்கும். இங்ஙனம் உதவி செய்யும் மேன்மக்களின் பெயர் முதலிய விவரங்கள் பின்னே வெளியிடப்படும்'' என்பதும்,

''சென்ற மூன்று வருடங்களாக வடக்கே இமயமலை வரையிலும் தெற்கே இலங்கை வரையிலும் சென்று, இவ்விந்திய தேசத்தில் பிரதான இடங்கள் பலவற்றிலும் ஞான விஷயங்களைப் பற்றி, யான் ஆங்கிலத்திலும் தமிழிலும் உபந்நியாசங்கள் செய்து கொண்டிருந்தமையால், நமது ஞான சாகரம் பத்திரிகையை ஒழுங்காக வெளியிடக் கூடாமல் போயிற்று. யான் பல்லவபுரத்தில் இல்லாத சமயங்களில் பத்திரிகை வேலையைக் கவனித்து நடத்தத் தக்கவர்களையும் அதற்கு வேண்டிய சாதனங்களையும் தேடி வைக்கலாம் என்றால், அதற்கு மிகுந்த பொருள் வேண்டும். அவ்வளவு பொருளுக்கு வருவாய் இல்லாமையாலும் அப்பொருளைத் தந்து உதவி செய்வார் இல்லாமையாலும் ஞான சாகரத்தை ஒழுங்காக வெளியிடக் கூடவில்லை. இனி, ஏழாம் பதுமம் முதற்கொண்டு ஞானசாகரம் ஒழுங்காக வெளிவருதற் பொருட்டுச் சிற்சில ஏற்பாடுகள் என்னால் இயன்ற வரையில் செய்து வருகின்றேன்.

நமது சமரச சன்மார்க்க நிலையத்திற்கு ஓர் அழகிய கட்டடம் பல்லவபுரத்தின்கண் அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கு இதுவரையில் நாலாயிரத்து ஐந்நூறு ரூபா வரையிற் செலவாகியிருக்கிறது. இன்னும் இரண்டாயிர ரூபாவில் அது நன்கு அமைக்கப்படும். யான் வெளியிடக் கருதியிருக்கின்ற வேதங்கள், உபநிடதங்கள், வேதாந்த சூத்திரம் முதலியவற்றின் தமிழ் மொழி பெயர்ப்புக்களையும், சில ஆங்கில நூல்களையும், பல தமிழ் நூல்களையும், ஞானசாகரத்தையும் பதிப்பதற்காக ஓர் அச்சுக் கூடமும் இங்கே திறப்பிக்க முயன்று வருகின்றேன். அவையெல்லாம் உங்களைப் போன்ற நல்லன்பர்களின்

உதவியாலும், திருவருட்டுணையாலும் விரைவில் ஒழுங்குபடும் என்பது திண்ணம்.

யான் செய்து வரும் இச்சிறு முயற்சிகளுக்குப் பலவகையில் உதவி புரிந்துவரும் அன்பர்களின் பெயர்களும் பிறவும் பின்னர் பத்திரிகையின் புற இதழ்களில் வெளியிடுவேன். எல்லாம் வல்ல நம் ஆண்டவன் திருவருளால் நாம் செய்துவரும் நன்முயற்சிகளெல்லாம் நன்கு நிறைவேறுவனவாக''.

5 ஏப்ரல் 1915 இங்ஙனம்
சமரச சன்மார்க்க நிலையம் உங்களன்புள்ள
பல்லாவரம் வேதாசலம்

என்பவை அவை.

அச்சகம் அமைத்தல்:

அடிகளாரின் ஆர்வமும் எண்ணமும் நிறைவேறினவா எனின் நிறைவேறிய செய்தியையும் அவரே எழுதுகிறார். கொழும்புக்குத் தம்மை அழைத்துப் பெருந்தொகை தண்டித் தந்ததுடன் அச்சகம் அமைப்பதற்கெனவும் பெருந்தக்க செந்திலாறுமுகம்பிள்ளை, பெரிய நாயகம் பிள்ளை முதலியவர்களிடமும் பிறரிடமும் பெருந்தொகை திரட்டி வழங்கினார். இதனைச் ''செய்யாமற் செய்த உதவி''யாகப் பாராட்டினார் அடிகளார்.

இனி அடிகளார் வரைந்தபடி அச்சகத் திறப்பு விழாச் செய்தி வருமாறு:

''நமக்கே சொந்தமான ஓர் அச்சுக்கூடம் திறக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக உள்ளத்திற் கொண்டிருந்த பெருவிருப்பத்தை, எல்லா நலத்திற்கும் உறைவிடமான நம் ஆண்டவன் திருவருளும், அவ்வருள்வழி நிற்பவரான அன்பர் ஸ்ரீமான் வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் நிறைவேற்றிச் செய்த பேருதவியினால் சாலிவாகன சகம் 1838 நளவருடம் கார்த்திகை மாதம் 26ஆம் தேதி (12.12.1916) புதன்கிழமை காலையில் எழரைமணிக்குப் பின் எட்டுமணிக்குள்ளாகப் பல்லாவரம் நமது 'சமரச சன்மார்க்க நிலைய'த்தின்கண் நமக்கே சொந்தமான 'டி.எம்' என்னும் பெயர்வாய்ந்த நம் அச்சுக்கூடம் நிலைபெறுத்தப்பட்டுச் சைவ மங்கலக் கிரியைகளோடு திறக்கப்படலாயிற்று.

''நம் அன்பர்களான சென்னை வெஸ்லி காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும், சென்னை முத்தியாலுப் பேட்டை ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களும் நமக்காக அழைப்புக்கள் அனுப்பி, உள்ளூர் வெளியூர்களிலுள்ள அன்பர்கள் பலரை வருவித்து உபசரித்தார்கள். அன்று காலையில் மங்கல வாத்திய முழக்கத் தோடும் நமது அச்சுக்கூடத் திறப்புக் கொண்டாட்டம் துவங்கியது. தேவார திருவாசகங்கள் பண்ணுடன் ஓதியபின், பண்டிதர் ஸ்ரீமான் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் எழுந்து, இவ்வச்சுக்கூடம் திறப்பிக்கும் நோக்கத்தைப் பற்றியும் அதன் ஆக்கத்தைப் பற்றியும் சிறிது நேரம் இனிமையாக உபந்நியசித்து, ஆதிசைவக் குருக்கள் திறப்புக் கிரியைகளைத் துவங்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அங்ஙனமே குருக்கள் மங்கலக் கிரியைகளைத் துவங்கி நடத்தி, எல்லோருமாக அச்சுக்கூடத்தைத் திறப்பித்து, அச்சு இயந்திரத்தையும் இயக்குவித்தனர்.

அதன்பின் ஸ்ரீமான் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பி.ஏ., எல்.டி., நம்மவர்க்குரிய கடமைகளைப் பற்றி அழகாக உடந்நியசித்தனர். அதன்பின் ஸ்ரீமான். மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் அப்போதே நமது அச்சியந்திரத்திற் பதிப்பிட்டு வழங்கப்பட்ட பத்திரத்தினுள்ள தேவாரச் செய்யுட்கள் திருக்குறட் செய்யுட்களிலுள்ள பொருள்களை விளக்கமாக எடுத்து நன்கு உபந்நியசித்தனர். அதன்பின் நமது அச்சுக்கூட மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் எல்லோர்க்கும் வந்தனமும் நன்றியறிவும் கூறினார்கள். எல்லோர்க்கும் பழம், சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டன. வெளியூர்களில் இருந்து வந்த நண்பர்கள் ஏறக்குறைய நூறு பெயர்க்கு உணவளிக்கப்பட்டது. உள்ளூரில் ஏழை எளியவர்க்கு மாத்திரம் உணவு கொடுக்கப்பட்டது'' என்பது அது.

10. தனித்தமிழ் இயக்கம்

அச்சகம் திறக்கப்பட்ட 1916 ஆம் ஆண்டு மற்றொரு தனிச்சிறப்புக்குரிய ஆண்டுமாகும். அவ்வாண்டு, அடிகளார் தனி ஒருவரே எனினும் 'அவர் தனி ஒருவர் அல்லர்; அவர் ஓர் இயக்கம்' என்பதை நாடு அறிந்து கொள்ளச் செய்த நல்ல ஆண்டாகும். அவ்வாண்டுதான் அடிகளாரைத் 'தனித்தமிழ்த் தந்தை' என்று சிறப்பித்துப் பாராட்டும் சீர்மையை வழங்கிய ஆண்டாகும்.

அடிகளார் சென்னைக்கு வந்த பின்னே பிறந்த தலைமகள் நீலாம்பிகை ஆவர். அவர் தொடக்கப்பள்ளியளவிலேயே படிப்பை நிறுத்தியவர். ஆனாலும் தம் தவத் தந்தையாரையே பல்கலைக் கழகமாகக் கொண்டு கற்பனவெல்லாம் வீட்டில் இருந்தபடியே கற்றவர். தமிழ் இலக்கிய இலக்கண சமய நூல்களோடு ஆங்கிலம் வடமொழியும் கற்று வந்தார். அடிகளார் மக்களுள், அவரைப் போலவே பல்கலைத் திறமும் எழுத்தாற்றலும் பெற்று விளங்கிவந்தார். அதனால், அடிகளார்க்கு அவர் மேல் விஞ்சிய அன்பு திகழ்ந்தது. அன்றியும் அடிகளார் பிற மாணவர்க்குக் கற்பிக்கும் பாடங்களையும் ஒதுங்கியிருந்து கேட்டு உள்ளங் கொள்ளும் வாய்ப்பும் பெற்றிருந்தார். பத்திமை, இசைப் புலமை ஆகியவற்றிலும் பெற்றோரும் உடன்பிறந்தாரும் பாராட்ட வளர்ந்து வந்தார். அந் நீலாம்பிகையாரும் அடிகளாரும் ஒரு நாள் மாலைப் பொழுதில் தம் மாளிகை முகப்பில் அமைந்திருந்த பூந்தோட்டத்தின் ஊடு உலாவிக் கொண்டு மெல்லெனப் பண்ணிசை பாடினர். அப்பொழுது பாடிய பாடல்களுள் ஒன்று வள்ளலார் இராமலிங்க அடிகள் பாடிய பாடலாகும். அது,

"பெற்றதாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுதாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள்நின் றிமைப்பது மறந்தாலும்
நற்ற வந்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே"

என்பது. இதனைப் பாடிய அடிகளார் பாடிய அளவில் அமையாமல் ''நீலா! இப்பாடலில், 'தேகம் என்றொரு வடசொல் வந்துளது. அவ்வொன்றனையும் நீக்கி அவ்விடத்தில் 'யாக்கை' என்னும் தமிழ்ச்சொல் பெய்யப் பெற்றிருக்குமானால் இச்செய்யுளின் ஓசையின்பம் எவ்வளவோ மேம்பட்டதாக இருந்திருக்கும்! பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழின் இனிமை குறைகின்றது. அன்றியும், நாளடைவில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலைபெற்று அச் சொற்களுக்கு நேரே வழங்கி வந்த நம் அருமைத் தமிழ்ச் சொற்கள் மறைந்துவிடுகின்றன'' என்றார்.

அதனைக் கேட்ட நீலாம்பிகையார் எதிர்பாரா வகையில் ''அப்படியானால் நாம் அயல் மொழிச் சொற்களை விலக்கித் தனித்தமிழையே பேச்சிலும் எழுத்திலும் போற்றுதல் வேண்டும். அவற்றுக்கான முயற்சிகளைக் கைவிடுதல் ஆகாது'' என்றார்.

ஆழத்தில் ஆழமாகப் பதிந்திருந்த தனித்தமிழ் வித்து, அப்பொழுது முளைவிட ''அப்படியே செய்வோம்'' என்று அடிகளார் கூறினார். இவ்வாறு அன்புத் தந்தையாம் அடிகளார் ஆர்வமும், அருமை மகளார் நீலாம்பிகையார் வேண்டலும் ஒன்றுபட்டுப் பிறந்ததே தனித்தமிழ் இயக்கமாகும்!

ஓர் இயக்கத்தின் சிறப்பு அதன் பெயரில் இல்லை! கூட்டத்தில் இல்லை! முழக்கத்தில் இல்லை! அதன் இயக்கத்திலேயே உள்ளது. இயக்கமாவது செயற்பாடு. செயற்பாடு இல்லாத இயக்கம் தேக்கம் ஆகுமேயன்றி இயக்கம் ஆகாது.

''வெந்நீரில் குளிக்கவும் மாட்டாதவர் தீயில் பாய்வரோ?'' என்பதொரு பழமொழி. அவரவர் செய்யத்தக்க செயலை அவரவரே செய்யாமல் அடுத்தவரைக் கொண்டு செய்யலாம் என்பது நிறைவேறாது என்பதை விளக்கும் பழமொழி இது.

அடிகளார் உள்ளத்தில் இருந்து உரையாக வெளிப்பட்ட தனித்தமிழ் இயக்கம் எவரையும் எதிர் நோக்காமல், எவர் துணையையும் நாடாமல், தலைவர், செயலர், பொருளர், உறுப்பர் என்னும் கட்டுக்கு உட்படாமல் நினைத்த அளவில் செயலுக்கு வரும் நிறுவனமாகிவிட்டதாம்.

ஒரு வித்து முளைத்துச் செழிக்க வேண்டுமானால் அதற்கேற்ற மண், நீர், காற்று, வெப்பம் ஆகியனவும் வேண்டும் அன்றோ! அதுபோல, அடிகளார் உள்ளத்தில் தனித்தமிழ் நாட்டம்

ஏற்பட்டதும் நொடியில் ஏற்பட்டது அன்று. முன்னரே கனியத் தக்க காலம் நோக்கியிருந்த ஒன்று கனிந்தது என்பதே பொருளாம்.

பழந்தமிழ் நூல்களையும் பண்டைத்தமிழ் உரைகளையும் நூல் நூலாக மனப்பாடம் செய்து வைத்திருந்தவர் அடிகளார்.

பாட்டும் உரையும் கதையும் பொழிவுமெல்லாம் கைவந்தவர் அடிகளார்.

வடமொழி ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிமிக்கவர் அடிகளார்.

தமிழ் வடமொழியினின்றும் பிறந்ததா? தமிழ்ச் சொல்லுற்பத்தி, தமிழ் மிகப்பழைய மொழி என்னும் கட்டுரைகளை ஞானசாகரம் முதற் பதுமத்திலேயே வரைந்தவர் அடிகள்:

தமிழ்ச் சொற்களின் வேர்கண்டு விளக்கக் கட்டுரைகள் வரைந்தவர் அடிகள்.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை முதற்பதிப்பு 1903 இல் வெளிவந்தது. அப்பாட்டை ஆய்ந்து, ''இப்பாட்டினுள் இடைச் சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் நீக்கி எண்ணப்பட்ட சொற்கள் சிறிதேறக்குறைய ஐந்நூறு சொற்களாகும். இவற்றுள் முன் வந்த சொல்லே பின்னும் வருமாயின் பின்வந்தது எண்ணப்படவில்லை. இவ்வைந்நூறு சொற்களுள் நேமி, கோவலர், படிவம், கண்டம், படம், கணம், சிந்தித்து, விசயம், அஞ்சனம் என்னும் ஒன்பதும் வடசொற்கள்; யவனர், மிலேச்சர் இரண்டும் திசைச் சொற்கள். ஆக, இதனுட் காணப்பட்ட பிற மொழிச் சொற்கள் பதினொன்றேயாம். எனவே, இப்பாட்டினுள் நூற்றுக்கு இரண்டு விழுக்காடு பிற சொற்கள் புகுந்தன என்றறிக. ஏனையவெல்லாம் தனிச் செந்தமிழ்ச் சொற்களாகும் என்று தமிழ்மொழிச் சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் பகுத்து எழுதியவர் அடிகளார் (முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை 56) இவ்வாறே 1906 இல் வெளிவந்த பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையில் (77) ''இப்பாட்டின்கட் சிறிதேறக்குறைய ஆயிரத்து முந்நூற்று அறுபத்தொன்பது சொற்கள் இருக்கின்றன. இவற்றுட் பதினொரு சொற்கள் வடசொற்களாம். அவை மகம், அங்கி, ஆவுதி, பூதம், மது, பலி, பதாகை, அமரர், கங்கை, புண்ணியம், சமம் என்பனவாம். ஞமலி என்னும் ஒரு சொல் பூழி நாட்டிற்குரிய திசைச் சொல்லாகும். ஆகவே இப்பாட்டில் நூற்றுக்கு ஒன்று விழுக்காடு பிறநாட்டுச் சொற்கள் கலந்தன

என்பது அறியற் பாற்று. இதனால் இவ்வாசிரியர் காலத்திற்றமிழ் மிகவும் தூயதாக வழங்கப்பட்டு வந்தது என்க'' என்பவர் அடிகள்.

இனி, உள்ளம் உடல் உடை உணவு உறைவிடம் எப்பொழுதும் தூயதாக இருக்க வேண்டும் என்பதில் உறுதி கொண்ட கடைப்பிடியர் அடிகள். படுக்கை அறையுள் பயன்படுத்துவது, வீட்டுள் பயன்படுத்துவது, தோட்டத்தில் உலாவும் போது பயன்படுத்துவது எனக் காலணிகளை ஆங்காங்கு வைத்துப் பயன்படுத்தியவர் அடிகள்.

எப்பொருள் எவ்விடத்தில் எவ்வகையில் இருக்க வேண்டுமோ அவ்வகையில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துபவர் அடிகள். திரிக்கருக்குத் துடைத்தல், விளக்குக் கண்ணாடி துடைத்தல் என்பவற்றையும் தாமே தூயதாகச் செய்துவந்தவர் அடிகள். நூலகத்துப் பேழைகளைத் தூசி படாமல் துடைத்து வைப்பதுடன், நூல்களுக்கு அட்டையிட்டுத் தூசிதட்டி வைப்பதை நாட்கடன் போலக் கொண்டவர் அடிகள்.

தோட்டமும் உறைவிடச் சூழலும் கவர்ச்சியும் தூய்மையும் உடையவையாக இருப்பதைக் கண்காணிக்கத் தவறாதவர் அடிகள். இவ்வாறு புலமையும், பழக்க வழக்கங்களும் ஆகிய எல்லாம் தூய்மையாகத் திகழ வேண்டும் என்று கொண்டிருந்த உட்பதிவே, மொழித் தூய்மை பேணுதலிலும் முன்னின்றது எனல் அறிந்து மகிழத் தக்கதாம்.

இன்னொரு காரணமும் உண்டு என்பதை அடிகள் எழுத்தாலேயே உணர முடிகின்றது.

''1898 ஆம் ஆண்டு மூன்றாம்திங்கள் ஒன்பதாம் நாளிற் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்த காலந்தொட்டு, நாயகரவர்கட்கு அணுக்கராய் ஒழுகி வருகையில் வடசொல் மிகக் கலந்த அவர்களது உரைநடையைப் போல் யாமும் எழுதுவது நல்லதாமே? என்பதை அவர்கள்பால் வினவ, அவர்கள், 'வடசொற்கலவா உனது உரைநடையே இனியதாயும் எவர்க்கும் எளிதிற் பொருள் விளங்கத் தக்கதாயும் இருத்தலால், உனது நடைப்படியே எழுது; எனது உரைநடையைப் பின்பற்றாதே' என்று ஆணை தந்தார்கள். அவர்களின் அக்கருத்தை அறிந்தபின் முன்னமே தொல்லாசிரியர் தம் தீந்தமிழ் உரைநடையிற் பழகி அதன் சுவை கண்ட எமதுள்ளத்திற்கு அவர்கள் இட்ட கட்டளை மிகவும் பொருத்தமுடையதாகவே காணப்பட்டது. அதுமுதல் தீந்தமிழ் உரைநடை எழுதுவதில் எமது உள்ளம் உறைந்து நிற்கலாயிற்று'' என்கிறார்.

இவற்றைக் கூறியதோடு ''அவர்கள் தம்மைப் போலவே வடசொற்கள் மிகக்கலந்த நடையெழுதுதலை எமக்குச் சிறிது அழுத்திச் சொல்லியிருந்தால் யாமும் அங்ஙனம் எழுதித்தமிழுரை வனப்பைச் சிதைத்திருப்போம். ஆனால் அங்ஙனம் ஆகாமல் இறைவன் திருவருள் அவர்களிடை நின்று தடுத்துத் தமிழ் நலனை ஓம்பியது'' என்று விளக்கமும் தருகிறார் (சோமசுந்தர நாயகர் வரலாறு பக்.23-4)

வடமொழியும் ஆங்கிலமும் வல்ல அடிகளார் அம்மொழிச் சொற்கள் புகுதல் ஆகாது என்று கூறியமை கொண்டு அயல்மொழி வெறுப்பாளர் அவர் என்று எண்ணிவிடுதல் ஆகாது. அத்தகையவர் எனின் அம்மொழிகளை விரும்பித் தாமே முயன்று கற்றிருக்க மாட்டார். ஆங்கிலம் வடமொழி ஆகியவற்றில் காணும் அரும் பொருள்களைத் தமிழறிந்தார் அறிய வேண்டும் என்னும் ஆவலால் மொழி பெயர்த்திருக்கவும் மாட்டார்.

காளிதாசனார் இயற்றிய சாகுந்தலத்தை அதன் சுவை குன்றாமல் மொழிநயம் கெடாமல் மொழி பெயர்த்தது கொண்டே, சென்னை வடமொழிக் கல்லூரியில் மறைமலையடிகள் பெயரால் சாகுந்தல அறக்கட்டளைப் பரிசு ஒன்றனைக் காஞ்சிபுரம் தவத்திரு சங்கராச்சாரியார் நிறுவியுள்ளார் என்பதும் தனித்தமிழில் தாம் இயற்றிய நூல்களுக்கு ஆங்கிலத்திலே முன்னுரை எழுதினார் அடிகள் என்பதும் எண்ணினால் அம்மொழிகளின் மேல் அடிகள் கொண்ட பற்றுமை நன்கு வெளிப்படும்.

பாலில் நீர் கலத்தல் ஆகாது, அரிசியில் கல் கலத்தல் ஆகாது, கலப்படம் செய்து பொருள்களை விற்பது குற்றம் என்றெல்லாம் நடைமுறை வழக்கங்கள் உள்ளதையும், அவரவர் மொழித் தூய்மை காப்பதற்கு ஆங்காங்கு இயக்கங்கள் உள்ளதையும் அறிவார் அடிகளின் மொழி நலக் காவல் உணர்வை நன்கு மதிப்பார்.

பிற சொற்கள் கலப்பதால் மொழியின் இயல்பு கெடுவதையும், சொற்கள் அழிந்துபடுதலையும், மொழித்தன்மை கெட்டு வேற்று மொழியாகிவிடும் கேட்டையும் விரிவாக விளக்கிக் கட்டுரைகள் வரைந்துள்ளார். நீலாம்பிகையார் தனித்தமிழ்க் கட்டுரைகள் என்றே தனிநூலும் வரைந்துள்ளார். அவரே வடசொற்றமிழ் அகரவரிசை என்றொரு நூலும் தொகுத்து வழங்கினார்.

''இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிற சொற்களைப் புகுத்துதல் எதுபோல் இருக்கிறது என்றால், எல்லா உறுப்புகளும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு வேறு மண்ணாலும் மரத்தாலும் செயற்கையான அவ்வுறுப்புகள் போற் செய்து அவற்றை அதன்கண் ஒட்டவைத்துப் பார்ப்பதற்கே ஒப்பாய் இருக்கின்றது.

மயிர், குஞ்சி, கூந்தல் முதலிய தமிழ்ச் சொற்களை விடுத்து 'ரோமம்' 'சிகை' என்னும் வடசொற்களையும்,

உடம்பு தலை சென்னி முகம் முதலியவற்றை நீக்கிச் 'சரீரம்', 'சிரசு', 'வதனம்' என்பவற்றையும்,

மிடறு, கழுத்து என்பவற்றுக்கு மாறாகக் 'கண்டம்' என்னும் சொல்லையும், தோள், கை முதலியன இருக்க 'புஜம்', 'கரம்' என்பவற்றையும் வயிறு, அகடு இருக்க 'உதரம்' 'குக்ஷி' என்பவற்றையும் கால், அடி என்னும் சொற்களுக்குப் 'பதம்', 'பாதம்' என்பவற்றையும் கொண்டு வந்து நுழைத்தல் அவ்வத்தமிழ்ச் சொற்களாகிய உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு அவை போன்ற ஏனைய மொழிச் சொற்களைக் கொணர்ந்து அத்தமிழ் உடம்பின்கண் ஒட்டவிடுதலைப் போல்வது அன்றோ! பொருள்களை 'வஸ்துக்கள்' என்பது எற்றுக்கு?

ஒளியை 'பிரகாசம்' என்றும், ஓசையைச் 'சப்தம்' என்றும், சுவையை 'ருசி' என்றும், மணத்தை 'வாசனை' என்றும், தித்திப்பு இனிப்பை 'மதுரம்' என்றும், தொடுதல், உறுதலை 'ஸ்பரிசம்' என்றும், கல்வியை 'வித்தை' என்றும், தண்ணீர் சோறு உணவு என்பவற்றை 'ஜலம்' 'அந்நம்', 'ஆகாரம்' என்றும், ஆடையை 'வஸ்திரம்' என்றும், கட்டாயம் என்பதை 'அவஸ்யம்' என்றும் தாய், தந்தை, மகன், மகள், உறவினரை 'மாதா', 'பிதா' 'புத்ரன்', 'புத்ரி', 'பந்துக்கள்' என்றும், துன்பம், கேடு, குடும்பம் என்பவற்றைக் 'கஷ்டம்' 'நஷ்டம்', 'சம்ஸாரம்' என்றும், தலைமுழுக்கு, வழிபாடு, இளைப்பு, தூக்கம் முதலியவைகளை 'ஸ்நானம்', 'பூஜை' 'ஆயாசம்', 'நித்திரை' என்றும், முயற்சி, ஊழ்வினை, உயிர், சிவம், கடவுள், என்பவற்றைப் 'பிரயத்நம்', 'விதி', 'ஆத்மா', 'ஈசன்', 'பிரமம்' என்றும் நினைத்தல், எண்ணல், சொல்லல் என்பவற்றை 'ஞாபகம்' 'பாவநை' 'வசனித்தல்' என்றும் தூய தமிழ்ச் சொற்களை ஒழித்து வடசொற்களைக் கொண்டு வந்து புகுத்தித் தனித் தமிழ்ச் சொற்களை வழங்காமல்

தொலைப்பது தானா நமது அருமைச் செந்தமிழ் மொழியை வளர்ப்பது? அறிவுடையீர்! கூறுமின்கள்!'' என்கிறார் அடிகளார்.

அடிகளார் எடுத்துக்காட்டிய சொற்கள் எல்லாம் அறிவியல் சொற்களா? புதிது கண்ட பொருளைச் சுட்டும் சொற்களா? கலைச் சொற்களா? இயல்பாகக் கல்லாரும் தெரிந்த உடலுறுப்பு முதலான வழங்கியற் சொற்கள் தாமே! அவற்றையும் வழக்கில் இருந்து வீழ்த்தும் செயல் வேண்டுமா? வேற்றுச் சொல் வரவால் வீட்டுச் சொல் ஒழிந்து போகின்றது அல்லவோ!

அடிகளாரின் ஆக்கமிக்க இச்செயலைக் கலிகாலக் கொடுமை என்று பழித்தாரும் இருந்தனர். அவர்களை நோக்கி, ''பண்டு தொடங்கிப் புனிதமாய் ஓங்கி நிற்கும் தம் தனித்தமிழ்த் தாயைப் பிறமொழிச் சொற்கள் என்னும் கோடரியினுள் நுழைந்து கொண்டு இத்தமிழ்ப் புதல்வர் வெட்டிச் சாய்க்க முயல்வதுதான் கலிகாலக் கொடுமை! இத்தீவினைச் செயலைப் புரியும் இவர் தம்மைத் தடுத்து எம் தமிழ்த்தாயைப் பாதுகாக்க முன் நிற்கும் எம்போல்வாரது நல்வினைச் செயல் ஒரு காலமும் கலிகாலக் கொடுமை ஆகாது என்று உணர்மின்கள் நடுநிலையுடையீர்!'' என்றார் அடிகள்.

வடமொழிச் சொற்களையே பிறமொழிச் சொற்களாக அடிகளார் கொண்டார் எனக் கருதுவார் உளர். ஆனால் அடிகளார் பலப்பல இடங்களிலும், ஆரியம் முதலான மொழிகள் என்னும், ஆரியம் ஆங்கிலம் முதலான மொழிகள் என்றும் வழங்குகின்றார் என்பதை அறிவார்க்கு உண்மை விளக்கமாகும். இனிப் பிற மொழிக் கலைச் சொற்களையும் பொதுமக்கள் நற்றமிழ்ச் சொற்களாக நடமாடவிடும் அழகை எடுத்துக் காட்டி அம்முறையை மேற் கொள்ளுதற் பயனையும் விளக்குகிறார் அடிகள்:

'எஞ்சின்', 'டிரெயின்', 'டிக்கெட்டு', 'டிராம்', 'ஸ்கூல்', 'கமிஷன் ஏஜெண்டு', 'ஷாப்பு', 'மார்க்கெட்டு', முதலான ஆங்கில• மொழிகளைப் பொதுமக்கள் அவற்றிற்கு முறையே 'பொறி', 'வண்டித்தொடர்', 'சீட்டு', 'மின்சாரவண்டி', 'பள்ளிக்கூடம்', தரகன், கடை, அங்காடிக்கடை முதலான தமிழ்ச் சொற்களையே இட்டு வழங்குவர். கல்வியறிவும் நாகரிகமும் வாய்ந்தவர்கள் இங்ஙனம் பிறநாட்டுச் சொற்கள் எடுத்து வழங்க வேண்டிய இடங்களிலும் அவற்றிற்கு ஈடாகத் தமது மொழியிலுள்ள சொற்களையே நடைபெறவிட்டு வாழ்வர். இவ்வாறு செய்தல் அவர்க்குள்ள முயற்சியின் திறத்தையும் நாகரிகச் சிறப்பினையும்

தமது மொழியில் வைத்த பற்றினையும் வெளிப்படையாகக் காட்டுவதாம்'' என்பது அது.

தம் கொள்கை எல்லா மொழிகளுக்கும் உரிய பொதுக் கொள்கையே என்பதையும் அடிகளார் வலியுறுத்துகிறார்:

''உயிரோடு உலவி வரும் மொழிகள் எவையாய் இருப்பினும் அவை எத்துணை ஏழ்மையுடையவாயினும் அவற்றிற்குரியோர் உண்மைப் பற்றுடையவராய் அவற்றை அங்ஙனம் வளம் பெறச் செய்து வருகுவராயின் அதனால் அவர் உயர்வான அறிவும் நன்முயற்சியும் மேன்மேல் மிகப்பெற்றுத் தாமும் தம் இனத்தாரும் உயர்வர்'' என்பது அது.

தனித்தமிழில் பேசவும் எழுதவும் வேண்டும் என்றும் உறுதி எடுத்துக் கொணட பின்னர்ப் படிப்படியே சுவாமி வேதாசலம், மறைமலையடிகள் எனவும், சமரச சன்மார்க்கசங்கம், பொது நிலைக் கழகம் எனவும், ஞானசாகரம், அறிவுக்கடல் எனவும் மொழி மாற்றம் பெற்றன.

நீலாம்பிகையார், தம் உடன் பிறந்தார் திருஞான சம்பந்தத்தை 'அறிவுத் தொடர்பு' என்றும், மாணிக்கவாசகத்தை 'மணிமொழி' என்றும், சுந்தரமூர்த்தியை 'அழகுரு' என்றும், திரிபுர சுந்தரியை 'முந்நகரழகி' என்றும் பெயரிட்டு வழங்கினார் என்பதை அவர் உடன்பிறந்த மறை. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார் (மறைமலையடிகள் வரலாறு பக்.298).

''எழுத்துப் பணியில் அடிகளார் ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்தார். அடிகளார் புதுவதாக எழுதும் எழுத்தில் பிறமொழிக் கலப்பு இல்லாமல் செய்யத் துணிந்தது போலவே, முன்னே வெளியிட்ட நூல்களில் அரிதாகக் கலந்திருந்த பிறமொழிச் சொற்களைக் களைந்து, தனித்தமிழ் ஆக்கி வெளியிடுவது என்னும் திருத்தமாகும் அது:

''நம்மனோரிற் கற்றவராயிருப்போர் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற்றனித்தமிழிற் பேசவும் எழுதவும் கடைப்பிடியாய்ப் பழகி வரல் வேண்டும். இதனை முன் நடந்து காட்டும் பொருட்டு இதற்கு முன் யாம் எழுதிய நூல்களிற் புகுந்த சிற்சில அயன்மொழிச் சொற்களையும் அந்நூல்களைத் திரும்பப் பதிப்பிட்டு வரும் இப்போது முழுதுங் களைந்துவிட்டு அவை நின்ற இடத்தில் தூய தமிழ்ச் சொற்களையே நிரப்பி வருகின்றோம்'' என்பது முல்லைப்பாட்டு

ஆராய்ச்சியுரையின் முகப்புச் செய்தியாகும். இது 1919 இல் வெளிவந்த மூன்றாம் பதிப்பில் உள்ள குறிப்பாகும்.

அடிகளார் கண்ட தனித்தமிழ் இயக்கப் பயன்பாடு பற்றி மதிப்பீடு ஒன்றனை அறிஞர் வ.சுப. மாணிக்கனார் வழங்கியுள்ளார்.

''மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் தமிழ்த் தாயின் நெஞ்சு புரையோடாதும், தமிழர் அறை போகாதும் காத்தது. தமிழின் வயிற்றில் இருந்து முன்பு பல திராவிட மொழிகள் கிளைத்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துள் ஒரு புதிய திராவிட மொழி பிறந்து தமிழை இன்னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது. இன்று பாட நூல்கள் பெரும்பாலும் தமிழ் வடிவாக வருகின்றன. ஒருசார் இளைஞர் கூட்டம் எழுத்தாளர் கூட்டம் குடிநீரைத் தூயநீராகக் காத்தல் போலத் தமிழைத் தூயதாகக் காத்து வருகின்றன. கலப்பு மிகுதியிருந்தாலும் பல செய்தித் தாள்கள் தமிழ்த் தூய்மையையும் முடிந்த அளவில் பேணி வருகின்றன. வாழ்த்துக்கள் வரவேற்புகள் அழைப்பிதழ்கள் எல்லாம் நல்ல தமிழ்ப் பைங்கூழ் வளரும் பைந்நிலங்களாக மிளிர்கின்றன. இந்நன் மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த் தாய் பெற்றாள். அத்தவமகள் அடிச்சுவட்டை அன்புச்சுவடாகப் போற்றிப் பாலின் தூய்மை போலத் தமிழின் தூய்மையைக் கடைப்பிடித்து வாழும் இளைய மறைமலையடிகள் இன்று பல்கி வருப. ஆதலின், தமிழ்தனித் தடத்தில் செல்லும் புகைவண்டி போலப் பழைய புதிய தன் சொற்களைக் கொண்டே விரைந்து இயங்கி முன்னேறும் என்று உறுதி கொள்வோம்'' என்கிறார் (மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர்).

மீண்டும் இலங்கைச் செலவு:

அடிகளார் புலமையை ஈழத்தமிழர் கொள்ளும் வகையால் முன்னே அடிகளை அழைத்துப் பேரும் பெருமையும் கொண்ட திருவரங்கனார், மீண்டும் அடிகளை ஆங்கு அழைக்க விரும்பினார்.

அடிகளார் புலமையை ஈழத்தமிழர் பெறுதல் வேண்டும் என்பதோடு அடிகளார்க்கு உதவ வேண்டும் என்னும் ஆர்வக் குறிப்புடனும் அழைத்தார். அடிகளார் மேற்கொண்ட நூல் முயற்சி, கட்டட முயற்சி, அச்சக முயற்சி, இதழ் முயற்சி என்பவற்றோடு பெருங்குடும்பத் தேவை என்பதும் கூடிய அளவில், தக்க புரவலர்களைக் கொண்டு துணையாக நிற்க அவர்

தம் சைவ உள்ளமும் தமிழ் உள்ளமும் தூண்டின. ஆதலால் அடிகளார் 21.5.1917 இல் பல்லவபுரத்தில் இருந்து இலங்கைச் செலவு மேற்கொண்டார்.

அடிகளை மாத்தளைத் தொடர்வண்டி நிலையத்தில் திருவரங்கனாரும், செந்திலாறுமுகம் பிள்ளை என்பாரும் எதிர் கொண்டு இருந்து அழைத்துக் கொழும்புக்குச் சென்றனர். முன்னர் இலங்கைக்கு வந்த போது அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்ட சன்மார்க்க சபையில் அடிகளார்க்குச் சிறந்த வரவேற்பு வழங்கப்பட்டது. அதன் ஆண்டுவிழாத் தலைவராகவும் அடிகள் விளங்கினார். தம்பையா சத்திரம், சிந்தும்பட்டி ஆகிய இடங்களில் உமாமகேசுவரர், அப்பூதியடிகள், சைவமும் தமிழும், அன்பு, கோயில் வணக்கம், பிறவிப்பயன் என்னும் தலைப்புகளில் உரையாற்றினார். திரு.சி.சு. வைரவநாத பிள்ளை என்பார் எழுநூறு ரூபா தாம் வழங்கியதுடன், தம் நிறுவன அலுவலர்களும் முந்நூறு ரூபா வழங்க ஏற்பாடு செய்தார். பல்வேறு வணிகர்களும் உதவினர். அரங்கனாரும், சங்கர நாராயண பிள்ளை, செந்திலாறுமுகம் பிள்ளை என்பாரும் இணைந்து நின்று, அடிகளுக்குச் சிறப்புச் செய்தல், விருந்தோம்பல், பணம் தண்டித்தருதல் ஆகியவற்றை மேற் கொண்டனர். ஏறத்தாழ மூன்று திங்கள் அளவில் அடிகளார் மீண்டும் பல்லவபுரம் எய்தினார்.

இச் செலவால், நேரில் பெற்ற காணிக்கைத் தொகையுடன், அடிகளார் பல்லவபுரம் எய்திய பின்னரும் அவர் தொண்டுக்காகத் தொகை விடுத்துக் கொண்டிருந்தனர். அதற்கு மூலவராக இருந்த அரங்கனாரும் சங்கர நாராயண பிள்ளை என்பாரும் சேர்ந்து 'திருசங்கர் கம்பெனி' என்னும் பெயரால் 1917 இல் புத்தகக்கடை ஒன்று நிறுவினர். அதனைச் சென்னையில் நடத்துதல் சீராக இருக்கும் என்று பின்னே கருதினர். அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யும் வகையில் திருவரங்கனார் சென்னைக்கு வந்தார்.

சென்னைக்கு வந்த அரங்கனார் அடிகளாரைக் காண மறப்பரோ? அடிகளார் உறையும் பல்லவபுரம் எய்தினார். முன்னரே அடிகளார் அன்புக்கும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவராகிக், குடும்பத்து உறுப்பினர் ஒவ்வொருவர்க்கும் அடிகளார் புகழ்ந்துரையால் அறிமுகமாகியிருந்த அரங்கனார் வருகை, குடும்பத்தவர் அனைவர்க்கும் தனித்தனியே கொண்டாட்டமாகத் திகழ்ந்தது. ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு அன்பு காட்டினர். அவரும் குடும்பத்தோடு குடும்ப உறவாக இருந்து மகிழ்ந்தார்.

முன்னரே தம் நண்பர் செந்தில் ஆறுமுகனார் பல்லவபுரத்திற்கு வந்து அடிகளாரைக் கண்டு மகிழ்ந்ததுடன், அவர்தம் அருமை மகளார் நீலாம்பிகையார் அரங்கனார்க்குத் தக்க வாழ்க்கைத் துணையாக அமையின் நலமாமே என உணர்ந்திருந்ததை, அரங்கனார் உள்ளத்திலும் பதித்திருந்தார். ஆகவே, அரங்கர்க்கு நீலாம்பிகை மீது நாட்டம் சென்றது. அவர்தம் அறிவு ஆற்றலும் உயர்குணச் சால்பும் அடிகளார் கொண்டுள்ள உள்ளன்பும் ஆகியவெல்லாம் வயப்படுத்த அவர்மீது காதலரும்பினார். அவ்வாறே அரங்கர் சீர்மைகளை அடிகளார் நாத்தழும்பு ஏறக்கூறி வருவதைக் கேட்டு மகிழ்ந்திருந்த நீலாம்பிகையாரும், அரங்கரை நேரில் காண வாய்த்துத் தமக்குத் தக்க தலைவரே என உள்ளங் கொண்டார். ஒரு திங்கள் அளவு பல்லவ புரத்தில் விருந்தினராகத் தங்கிய திருவரங்கர், தாம் தொடங்க இருந்த சங்கர் புத்தகக்கடை தொடர்பாகச் சென்னையில் தங்கலானார். இடை இடையே பல்லவபுரம் எய்தி அடிகளாருடன் அளவளாவிச் சென்றார்.

செந்தமிழ்க் களஞ்சியம்:

சைவப் பற்று மிக்க திருவரங்கனார்க்குத் திருவாசகத்திற்கு அடிகளாரைக் கொண்டு ஓர் உரை எழுதுவித்து வெளியிட வேண்டும் என்றும் ஆர்வம் உண்டாயிற்று. அதனை அடிகளாரிடம் வேண்டினார். அதற்கு இசைந்த அடிகளார் ‘செந்தமிழ்க் களஞ்சியம்’ என்றொரு திங்கள் வெளியீட்டை வெளியிடுவது என்றும், அதில் திருவாசக விரிவுரையைத் தொடர்ந்து வெளியிடுவது என்றும் முடிவு செய்தனர்.

இதழுக்கு ஆண்டுக் கட்டணம் உள்நாட்டில் நான்கு ரூபா என்றும், வெளிநாட்டில் ஆறு ரூபா என்றும், விரிவுரை வழங்கும் அடிகளார்க்குத் திங்களுக்குக் காணிக்கை நூறு ரூபா என்றும் முடிவு செய்து 1920 பிப்ரவரித் திங்களில் முதல் இதழ் வெளிவந்தது.

‘தெய்வத் திருவாசகம் போலும் நூலுக்கு உரை எழுதுதல் ஆகாது’ என்று தொடங்கும்போதே சிலர் எதிரிட்டனர். சிலர் மறுத்து எழுதினர். இன்னும் சிலர் உரை வெளிவந்ததைக் கண்டு பொருந்தாக்குறைகள் சில உரைத்தனர். உரைக்கு முன்னதாகிய சிறப்புப்பாயிர உரையிலேயே மறுப்புக் கிளப்பினர்.

ஒரு நூலைப் பாடம் கேட்கப் புகுபவர் அதனை இயற்றிய ‘ஆசிரியன் பெருமை’யை அறிந்து கொள்ளல் வேண்டும் என்பதை அடிகளார் சிறப்புப் பாயிரத்தில் குறித்திருந்தார்.

மறுப்புக் கூறுபவர் 'ஆசிரியர் பெயர்' அறிய வேண்டும் என்பதே முன்னோர் மரபாகும். ஆசிரியர் பெருமை அறிய வேண்டும் என்பது மாறாகும் என்று மறுத்துரை வரைந்தனர்.

அதன் மெய்ம்மையைக் காட்ட விரும்பிய அடிகள் இரண்டாம் இதழில், ''ஆக்கியோன் பெயர் என்பது நூல் செய்த ஆசிரியன் பெயர்; என்றவாறு. இந்நூல் செய்தார் யாரோ எனின், மால்வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயில் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணியாக உடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள் என்பது'' என்று இறையனார் அகப் பொருள் நூலின் முகத்து உரை கூறியதையும் பிறநூற்சான்றுகளையும் காட்டினார்.

தெய்வத் தன்மை வாய்ந்த நூல்களுக்கு உரை எழுதுதல் ஆகாது என்பவரை மறுத்து, ''ஈசுர வாக்கியம் என இவர் நினைக்கும் வேதங்களுக்கும் கூட யாஸ்காச்சாரியார், சாயனாச்சாரியார் முதலியோர் உரைகள் எழுதியிருக்கையில் திருவாசகத்திற்கு மட்டுமே உரை எழுதலாகாது என்று இவர் கூறுதல் என்னையோ?'' என்று தெளிவித்தார்.

இவ்வாறு தடைகளை எல்லாம் தகர்த்தாலும் அடிகளாரின் பணி மிகுதியாலும் சுற்றுச் செலவாலும் உடல்நலக் குறைவாலும் 1922 ஏப்பிரல் வரை பன்னிரண்டு இதழ்களே வெளிவந்தன. முறைப்படி 26 இதழ்கள் இதற்குள் வெளிவந்திருக்க வேண்டும்! அதன் பாதியளவே இதழ் வெளி வந்தமையால் அரங்கனார்க்குப் பெரு நெருக்கடியாயிற்று. அவர் அரிதின் முயன்று அவ்விதழுக்கு உறுப்பினராக ஆயிரவரைச் சேர்த்திருந்தார். அவர்கள் நெருக்கடி தராமல் இருக்கமாட்டார்கள் அல்லரே! அதனால் அடிகளாரை அவர் நெருக்க வேண்டிய கட்டாயம் உடையவரானார்! பன்னிரண்டு இதழ்கள்! திருவாசகத்தின் முதல் நான்கு அகவல் களுக்கு மட்டும் நானூறு பக்க விரிவுரை! இனி நூலை முழுவுரையுடன் காணுதற்கு எவ்வளவு காலமாகும்? அதுவரை இதழுறுப்பினர் என்ன பாடுபடுத்துவர் என்றெல்லாம் வருந்திய அரங்கர் தாம் வணங்கி வழிபடும் அடிகளாரை எப்படி வருந்தச் சொல்ல இயலும்! என்ன செய்வார்? இருவர் அன்பும் இடை வெளிப்படலாயிற்று; அரங்கனார் சென்னையை விடுத்துத் தம் சொந்த ஊராகிய பாளையங்கோட்டைக்குச் சென்றார். உள் ளொத்த அறிவுத் தொடர்பு இடைவெளிப்படுதலைத் தாங்க முடிந்தாலும், உள்ளொத்த அன்புத் தொடர்பிலும் இடை

வெளிப்பட்டு விட்டதே! அத்துயர்க்கு அளவு உண்டா? தாங்குவது எளிதா?

அடிகளார் 1921 இல் கழலை நோய்க்கு ஆட்பட்டார். காய்ச்சல் கடுவலிகளால் படுத்த படுக்கையாக ஒரு திங்கள் இருந்தார். பல்வேறு மருத்துவம் செய்தும் பயனின்றித் தமிழ் மருத்துவர் பண்டிதர் ஆனந்தம் செய்த மருத்துவத்தால் அடிகள் நலம் பெற்றார். பின்னர் ஓரிரு திங்கள் ஓய்வுக்குப் பின் 16.12.1921இல் மூன்றாம் முறையாக இலங்கைச் செலவை மேற்கொண்டார். 21.12.1921 இல் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதன் தலைவர் பண்டித மயில் வாகனர் (விபுலானந்த அடிகள்) வேண்டுகைப்படி திருக்குறள் பற்றி உரையாற்றினார். பின்னர்ப் பல்வேறு இடங்களில் 'சைவசித்தாந்தம்', 'உயிரின் இலக்கணம்', 'கடவுள் இருதிறமாய் நிற்கும் நிலை', 'கடவுளின் ஆண் பெண் உருவநிலை' பண்டைத் தமிழர் நாகரிகம்' 'பண்டைத் தமிழரின் கடவுள் வழிபாடு' ஆகிய தலைப்புகளில் உரையாற்றி 20.1.1922 இல் பல்லவபுரம் வந்தடைந்தார்.

இம்மூன்றாம் முறை இலங்கைக்கு அழைத்தவர் வழக்கறிஞர் கனகராயர் என்பவர். அவர்தம் மாமனார் தம்பையா, அடிகளாரை வழியனுப்பும் போது தங்கச் சங்கிலியமைந்த கடிகாரம் ஒன்றனைப் பரிசாக வழங்கினார். இச்செலவில் அடிகளாருடன் அவர்தம் மகனார் திருநாவுக்கரசும் உடன் சென்றிருந்தார்.

தாம் விரும்பியவரை மணங்கொள்ளத் தடை நேர்ந்தமைக்கு நீலாம்பிகையார் உளம் வருந்தினார். மணப்பதாயின் அவரையே மணப்பது என்னும் உறுதியுடன் இருந்தார். அவ்வாறே திருவரங்கனாரும் நீலாம்பிகையை அன்றி எவரையும் மணவேன் என்னும் உறுதியில் இருந்தார். தாம் வராமல், தம் குடும்பத்தவர் முன்னின்று நடத்துதற்கும் அடிகள் காலம் செல்லச் செல்ல நேர்ந்தார். ஆனால் நீலாம்பிகையார் அடிகளார் முன்னின்று நடத்தினால் அல்லாமல் நான் விரும்பிய காதலரையும் மணவேன் என்னும் பேருறுதியில் நின்றார்.

திருமணத் தடைப்பாடு நேர்ந்தபோதே அடிகளார் நீலாம்பிகையை 'லேடி வெல்லிங்டன்' மகளிர் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலம் பயிலச் செய்தார். பயிலும் போதே அவரை இளைப்பு இருமல் பற்றியது. பலவகை மருத்துவம் செய்தும் பயன்படவில்லை. படிப்பு நான்காம் படிவத்துடன் நின்றது.

பல்லவபுரத்தில் 'வித்தியோதயா' என்னும் பெண் பள்ளி ஒன்று நிறுவப்பட்டு, மூன்றாம் படிவம் வரை தொடங்கினர்.

அப்பள்ளியில் தமிழாசிரியராக நீலா பணியாற்றத் தொடங்கினார். ஆங்கிலம் வல்ல ஆசிரியர்களுக்குத் தமிழைக் கற்பித்து, அவர்களிடமிருந்து தாம் ஆங்கிலம் கற்றுக் கொண்டார் நீலாம்பிகையார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அப்பள்ளி மயிலாப்பூர்க்கு மாறியது. ஆங்குச் சென்றும் பணி செய்த நீலா, இளைப்பிருமல் துயரோடு அலுவலுக்குச் சென்றுவர இயலாமையால் பணியை நிறுத்தினார். சிறிது காலம் ஓய்வு கொண்டபின் இராயபுரம் 'நார்த்விக்' மகளிர் பள்ளியில் தமிழாசிரியரானார். அங்கே ஐந்தாண்டுகள் பணிபுரிந்தார். இதற்குள் பத்தாண்டுகள் சென்றன. காதலர் இருவர் உறுதியும் தளர்ந்திலது. அடிகளார்க்கும் உருக்கம் உண்டாகியது. இந்நிலையில் சட்டப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, அடிகளின் மாணவர் மணி திருநாவுக்கரசு முதலியார், செந்திலாறுமுகம் பிள்ளை, திருவரங்கனாரின் இளவல் சுப்பையா பிள்ளை ஆகியோர் அடிகளாரிடம் வேண்டித்திருமண இசைவு பெற்றனர்.

சங்கர் புத்தகக் கழகம் தொடங்கிய திருவரங்கனார், திருநெல்வேலிக்குச் சென்று மா. திரவியம் பிள்ளை என்பாரை இணைத்துக் கொண்டு 1920 இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் என்னும் பெயரில் நூல் வெளியீட்டு-விற்பனை நிறுவனம் ஒன்றனைத் தொடங்கி அதன் வளர்ச்சியிலே கருத்துச் செலுத்தினார். கூட்டுப் பங்கு நிறுவனமாகிய அதற்குப் பங்காளிகளைச் சேர்க்கவும், நூல் வெளியிடவுமாகிய வேலைகள் பெரிதும் இருந்தாலும், காதல் மறக்கக்கூடியது அன்றே! கண்ணை மூட முடியாத் துயர் செய்வதாயிற்றே. அவர்தம் உள்ளூறு துயரம் மாறும் வகையில் சான்றோர் முன்னின்று திருமணத்திற்கு அடிகளாரிடம் இசைவு பெற்றமைக்கு மிகுந்த உவப்பாயிற்று. எண்ணிய எண்ணியாங்கு எய்தும் பேறு அல்லவோ அது!

2.2.1927 இல் மயிலாப்பூர் கபாலீசுவரர் திருமுன்னே சடங்குகள் எவையுமின்றி அடிகளார், நீலாம்பிகையாரைத் திருவரங்கனார்க்குக் கொடுக்க அவர் ஏற்றார். கா. சுப்பிரமணிய பிள்ளை, பா.வே. மாணிக்க நாயகர், மணி. திருநாவுக்கரசு முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தரனார், செந்திலாறுமுகம் பிள்ளை, சங்கர நாராயண பிள்ளை முதலிய பெருமக்களும் பிறரும் மணமக்களை வாழ்த்தினர். ஏழை மக்களுக்கு உணவு வழங்கினர். மாலையில் இசைவிருந்தும், மறுநாள் மருவீடும் நிகழ்ந்தன. நெல்லை சுந்தரமூர்த்தி ஓதுவார்

'வள்ளி திருமணம்' என்னும் இசைக்கதை நிகழ்த்தினார். திருமணம் நிகழ்ந்து மூன்று திங்கள் ஆனபின் மணமக்கள் பாளையங்கோட்டையில் வாழ்க்கை தொடங்கினர்.

அதனை அடுத்து நீலாவுக்கு அடிகள் எழுதிய அஞ்சல் ஒன்று வருமாறு:

டி.எம். அச்சுக்கூடம், பல்லாவரம் 7.12.1927.

அருமைத் திருமிகு திருவரங்க நீலாம்பாளுக்கு அம்மையப்பர் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!

நீங்கள் இருவரும் அறிவும், உங்கு நலமுடன் சேர்ந்த அன்றைக்கே எழுதிய கடிதங்கள் இரண்டும் பெற்றுப் பேரின்ப வெள்ளத்துள் திளைத்தேம் ஆயினேம். நீலாவும் அவள்தன் அருமை அத்தையாரும் அன்னையும் புதல்வியும் போல் அத்துணை அன்புடன் அளவளாவுதலை அறிந்தெழுந்த பெருமகிழ்ச்சியால் எம் பெருமானை வாழ்த்தியும் வணங்கியும் எம் புல்லிய நன்றியைச் செலுத்தினோம்.

யாம் கற்ற பண்டைத் தனித்தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்குக் கண்கண்ட இலக்கியமாய் நீவிர் இருவரும் இருதலைப் புள்ளின் ஓருயிராகத் தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்பதுன்பங்களே என்று திருச்சிற்றம்பலக் கோவையாரில் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்தாங்கு இன்பதுன்பங்களினும் ஒருவரை ஒருவர் இன்றியமையாக் காதலன்பில் தலைப்பிரியா வாழ்க்கையினில் நீவிர் நீடுவாழுமாறு அருள்புரிந்த அம்மையப்பர் தம் பேரிரக்கத்திற்கு ஏழையேம் எங்ஙனம் கைம்மாறு செலுத்த வல்லேம். அவ்வருட் பெருந்திறத்தை எங்ஙனம் ஏத்திப் புகழ வல்லேம். காதல் அன்பின்கண் ஈடுபட்டநும் இல்லற இன்ப வாழ்க்கை அம்மையப்பர் தம் அருள் வாழ்க்கையின் வேறாவது அன்று ஆதலின் இவ்வாழ்க்கையிலேயே நும் வாழ்நாள் எல்லா நலங்களிலும் இனிது நீடுக என்று எம் பெருமான் பெருமாட்டியின் இணைமலர்த் திருவடிகளை இறைஞ்சி வேண்டுகின்றேம்.

எம்முடைய வாழ்க்கையினும் யாம் ஈன்ற எம்மக்களின் இல்லற வாழ்க்கை முற்றும் அன்பிற் பிரிதல் இல்லா இன்பச் சுற்றத்தவரொடு இனிது நடைபெறுக என்று யாம் வேண்டிய வேண்டுகோள் உரையினை எம் இறைவன் திருச்செவி பெற்று நீலாள், கணவனுடன் அவள்தன் அருமை அத்தையரும் அருமை மைத்துனரும், ஏவலாளரும், ஏவலாட்டியரும் பிறரும் எல்லாம்

அன்பிற் கெழுமிய நன்பெரு மாட்சியினை அருள் செய்தான்! அவ்வருளுக்கு எளியரேம் எழுமை எழு பிறப்பும் உழுவற்றொழும்பு ஆற்றுவதல்லது வேறென் கடவேம்!

தன்மனக்கினிய காதலன்பால் நீலாளை ஒப்படைத்து விட்டபின் யான் கவலையுறுதற்கு இடனில்லையாயினும் அவட்கு வந்த நோய் இனிவாராதென்னும் உறுதிப்பாடு பெற்ற பின்னரே என்னுள்ளம் அமைதி பெறும். நெடுந்தொலைவில் இருப்பதனாலும் அடுத்தடுத்துக் காணுதற்கு இல்லாமையாலும் அருமை மகளை நினைத்து நெஞ்சம் கலங்குகின்றது. எமது கலக்கத்தை நன்கறியும் இறைவனே, அவட்கு இனி அந்நோய் வராமல் அருள் செய்து எமது பெருங்கவலையைத் தீர்க்கற்பாலான்.

நீலா, தலை முழுகும் நாட்களில், உடைத்துவிதை அகற்றிய நான்கு கடுக்காய், ஏழு கசப்பில்லாத வாதுமைப் பருப்புகளின் எடையுள்ள மிளகு, இம்மிளகின் எடையில் அரைவாசி கொண்ட ஓமம் என்னும் இவற்றை நெகிழ அரைத்து வடிகஞ்சியிற் குழப்பி, இறுகக் காய்ச்சி, சூட்டொடு அதனைத் தலையிலும் உடம்பிலும் தேய்த்துக் கொண்டு அளவான வெந்நீரில் முடிக்காய்ச்சவர்க் காரத்தால் நெய்ச்சிக்கும் அழுக்கும் போக முழுகுதல் வேண்டும்.

தேனும் இந்துப்புப் பொடி சிறிதும் கலந்த இஞ்சிச்சாற்றை, அகமும் புறமும் தூயவாய்ப் பளபளப்பாக்கிய குடகு நாரத்தை நிறக் கண்ணாடிப் புட்டியிலும் ஆழ்ந்த நீலக் கண்ணாடிப் புட்டியிலும் அடைப்பித்து, வெயிலில் நாள்முழுவதும் வைத்த படியாகவே அதனை உட்கொண்டு வரல் வேண்டும். நோய் மிகுந்தில்லா நாட்களில் மூன்று மணி நேரத்திற்கு ஒருகால் குடகு நாரத்தை நிறப்புட்டிலின் சாற்றையும் இடையே ஒன்று அல்லது இரண்டு முறை ஆழ்ந்த நீலப்புட்டிலின் சாற்றையும் மாற்றி மாற்றிக் காற்பலம் பருகிவரல் வேண்டும். தலை முழுகிய மறுநாளில் ஐந்து விதை நீக்கிய கடுக்காய்ச் சாறு அருந்தி மலக்குடலைத் துப்புரவு செய்க. உடம்பு இடுங்கச்சுகள் முழங்கைக்கு மேல் நீளமாய் இறுகப்பிடித்திருத்தல் வேண்டும். குளிர்ச்சி மிகுந்த பண்டங்களை உட்கொள்ளல் வேண்டாம்.

நலம்.

அன்புமிக்க,மறைமலையடிகள்.

தமக்கும் தம் மருகர்க்கும் தொழில் வகையால் ஏற்பட்ட பிணக்கு, தம் மகளார் காதற் கணவனைக் கைப்பற்றத் தடையாகியமையைக் கண்டு உள்ளுள் வருந்திக் கிடந்த

அடிகளார், அவர்கள் மணப்பேறு கொண்டு மணமகனார் இல்லம் சேர்ந்து மகிழ்வு மிக்க வாழ்வு தொடங்கிய செய்தி அறிந்த அளவில் கொண்ட உவகைப் பெருக்கே இவ்வஞ்சற் செய்தியாம்.

எல்லாம் இறையருட் செயலே என்றும், அதற்கு அவ்விறைக்கு நன்றி செலுத்துதல் மக்கள் கடன் என்றும், கணவன் மனைவியர் இரண்டு தலையுடைய ஒருயிர்ப் பறவை போன்றவர் என்றும், அவர்களுக்கு இன்ப துன்பங்கள் தனித்தனியே வருவன அல்ல என்றும், அதுவே இறைவன் இறைவியர் ஒன்றி உடனாகிய வாழ்வு என்றும், தம்மினும் தம்மக்கள் வாழ்வு சிறந்தோங்கி விளங்குதல் வேண்டும் என்னும் வேண்டுகையே நற்பெற்றோர் இயற்கை என்றும், புகுந்த வீட்டில் உள்ள உற்றார் உறவினரும் ஏவற்கடமை புரிவாரும் கருத்து ஒருமித்தவராய் விளங்குதல் வாழ்வுக்கு இன்றியமையாதது என்றும், நோயிலா வாழ்வுக்கு உரிய கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்றும், தொலைவில் உள்ளார் உடல் நிலை நலமாக இருத்தலே பெற்றோர்க்கும் உற்றோர்க்கும் கவலை தாரா வாழ்வாம் என்றும், எல்லாவற்றுக்கும் எளிமையாகவும் திறமாகவும் செய்யத் தக்க கைம்முறை இயற்கை மருத்துவம் நம்மை இனிது காக்கும் என்றும் அடிகளார் தம் மகளார்க்கும் மருகர்க்கும் வரைந்த இக்கடிதம் வாழ்வார் அனைவர்க்கும் எழுதப்பட்ட கடிதமாகவே கொள்ளத் தக்கதாம்.

இனி, ஒரு பெண்மணி வயிறு வாய்ப்பது பெற்றோர் உவப்புக்கு உரியது என்றும், ஆண் மகவாயினும் பெண் மகவாயினும் சிறந்ததே என்றும் வயிறு வாய்த்த காலந்தொட்டு மகப்பேற்றுக் காலம் வரை எத்தகைய உளநிறைவு அறிவு நிறைவு இறை நிறைவு ஆகியவற்றில் தளிர்ப்புற வேண்டும் என்றும், மாசிலா உடலாய் வைத்துக் கொள்ளத் தக்க வழி இதுவென்றும் பலர்க்கும் பயன்படும் வகையால் அடிகளார் வரைந்த கடிதம் ஒன்றும் கற்றுப் போற்றிக் கொள்ள வேண்டுவதாம். நீலா அரங்கர் வாழ்வின் எதிர்கால நலங்குறித்து அடிகள் எண்ணிய எண்ணத்தின் வண்ணம் காட்டுவதாகிய அக்கடிதம் வருமாறு:

டி.எம். அச்சுக்கூடம், பல்லாவரம் 2.4.1928

ஓம் சிவம்

அன்புமிக்க திருவாளர் திருவரங்கம் பிள்ளையவர் கட்கும், அருமைப் புதல்வி நீலாம்பாளுக்கும் சிவபெருமான் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!

28.3.1928 இல் நீங்கள் எழுதிய அன்புள்ள கடிதம் கண்டு பெருங்களிப்புற்றுச் சிவபெருமான் திருவடித் தாமரைகளை வழுத்தினோம். எம் அருந்தவப் புதல்வி நீலா அமையப்பர் திருவருளால் வயிறு வாய்த்தமை தமிழ்நாடு உய்வதற்கே. சைவமும் தமிழும் ஒருங்கு வளர்ப்பான் வேண்டி இந்நிலவுலகிற்கு எழுந்தருளிய எங்கள் திருஞானசம்பந்தப் பெருமானையோ, மங்கையர்க்கரசியாரையோ ஒத்த ஓர் அருமைத் திருமகவைத் திருவருளால் நீலா இனிது ஈன்பள். பிறக்கும் மகவு அறிவிற் சிறந்ததாயிருக்குமாதலால், அது குறும்பும் மிகுதியாய்ச் செய்யும்; அதற்காக ஒரு சிறு மணிப்பிரம்பும் இப்போதே தேடி வைக்கிறேன்.

மிகவுயர்ந்த நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இப்போது இடை இடையே நீலா பயின்றுவரல் வேண்டும்; சைவ சித்தாந்தத் தமிழ்ப் பெருங்கல்லூரி ஒன்று வைத்துச் சிறக்க நடத்தும் வகைகளையும் அவள் இப்போது நினைவிற் கொண்டு வரல் வேண்டும்; சுருசுருப்பும் முயற்சியும் இடையிடையே நிகழல் வேண்டும்; ஆங்கிலத்திலும் தமிழிலும் அரும்பெருஞ் சொற்பொழிவுகளைத் தான் பேரவைகளில் நிகழ்த்துவதாகவும், அச்சொற்பொழிவுகளைக் கேட்பா ரெல்லாம் பெரிதும் இன்புற்றுக் கிளர்ச்சியோடு, தான் சொல்லும் உயர்ந்த கருத்துக்களின் வயமாய் ஒழுகுபவர் களாகவும் நினைத்து வரல் வேண்டும். இன்னும் இவ்வாறே இம்மை மறுமைக்குரிய நலங்களைக் கருத்தூன்றி நினைந்து வரின் கருவிலுள்ள மகவுக்கு அவையெல்லாம் எளிதில் ஏறும்.

வயிற்றில் அழுக்கடையாதபடி நீரேற்றி கொண்டு துப்புரவு செய்தலை நீங்கள் இருவீரும் ஒழுங்காகச்செய்து வரல் வேண்டும்.

பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தப் பெருமான் வரலாற்றைச் சேக்கிழாரடிகள் அருளிய செய்யுள் வடிவில் நீங்களிருவரும் நாடோறும் பயின்று வருதல் வேண்டும். அம்மையப்பர் திருவடிகளில் நெகிழ்ந்த பேரன்பு நிகழ்தற்கு இதுவே சிறந்த வழி. என்னுடைய நூல்களை ஒழுங்காகப் பயின்று வந்தாற், புதுமுறையாராய்ச்சியால் உண்மை தெளிந்து

உலகிற்கு நன்மை புரியும் வகைகளும் கருவிலுள்ள மகவுக்கு ஏறும்.

'மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும்' என்னும் நூலால் எமக்குண்டாம் உழைப்பும் அதனை அச்சிட்டு வெளியிடுதற்குண்டாம் கவலையும் நாவினால் அளந்து சொல்லல் ஏலாது. இந்நூல் முடிந்தால் ஏனை நூல்களெல்லாம் விரைவில் முடிந்துவிடும். இந்நூல் முடியும் தறுவாயில் இருக்கின்றது.

இங்கு அனைவரும் திருவருளால் நலம்; உங்கே நுங்கள் எல்லீர் நலங்களையும் கோரித் திருவருளை வழுத்தும்,

அன்புமிக்க
மறைமலையடிகள்.

11. பொதுநிலைக் கழகம்

அடிகளார்க்குத் தனித்தமிழ் உணர்வு ஏற்பட்டபின், சமரச சன்மார்க்க சங்கம் என்பது பொது நிலைக்கழகம் எனப் பெயர் பெற்றதை அறிந்துள்ளோம். அக்காலையில் அதன் நோக்கங்களும் விரிவடைந்தன. அவற்றுள் ஒன்று ''தனித்தமிழ் மொழிப் பயிற்சியையும் தனித்தமிழ் நூற் பயிற்சியையும் எங்கும் பரவச் செய்தலும் மாணாக்கர்க்குப் பயிற்றுதலும்'' என்பதாகும். அதனோடு ''இக்கால நாகரிக உணர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஆங்கில மொழி நூற் பயிற்சியையும் ஆரிய மொழி நூற் பயிற்சியையும் உடன் சேர்த்துப் பயிற்றுதலும் இக்கழக முயற்சிக்கு உரியதாகும்'' என்பதையும் இணைத்துக் கொள்கிறார். *(மறைமலையடிகளார் உரைமணிக்கோவை - பொது நிலைக்கழகம் பக். 13-14).*

பொது நிலைக் கழக மாளிகையின் மாடியில் 'அம்பலவாணர் திருக்கோயில்' ஒன்றனை அடிகளார் உருவாக்கினார். பண்டைக் காலத்து ஆசிரியர்கள் முதல் இராமலிங்க அடிகள் இறுதியாகிய பெருமக்கள் அனைவரும், முழுமுதற் கடவுள் எல்லா உயிர்களின் உள்ளும், எல்லாப் பொருள்களின் உள்ளும் அவற்றின் வெளியும் நிறைந்திருந்து இடைவிடாமல் ஆடி, அவற்றையெல்லாம் ஆட்டும் இன்பக்கூத்தை நினைவுகூரும் வகையில் அவன் ஆடும் நிலையில் ஒரு திருவுருவத்தை அமைத்து அதனை வழிபட்டு வந்தனர். அவ்வழிபாடு இறைவன் அடையாளத்திலே செய்யப் பட்டாலும், உயிர்களை மேலேற்றும் பொருட்டு இறைவன் செய்யும் அருட்கூத்தின் இயல்பை விளக்கி நம் அறிவையும் அன்பையும் அவனிடம் பதிய வைப்பதால் அதுவே முழுமுதற் கடவுளை வழிபடும் சிறந்த முறையாகும் என்னும் கருத்து உடையவர் அடிகளார். அதற்குத் தக 'எல்லாச் சாதியாரும், எல்லாச் சமயத்தாரும் ஏதொரு வேற்றுமையுமின்றி வழிபட்டு உய்யும் பொருட்டு'' அம்பலவாணர் திருவுருவம் அமைந்த கோயில் ஒன்றை எழுப்பியதாகக் கூறுகிறார். அக்கோயிலில் அம்பலவாணர் திருவுருவத்தொடு அம்மையின் திருவுருவத்

தையும், சைவத்தமிழ்க் குரவர் நால்வர் திருவுருவத்தையும் ஆங்கு எழுந்தருளவும் செய்தார்.

இத்திருக்கோயில் குடமுழுக்கு 1931ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நடந்தது. அடிகளே குடமுழுக்கு விழாச் சடங்குகளை இனிய தமிழில் நிகழ்த்தித் தேவார திருவாசகத் திருமுறைகளை ஓதினார்.

அடிகள் குடமுழுக்குச் சடங்குகளை நிறைவேற்றிய பின்னர் அவர்தம் மாணவர்களும் மற்றையோரும் தாமே மலர்களை எடுத்துக் கடவுளரின் திருவடிகளில் இட்டு வணங்கினர். திருநீற்றையும் தட்டில் இருந்து அவரவர்களே எடுத்து அணிந்து கொண்டனர். வழிபாடு முடிந்த பின்னர், வந்திருந்தவர்கள் அடிகளுக்குக் காணிக்கை வைத்து வணங்கினர். அம்பலவாணர் கோயில் குடமுழுக்கு நிகழ்ந்த பின்னர், அம்மாளிகையின் மாடப் பகுதியிலேயே மணிமொழி நூல் நிலையம் ஒன்றனையும் உருவாக்கினார்.

பல்லாண்டுகளாக அரிய நூல்களைத் தொகுத்து வனப்பாக மேலுறையிட்டு மாசின்றிக் காத்து வந்தார் அடிகள். அந்நாளில் நாலாயிரம் நூல்கள் இருந்தன. தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களும் அவற்றிலும் ஆங்கில நூல்களும் மிகுதியாக இருந்தன. அந்நூல்களை அடிகளை அன்றி எவரும் தொடார். பிறந்த குழந்தையைப் பேணி எடுக்கும் செவிலியே போல அடிகள் நூல்களை எடுத்துப் பயன்படுத்தும் கலையே தனிச் சிறப்பினதாகும்.

''நூல்கள் எடுக்கும்போது மேலிருக்கும் நூல்களை எடுத்த பிறகே கீழிருக்கும் நூல்கள் எடுக்கப் பெறுமேயன்றி இடையில் இருந்து இழுக்கப் பெறா. ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட போழ்திற் சிலநூல்கள் எடுத்துத் தூசு நீக்கி மறுவற நோக்கி வைக்கப் பெறும். இங்ஙனமே ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இருமுறையாக நூல்கள் யாவும் தூசு நீக்கப் பெறும்.

இனிய தமிழ்நாட்டின் தவமகனாரான அடிகளைப் போல நூல்களைப் பொன்போற் பேணும் தகைமையுடையார் எவரும் இலரென எட்டுணையும் ஐயமின்றி இயம்பலாம். அடிகளின் உள்ளமும் நூல் நிலையம்! வீடும் நூல் நிலையம் ! இம்மட்டோ அடிகளையே தமிழ்நாட்டின் நூல்நிலையம் எனலாம்!'' என்று அடிகளின் நூல் நிலையம் குறித்துக் கூறுகிறார் புலவர் அரசு. (மறைமலையடிகள் பக். 105).

''கடவுள் நிலையை உணர்ந்து அவன் திருவருளைப் பெறுவதற்கும், அவனால் படைக்கப்பட்ட உலகத்தின் இயல்பையும், இவ்வுலகத்தில் இருக்கும் பலவகைப் பொருள்களின் இயல்பையும், உயிர்களாகிய நம் இயல்பையும், நம்மிற் பொதிந்திருக்கின்ற மும்மலங்களின் இயல்பையும் இம் மலங்களனின்றும் விடுபட்டு நாமடைதற்குரிய பேரின்ப வீட்டினியல்பையும் நாம் நன்குணர்ந்து நம் அறிவை வளர்த்து இன்பத்தைப் பெறுதற்கும், இவ்வியல்புகளையெல்லாம் நமக்கு நன்கு அறிவுறுத்தும் அறிவுடையோர் நூல்களின் உதவி நமக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாய் இருக்கின்றது.

''ஆதலினால்தான், கடவுளை வணங்கும் திருக்கோயில்களில் எல்லாம் பலவகைக் கலை நூல்களையும் ஆராய்ந்துணரும் பட்டி மண்டபங்கள் பண்டைக் காலத்தில் வகுக்கப்பட்டிருந்தன.

யாம் முன்னனயோர் கொண்ட முறைப்படி பின்னையோரும் செய்து நலம் பெறுவதற்காக அம்பலவாணர் திருக்கோயிலுடன் மணிமொழி நிலையமும் சேர்த்துப் பொது நிலைக் கழக நிலையத்தில் அமைத்திருக்கின்றோம்'' என்று தாம் நிறுவிய நூலக நோக்கத்தை அடிகளார் புலப்படுத்துகின்றார். (உரைமணிக் கோவை; பொது நிலைக் கழகம் 17-18)

இவ்விரண்டன் விழாக்களுக்குப் பின்னர் பொது நிலைக் கழக இருபதாம் ஆண்டு விழா நிகழ்ந்தது.

பல்லவபுரம் மணியம் தெய்வரத்தினம் என்பார் ஊர்ப் பொதுமக்கள் சார்பில் தலைவராய் நின்று விழாவுக்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்றதுடன் மாலையில் அம்பலவாணர் திருக்கோயிலில் எழுந்தருளிய அம்மையப்பரையும் நால்வரையும் ஊரில் எழுந்தருளச் செய்தார்.

ஆண்டு விழாவுக்கு அடிகள் அவைத் தலைமை பூண்டார். திருவாவடுதுறைத் திருமடத்துத் தலைவர் தவத்திரு. வைத்தியலிங்க தேசிகர் அடிகட்கு வழங்கிய பொற்பட்டாடை பொற்பட்டுப் போர்வை ஆகியவற்றைக் கருணானந்த அடிகள் சிறப்பித்துக் கொடுக்க அடிகள் அவற்றை ஏற்றருளினார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார் பொது நிலைக் கழக அமைப்பு, நோக்கம் ஆகியவை பற்றி விளக்கியுரைத்தார். அவர் அடிகளார் மாணவராவர்.

அடிகளாரின் மற்றொரு மாணவர் இளவழகனார் விரிவுரையாளர்களுக்கு வரவேற்பும் நன்கொடையாளர்க்கு நன்றியும் உரைத்தார்.

அடிகள் தகுதிமிக்க அப்பேரவையில் 'அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞானயோகமும்' என்னும் அரிய தலைப்பில் உரையாற்றினார். பின்னர் இரண்டு நாள்கள் அறிஞர் பலர் உரையாற்றிச் சிறப்புச் செய்தனர்.

இவ்விழாப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் உன்னிப்பாக எண்ணத்தக்கனவாம். அவை, அடிகளாரின் நிறையுள்ளமும் சமயச் சீர்திருத்த நோக்கும் பகுத்தறிவு வளமும் காட்டி மேம்படுத்துவனவாம். அவை:

1) மடத்துத் தலைவர்கள் எல்லாக் குலத்தவர்க்கும் வேற்றுமை இன்றிச் சமயச் சடங்குகள் கற்பிக்க முயற்சி செய்ய வேண்டும்.

2) கோயில்களில் வேற்றுமையின்றித் திருநீறு முதலியவை பெறவும் நிற்கவும் கோயில் தலைவர்கள் இடம் செய்தல் வேண்டும்.

3) பழந்தமிழ்க் குடிமக்கள் (தீண்டாதவர்) எல்லோரையும் தூய்மையாகத் திருக்கோயில்களிற் சென்று வழிபாடாற்றப் பொதுமக்களும் கோயில் தலைவர்களும் இடம் தரல் வேண்டும்.

4) கோயில்களில் பொது மாதர் திருப்பணி செய்தல் கூடாது.

5) வேண்டப்படாதனவும் பொருட்செலவு மிக்கனவும் சமய உண்மைக்கு முரண்பட்டனவும் அறிவுக்குப் பொருத்தம் அற்றனவும் ஆகிய திருவிழாக்களையும் சடங்குகளையும் திருக்கோயில்களிலே செய்தல் முற்றும் கூடாது. தூயதும் வேண்டப்படுவதுவுமான சடங்கும் திருவிழாவும் குறைந்த செலவிலே செய்தல் வேண்டும்.

6) சாரதா சட்டத்தை உடனே செயல்முறைக்குக் கொணர்தல் வேண்டும்.

7) கைம்பெண்ணைத் தாலியறுத்தல், மொட்டையடித்தல், வெண்புடவையுடுத்தல், பட்டினிபோடல் முதலியவை நூல்களிற் கூறியிருப்பினும் வெறுக்கத்தக்க இச்செயல்களை நீக்குதல் வேண்டும். கைம்பெண்மணம் முற்காலத்திலும் இருந்திருப்பதாலும் நூல்களில் ஒப்புக்

கொண்டிருப்பதாலும் அதனைச் செயல் முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

8) சாதிக் கலப்பு மணம் வரவேற்கத் தக்கது.

9) தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழுக்குத் தலைமை தருதல் வேண்டும்.

10) தமிழைத் தனிப்பாடமாக பி.ஏ. ஆனர்சு வகுப்புக்கு ஏற்படுத்தல் வேண்டும்.

என்பனவாம். இவற்றுள் முதல் எட்டுத் தீர்மானங்களும் பல்வேறு சட்ட வரைவுகளும் அரசு ஆணைகளும் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவனவும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்பனவுமாக இருத்தலை நோக்க அடிகளாரின் சமுதாய நலப்பார்வை இனிதின் விளங்கும். இனிப் பொது நிலைக் கழக அம்பலவாணர் திருமுன்னிலை தனித்தமிழ்த் திருமணக்களமாகவும் திகழ்ந்தமை ஒரு நிகழ்ச்சியால் அறியவரும்.

அடிகளின் மகளாருள் திரிபுர சுந்தரி என்பார் ஒருவர். அவரை மணங்கொள்ளக் குஞ்சிதபாதம் என்பார் விரும்பினார். அவர் புலவர் பட்டம் பெற்றவர். அடிகளார் மேல் அளவிலாப்பற்றும் மதிப்பும் உடையவர். குடும்பப் பிள்ளைகளுள் ஒருவராக உறவாடியவர். அவர்க்கு அடிகளார் குடும்பத்தினர் 'தூக்கிய திருவடி' எனப் பெயர்ச் சூட்டும் நடத்தினர்.

தூக்கிய திருவடியார்க்குத் திரிபுர சுந்தரியார் மேல் காதல் அரும்பி நின்றது. ஆனால், உடன் பிறந்தாராகவே சுந்தரியார் கருதி நின்றார். அவர்தம் புலமையும் இறைமைப் பற்றும் தொண்டுள்ளமும் அடிகளாரைக் கவர அவர்க்கு மணஞ்செய்து தரலாம் எனக் கருதினார்.

ஆயினும், ''திரிபுரம் தன் வாயால் 'இவரை மணக்க விரும்புகிறேன்' என்று சொன்னால்தான் திருமணத்திற்கு ஒருப்படுவேன்'' என்று அமைதி காத்தார் அடிகள். அவர் எதிர்பார்த்தவாறு திரிபுரம் இசைவு தந்த பின்னர், அம்பலவாணர் திருமுன்னிலையில் அடிகளாரே தனித்தமிழ்த் திருமணமாக நிகழ்த்தினார். இத்திருமணம் 8.6.1932இல் நிகழ்ந்ததாகும்.

பொது நிலைக் கழகப் பணி மேற்கொண்ட பின்னரும் அடிகளைத் தேடிச் சில பணிகள் எய்தின. துறவு நிலையுற்ற அடிகள், தேடி வந்த பணிகளையும் துறக்கவே செய்தார்.

பேரகராதிக் குழுவில் பணியாற்ற அடிகளாரை அழைத்தபோது, இறையடிச் சேவையை விட்டு மனிதர்க்குப் பணிபுரிதல் இயலாது என்று மறுத்து விட்டார். (25.7.1926 நாட்குறிப்பு)

திராவிட ஆய்வு மைய இயக்குநர் பணிக்குக் கா. சுப்பிரமணிய பிள்ளை வலியுறுத்த ''இறைப்பணிக்கு என்னை ஆட்படுத்திக் கொண்ட பிறகு அவ்வேலைக்கு விண்ணப்பிக்க மாட்டேன்'', பதிவாளரே அப்பொறுப்பை அளித்தால் ஏற்றுக் கொள்வேன் என்று பதில் எழுதினார் (8.12.1926 நாட்குறிப்பு)

பின்னர் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார், பேராசிரியர் திருவேங்கடசாமிப் பிள்ளை என்பாருடன் அடிகளைக் கண்டு, 'பி.ஏ. ஆனர்சு'த் தமிழ் வகுப்புக்குச் சிறப்புப் பேராசிரியராக அமர்ந்து சிறப்பிக்க வேண்டினார் (17.11.1932). ஆனால் அடிகள் ''நான் கல்லாடை பூண்டபின் யார்க்கும் அடுத்தபடியிலிருந்து பணி செய்தல் தக்கதன்று. அன்றியும் இப்பேராசிரியர் நிலையும் அதனை அடுத்து வரும் நன்னிலைகளும் நான் தனித்திருந்து அமைதியாக ஆராய்ச்சி செய்து நூல்களை எழுதித் தமிழுக்கும் தமிழ் மக்கட்கும் நற்பணி செய்து வருவதற்கு இடையூறாகும். இதனாலேயே சென்னை நகரினின்றும் நீங்கி இச்சிற்றூரில் குடியேறியுள்ளேன்'' என்று மறுத்துவிட்டார். (மறைமலையடிகள் வரலாறு 753)

இந்தி எதிர்ப்பு:

14.7.1937இல் இராசாசி அவர்கள் சென்னை அரசின் முதல்வரானார். அவர் ஆட்சிக்கு வந்த சில நாள்களில் 5, 6, 7ஆம் வகுப்புகளில் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்னும் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதனை எதிர்த்துத் தமிழ் அறிஞர்களும் தமிழர் கட்சித் தலைவர்களும் போர்க்களத்தில் இறங்கினர்.

''அந்தோ! வடமொழி வந்து தமிழைப் பெரிதும் வீழச் செய்துவிட்டதே. அதை மேலும் குற்றுயிர் ஆக்கிவிட்டதே ஆங்கிலம்! இனி இந்தியும் வந்தால் தமிழ் ஒழிதல் திண்ணமே'' என வருந்திய அடிகளார் நாட்டில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்புக் கண்டு வரவேற்றார்.

அடிகளார் 11.9.1937இல் திருவல்லிக்கேணிக் கடற்கரைக் கூட்டத்திலும் 3.6.1938இல் சைதாப் பேட்டையில் கூடிய இந்தி

எதிர்ப்பு மாநாட்டிலும் தலைமை தாங்கி இந்தியைக் கட்டாயமாக்குவதை எதிர்த்து முரசு கொட்டினார்.

4.10.1937இல் கோகலே மண்டபத்தில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் தலைமையும் கொண்டார் அடிகள். தமிழைக் காப்பதற் காகவும் இந்தியை எதிர்ப்பதற்காகவும் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் 'தமிழர் கழகம் என ஓர் அமைப்பைக் கண்டார். அடிகளார், ''இந்தி பொது மொழியா?'' என்னும் பெயரால் நூல் ஒன்று ஆக்கி மொழிப் போர் வீரர்க்குக் கருவி தந்தார்.

இப்போராட்டத்தில் அடிகளார் ஆற்றிய தொண்டு பெரிது. வலிய வாய்ப்பாக வந்த வேலைகளையும் உதறிய அடிகள் இப்பணியை விரும்பி ஏற்றுக் கொண்டார். அவரோடு அவர்தம் குடும்பத்தவர் பங்கும் இவ்வெதிர்ப்பில் சேர்ந்து நின்றது.

அடிகளாரின் மகனார் திருநாவுக்கரசு ஈரிடங்களில் மறியலில் ஈடுபட்டதற்காக ஆறு, ஆறு திங்கள் சிறைத் தண்டனை பெற்று ஒரே காலத்தில் அடையுமாறு சிறைப்பட்டார். அவர்தம் துணைவியார் ஞானம்மாள் தம் ஐந்து மாதக் கைக்குழந்தையுடன் சிறையுற்றார். மகன் மாணிக்கவாசகத்தின் துணைவியாரும் தம் மூன்று வயதுச் சிறுவனுடன் சிறையுற்றார். நீலாம்பிகையார் இந்தி எதிர்ப்பு மகளிர் மாநாட்டுத் தலைமை ஏற்று வீறு காட்டினார்.

1937இல் தோன்றிய கட்டாய இந்தி, எதிர்ப்பின் வலுவால் 1940இல் மறைந்தது. பின்பு நாடு விடுதலை பெற்றதும், 1948இல் மீண்டும் இந்தி கட்டாயக் கல்வியாகும் நிலைமை எழுந்தது. அப்பொழுது 17.7.1948இல் சென்னை தூயமேரி மன்றத்தில் கூடிய தமிழ் மாகாண இந்தி எதிர்ப்பு மாநாட்டில்,'' கட்டாய இந்தியைக் கொணராதீர்'' என அடிகள் அறைகூவல் விடுத்தார். அம்மாநாட்டில் திரு. வி. கலியாண சுந்தரனார், பெரியார், ஈ.வே. இராமசாமி, ம.பொ. சிவஞானம், அறிஞர் அண்ணா, நாரண துரைக்கண்ணன், பாவேந்தர் பாரதிதாசன், அருள் தங்கையா, அப்துல் மசீது ஆகியோர் பங்கு கொண்டனர்.

இன்ன இன்ன வாய்ப்புகள் எல்லாம் செய்தால் தான் மாநாட்டுத் தலைமை ஏற்க வரமுடியும் என்னும் உறுதிப்பிடியில் இருந்த அடிகள், இந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இன்றிச் சென்றமை அவர்தம் ஆர்வ விளைவாகும்.

தமிழர் மதமாநாடு:

தமிழர் சடங்குகள் தமிழிலேயே நடத்தப்படுதல் வேண்டும். தமிழர் தம் கோயில் வழிபாடு தமிழிலேயே நடத்தப்படுதல் வேண்டும் என்பன அடிகளின் உயிர்ப்பான கொள்கைகள்.

அவ்வகைத் தொண்டில் அடிகள் ஈடுபட்டதன் சான்றாக 16.7.1939இல் கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த திருமண மாநாட்டையும், 10.10.1940இல் பச்சையப்பன் மண்டபத்தில் நிகழ்ந்த அனைத்து இந்தியத் தமிழர் மத மாநாட்டையும் குறிப்பிடலாம்.

தம்மக்கள் திருமணங்களைத் தமிழ்மறை ஓதித் தமிழ் நெறியில் தாமே முன்னின்றும், சடங்கு புரிந்தும் நடை முறைப்படுத்தியவர் அடிகள். அவ்வழியில் திரு.வி.க.வும் செயலாற்றினார்.

தமிழர் திருமண மாநாட்டு வரவேற்பாளராகக் கா. சுப்பிரமணியபிள்ளை இருந்தார். ச. சோமசுந்தரபாரதியார் தலைவர் சிறப்புரைத்து அடிகளைத் தலைமை தாங்க வேண்டினார். அடிகள் பேருரை சிறந்த ஆய்வுரையாகத் திகழ்ந்தது. அது 'தமிழர் மதம்' என்னும் நூலில் இடம் பெற்றது.

தமிழர் மதமாநாட்டு வரவேற்புரையையும் கா. சுப்பிரமணிய பிள்ளையே வழங்கினார். அதுவே தனி நூலாகிச் சிறந்தது. த.வே. உமாமகேசுவரம் பிள்ளை மாநாட்டுச் சிறப்புரையாற்றினார். ச. சோம சுந்தரபாரதியார் தமிழ்க் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். அடிகள் தலைமை தாங்குமாறு அமைச்சர் முத்தையா முதலியார், செட்டிநாட்டு அரசர் முத்தையாச் செட்டியார், திரு. வி. கலியாண சுந்தரனார் ஆகியோர் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசினர். அடிகள் 'தமிழர் மதம்' என்னும் பொருளை ஒரு நூலுரையாகவே வழங்கினார்.

திருவள்ளுவராண்டு:

அடிகளார் ஆக்கச் செயல்கள் பலவற்றுள் திருவள்ளுவர் ஆண்டு கண்டமையும் ஒன்றாகும்.

தமிழர்க்கெனத் தனி ஆண்டுமுறை வேண்டும் என்றும், அவ்வாண்டு முறை உலகம் போற்றும் ஒப்பற்ற மறைநூலை ஆக்கிய தமிழ்ப் பேராசிரியர் திருவள்ளுவர் பெயரால் அமைதல் வேண்டும் என்றும் ஆராய்ந்தார் அடிகள். சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்களுக்கு முற்பட்டதும் சங்கநூல் ஆட்சியைக் கொண்டதும், தொல்காப்பிய நெறியில் அமைந்ததும் ஆகிய அதன் காலத்தைக் கி.மு. 31 எனத் தீர்மானித்தார். திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் பனை (அனுடம்) நாள் எனவும் திட்டப்படுத்தினார்.

அடிகளின் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு 'திருவள்ளுவர் திருநாட்கழகம்' என ஒரு கழகமே உருவாயிற்று. திருநாள் விழாவும் நடத்தியது. அக்கழகம் வெளியிட்ட திருவள்ளுவர் திருநாட்கழக மலர் மிக அரியதாகும். அடிகளார் தந்த திருவள்ளுவர் ஆண்டுத் திட்டமே கி.பி; கி.மு., என்பது போல் தி.பி; தி.மு என வழங்கப்படுகின்றது. திருவள்ளுவருக்குப்பின், திருவள்ளுவருக்கு முன் என்பது இவற்றின் விரிவாகும். கி.பி. ஆண்டுகளுடன் 31 ஆண்டுகளைச் சேர்க்கத் தி.பி. ஆண்டு கிடைக்கும்.

இவ்வாண்டு முறையைத் தமிழ்ப் பற்றாளர்கள் ஏற்றுப் போற்றினர், நாட்காட்டி, நாட்குறிப்பு, கணியம் (பஞ்சாங்கம்) ஆகியவற்றிலும் மேற்கொண்டனர்.

ஈழநாடு திருவள்ளுவர் ஆண்டை ஏற்றுப் போற்றியது. அதனை வற்புறுத்தி நிலைப்படுத்தியவர் அறிஞர் கா.பொ. இரத்தினம் ஆவர். பின்னே தமிழ்நாட்டு அரசும் கலைஞர் மு. கருணாநிதி காலத்தில் அவ்வாண்டு முறையை ஏற்றுப் போற்றுவதாயிற்று. இவ்வாண்டு முறையை மேலும் சீராக்கித் திங்களையும் தமிழ் வழிய தாக்கி நடைமுறைப்படச் செய்தவர் ஞா. தேவநேயப் பாவாணர் ஆவர்.

சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் 19.5.1935இல் கூடிய திருவள்ளுவர் நினைவுநாள் பெருவிழாவில் 'திருவள்ளுவர் திருக்குறள்' பற்றி அரிய ஆய்வுப் பொழிவு நிகழ்த்தினார் அடிகள். அதில் ''திருக்குறள் கற்பார் நோக்கம் எதுவாக இருத்தல் வேண்டும்'' என்பதும், ''வள்ளுவப் பொதுமை'' என்பதும் குறிப்பிடுதல் தகும்.

''திருக்குறள் கற்பது அதிற்கண்ட குறைபாடுடையார் இவர் எனச் சுட்டி அவர் குறைபாடுகளை உலகறியத் தூற்றுவதற்கு அன்று. அவ்வாறு செய்தல் பெரிதும் தவறாகும். மற்றுத் திருக்குறளைக் கற்பது எற்றுக்கு எனின், குறட்பாக்களில் காணும் குற்றங்கள் தன்பால் உள்ளனவா என்று ஆராய்ந்து பார்த்து அவையிருந்தால் அவற்றை நீக்கிக் கொண்டு குறள் கூறும் அறவழிகளில் நடத்தற்கேயாம்'' என்பது திருக்குறள் கற்பவர் நோக்கம் பற்றியது.

''உலகிலுள்ள வேறுபடு சமயத்தவரும் நாட்டவரும் இனத்தவரும் ஒன்றுபட்டு நன்னெறி நின்று இன்புற்று வாழப் பொதுமறை ஒன்று வேண்டும். அம்மறை திருக்குறளே. ஆதலின், அவரெல்லாரும் திருவள்ளுவரையும், அவர் குறளையும் உலகத்

தலைமைப் பொதுக்குருவென்றும், பொதுமறை என்றும் ஏற்றுக் கொள்வராயின் யாம் அவ்வொற்றுமை நலங்கருதித் திருவள்ளுவரைப் பொதுமையாளரெனவும் திருக்குறளைப் பொதுமறை எனவும் கூறுவோம். திருவள்ளுவர் திருக்குறள் பற்றிய எமது தனிக் கருத்துக்களை (திருவள்ளுவர் சைவர் எனவும், திருக்குறள் சைவக் கோட்பாடு எனவும் கொண்ட கருத்துக்களை)க் கூறமாட்டோம்'' என்பது வள்ளுவப் பொதுமைக் கருத்தாகும்.

'திருக்குறள் ஆராய்ச்சி' என்பது அடிகளார் இயற்றிய நூல்களுள் ஒன்றாகும்.

12. சீர்திருத்தம்

அடிகளார் சமயம், இறைமை ஆகியவற்றில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர். துறவும் பூண்டவர். எனினும் அவர்தம் சீர்திருத்தக் கொள்கை மிகப் பாராட்டுக்கும் சிறப்புக்கும் உரியதாகும்.

கல்வி : கல்வி எல்லார்க்கும் பொதுப்பொருள் என்பது தமிழ்நெறி. நம் செல்வர்கள் நம் தாய்மொழிப் பயிற்சிக்கு உதவாமல் பிறமொழிப் பயிற்சிக்குச் செலவிடுதல் ஐயகோ! கொடிது! கொடிது! தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை வாங்கத் தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான் என்பதாம்.

நம் தமிழ்நாட்டுக்கு ஆறாயிர நாழிகை வழிவிலகிக் கிடக்கும் மேல்நாட்டிலுள்ள கிறித்தவக் குருமார்கள் இந்நாட்டுக்கு வந்து நூறாயிரக் கணக்காக நம் நகரங்களிலும் சேரிகளிலும் பல்லாயிரக்கணக்கான கல்விச் சாலைகள் திறப்பித்தும் மாதா கோயில்கள் கட்டுவித்தும் இந்நாட்டவர் எல்லார்க்கும் ஏதொரு வேற்றுமையும் இன்றிக் கல்வி கற்பித்தும் கடவுள் உணர்ச்சி உண்டாக்கியும் பேருதவிபுரிந்துவராநிற்க, நம் நாட்டு ஏழை மக்கள் ஒரு நாளுக்கு ஒரு வேளை நல்லுணவும் இன்றிப் பட்டினியும் பசியுமாய்க் கிடந்து, நெற்றிக் கண்ணீர் நிலத்தில் விழப் பாடுபட்டுத் தேடிக் கொடுக்கும் பெரும் பொருளைப் பேழை பேழையாய் வைத்திருக்கும் செல்வர்கள், தமது பெருமைக்கும் தமது நலத்திற்கும் தமது மனைவி மக்களின் ஆடை அணிகலங்கட்கும் தம் வேடிக்கை விளையாட்டுகட்குமாகத் தமது பெரும் பொருளைச் செலவு செய்து கொண்டு, தமக்கு அப்பொருளைச் சேர்த்துக் கொடுக்கும் ஏழைகளிற் பெரும்பாலாரைத் தீண்டாதவரென ஒதுக்கி வைத்தும் அவர்க்கு நல்லுணவும் நல்வெள்ளாடையும் கூடக் கொடாதும் அவர் வணங்குதற்குத் தம் கோயில்களின் உள் வருதல் கூடத் தகாதென விலக்கியும், அவர்தம் மக்களொடு ஒப்ப இருந்து கல்வி பயிதலும் ஆகாதென அவரைத் துரத்தியும், அவ்வேழை மக்கட்குப் பெரும் கொடுமை செய்து வரல் தெய்வத்திற்கு அடுக்குமா? ஏழை யழுத கண்ணீர் சுவடறத் தேய்த்து மாய்க்கும் காலம் அணுகுதல் ஓர்மின்!

இரவில் திருடும் திருடர்க்கும் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் வழிப்பறிக் காரர்க்கும் கல்வியை உதவியாய்க் கொண்டு உயர்நிலைகளாகிய மாறுகோலம் பூண்டு கைக்கூலி வாங்கும் பகற் கொள்ளைக்காரர்க்கும் வேறுபாடு உண்டோ? ஏழைக் குடும்பங்களைக் கெடுப்பார் எவ்வளவு கற்றுமென்?

புராணங்கள் என்பன உயர்ந்த அறிவில்லாப் பொதுமக்கட்கு (இறைவன் வரம்பிலா ஆற்றலையும் அடியாரைக் காக்கும் அருட்டிறங்களையும்) உணர்த்துதல் வேண்டி இரக்கமுள்ள சான்றோரால் கட்டி வைக்கப்பட்ட பழைய கதைகளை யுடையனவாகும்.

பின்னே முழுமுதற் கடவுளை மக்கள் நிலைக்குத் தாழ்த்தியும் தாம் வணங்கத் துவங்கிய மக்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியும் கடவுள் நிலைக்கு மாறான பலகட்டுக் கதைகளைக் காலங்கள்தோறும் புதிய புதியவாய் உண்டாக்கி அவைகளையும் புராணங்கள் என்னும் பெயரால் வழங்கவிட்டனர்.

-உரைமணிக் கோவை, 147-8

திருமணம்:

சிறுபருவ மணத்தை ஒழித்தல் வேண்டும். பெண் மக்களுக்கு 20 ஆண்டும் ஆண் மக்களுக்கு 25 ஆண்டும் நிரம்புமுன் மணஞ்செய்தல் ஆகாது. ஆணையாவது பெண்ணையாவது விலை கொடுத்து வாங்கும் கொடிய பழக்கத்தை வேரோடு களைவதற்கு எல்லாரும் மடிகட்டி நிற்றல் வேண்டும்.

முப்பது ஆண்டுகட்கு உட்பட்ட பெண்கள் கணவனை இழந்துவிடுவார்களானால் அவர்களைத் திருமணம் செய்து கொடுத்தல் வேண்டும். ஆண்மக்களில் 40 ஆண்டுகட்கு மேற்பட்டவர்கள் இளம் பெண்ணை மணம் செய்தல் ஆகாது.

நாற்பது ஆண்டுகட்கு மேற்பட்ட ஆண் மணஞ் செய்வராயின் அவர் வயதொத்த கைம்பெண்ணையே மணம் செய்து கொள்ளும் படி தூண்டுதல் வேண்டும்.

சீர்திருத்தக் குறிப்புகள்

சாதி ஒழிப்பு:

ஒருவனுக்கு ஒரு பொல்லாத நோய் வந்தால் அதனை நீக்கலுறுவோன் அந்நோயை உண்டாக்கின மூலத்தை அறிந்தாலன்றி அவன் அதனை முற்றும் நீக்க மாட்டுவன் அல்லன். ஒரு நோயின் மூலத்தை அறிந்து அதனை அடியோடு களைந்த

அளவானே அந்நோய் முற்றும் ஒழிந்துபோம். அதுபோலச் சாதி வேற்றுமைகளை உண்டாக்கிய மூலங்களையும் நன்கு ஆய்ந்து கண்டு பின்னர் அவ்வேற்றுமைகளை ஒழித்தலே இன்றியமையாது செயற்பாலது ஆகும்.

சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் - 77

புதுநீர் வரத்தின்றிப் பழைய கட்டுக்கிடைத் தண்ணீரேயுள்ள ஒரு குளம் நாற்றமெடுத்து நோய்ப் புழுக்களை உண்டாக்கி யார்க்கும் பயன்படாமல் வரவர வற்றி வறண்டு முடிவில் நீரற்றுப் போதல் போல, அகல உள்ள குடிகளில் அறிஞராய் வலியராய் நல்லராய்ப் பிறந்தார்தம் புதிய இரத்தமானது தமது பழங்குடிப் பிறந்தார்தம் உடம்புகளில் வந்து கலத்தற்கு இடம் கொடாத போலிச் சைவக் குடும்பத்தினரும் தமது வலிவிழந்து பழைய இரத்தம் கெட்டு அகத்தும் புறத்தும் நோய்களுக்கு இரையாகி வற்றி வறண்டு தாமும் இருந்த இடம் தெரியாமல் சில காலத்தில் மாய்ந்து போகின்றனர்.

சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் 81-2

ஐயோ! இந்து மக்களே, ஓ! போலிச் சைவர்களே, இன்னும் நுங்கட்கு இரக்கமும் நல்லறிவும் வந்த பாடில்லையே. நுங்களை நுங்கள் கால்வழியற்றுப் போக வேரோடு வெட்டி மாய்த்து வரும் பொல்லாத கோடரியாய்ச் சாதி வேற்றுமை இருப்பதுணராது அதனை நுமக்குச் சிறப்புத் தருவதாக எண்ணி நீங்கள் மகிழ்வது எவ்வளவு பேதைமை?

ஊரின் நடுவே வெடிமருந்துக் கொத்தளத்தின் மேலிருந்து கொள்ளிக் கட்டையைச் சுழற்றி மகிழ்வோனுக்கும் நுங்கட்கும் யாம் வேற்றுமை காண்கிலோம். ஒரு தீப்பொறியானது அக்கொத்தளத்தை வெடிக்கச் செய்து அவனையும் அவ்வூரிலுள்ளோர் அனைவரையும் சிறிது நேரத்தில் படுசாம்ப ராக்கிவிடுவது போலப் பாழுஞ்சாதி வேற்றுமையால் இனியுண்டாவதற்கு மும்மரித்து நிற்கும் ஒரு சிறுகலகமானது நுங்களையும் நுங்கள் இறுமாப்பினையும் நுங்கள் சாதிக்கட்டுப் பாடுகளையும் எளிதில் மாய்த்தொழிக்குமேயென அஞ்சு கின்றோம். வெள்ளம் வருவதற்கு முன்னரே அணை கோலி வைத்தல் அறிவுடையார் செயலாதல் போலப் பெருந்தீமைக்கு ஏதுவான கலகம் வருவதற்கு முன்னமே அதனை வருவிக்கும் சாதி வேற்றுமையினைத் தொலைத்துவிடுங்கள்.

சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் 88-89

இழிந்த குடி ஒன்றிற் பிறந்தோர் அதற்குரிய இழிந்த தன்மைகளை விட்டுத் தூயராய் வரும் போது தம்மை மீண்டும் அவ்விழிந்த குடிக்குரிய பெயராற் கூறித் தம்மைத் தாமே தாழ்வுபடுத்திக் கொள்ளல் ஆகாது. ஒரு தூயவர் தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ள வழிதேட வேண்டுமேயல்லாமல், 'பிறர் தம்மை உயர்த்துவார்' என்று நம்பியிருத்தலாகாது. ஏனெனில், நம்மனோர் சக்கையைப் பிடித்துச் சாற்றை ஒழுகவிடும் பன்னாடையைப் போல்வர். உயர்ந்தார் ஒருவர்பால் உள்ள குற்றங்களை ஆராய்ந்து அவற்றையே பேசும் நீரர் அல்லாமல், அவர்பால் உள்ள உயர்ந்த நலங்களைப் பேசும் இயல்பினர் அல்லர். ஆதலால், இத்தகைய தீய மக்களிடையே தூயராய் உயர்வார் தமது இழிகுடிப்பிறப்பையுரையாது, தம்மைச் சைவர் எனவும் பார்ப்பனர் எனவும் கூறி ஒழுகுதல் வேண்டும். தம்மோடு உடனிருந்து உணவு கொள்ளாதவர் வீட்டில் தாமும் உணவு எடுத்தல் ஆகாது. இம்முறையை விடாப்பிடியாகக் கொண்டு ஒழுகினால்தான் கீழோரில் தூயராய் வருவார் உயரக்கூடும். இவ்வாறு நாளடைவிற் செய்தே பார்ப்பனரும் சைவரும் உயர்ந்தனர்.

சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் 96

காதல் : சாதி வேற்றுமை என்னும் கொடிய தூக்குக் கயிறானது காதல் அன்பின் கழுத்தை இறுக்கிவிட்டது. காதல் அன்பிற் சிறந்து மறுவற்ற மதிபோல் விளங்கத் தக்கவரான நம் பெண்மணிகளின் கற்பொழுக்கத்தை நிலைகுலைத்து அதனைப் பழி பாவங்களால் மூடிவிட்டது. எந்தப் பெண் மகளாவது தான் காதலித்த இளைஞனை மணங்கூட இடம் பெறுகின்றனரா? எள்ளளவும் இல்லையே ஏன்?

அவள் கயல்மீனை ஒத்த கண்ணழகியாக இருந்தாலென்ன? கண் குருடான ஒருவனைத் தவிர வேறு மணமகன் தன் இனத்தில் கிடைத்திலனாயின் அவள் அவனையே தான் மணந்து தீரல் வேண்டும்.

அவள் முத்துக் கோத்தாலன்ன பல்லழகியாய் இருந்தா லென்ன? தம் பாழும் இனத்தில் ஒரு பொக்கை வாய்க்கிழவனைத் தவிர வேறுமணமகன் கிடைத்திலனாயின் அவள் அவனையே தான் மணந்து தீரல் வேண்டும்.

பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்-24

எல்லா மக்களும் ஒரு தந்தையின் பிள்ளைகளே ஆதலால் அவரெல்லாம் உடன்பிறப்பு உரிமை பாராட்டி எல்லாவற்றாலும்

ஒருங்கு அளவளாவுதலே நன்றென்று ஏசுநாதரும் மகமது நபியும் கூறிய அறிவுரைகளைக் கேட்டு மேல்நாட்டு மக்கள் எல்லாரும் ஏதொரு வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஒழுகி உலகிற் சீரும் சிறப்பும் எய்தி வருதலைக் கண்கூடாகக் கண்டு வைத்தும் நம் தெய்வ ஆசிரியர் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று முடித்துக் கூறிய அறிவுரையினை நாம் கடைப்பிடியாது வாழ்நாள் எல்லையளவும் சாதியிறுமாப்புப் பேச்சைப் பேசிக் கூற்றுவனுக்கு இரையாய் ஒழிதல் பிறநாட்டவராற் பெரிதும் இழித்துரைக்கப்படுகின்றது அன்றோ!

பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் 82

13. நாள் வழிக்கடமை

''பிற்பகல் 4 மணி இருக்கும். பல்லாவரத்தில் அடிகளார் மாளிகைத் தோட்டத்தில் மெல்ல நுழைந்தேன்.

நல்லகாலம் போலும்! அடிகளார் தமது மாளிகையின் முன் தாழ்வாரத்தில் கட்டைச் சுவர்மேல் எதிர்முகமாகத் தனியே அமர்ந்திருந்தார். ஏதோ ஓய்வாகப் படித்துக் கொண்டிருந்தார். அத்தகைய அமர்த்தலான நிலையை இறுதிவரையில் அவர்கள் வாழ்க்கையில் நான் பார்த்ததே இல்லை. அடியேற்கு என்றே ஒருநாள் மட்டும் அவ்வாறு அமர்ந்திருந்தார்கள் போலும்!'' என்று அடிகளின் மாணவர் அழகரடிகள் எழுதியுள்ளார். அடிகளார் எவ்வேளையில் எந்நிலையில் இருப்பார் என்பது வரையறுத்த திட்டம்போல் அமைந்தமையால் தான், ''அப்படி இருந்த நிலையை நான் பார்த்ததே இல்லை'' என்கிறார். (மறைமலை யடிகளார் வரலாற்று மாட்சி).

அடிகளின் நாள் வழிக் கடமைகள் வருமாறு:

காலையில் எட்டுமணிக்குத் துயிலில் இருந்து எழுவார். பாதக்குறடு அணிந்தவாறே சிறிதுபொழுது பொதுநிலைக் கழக மாளிகையைச் சுற்றியுள்ள பூங்காவில் உலாவுவார். பிறகு நீரேற்றி (எனிமா) வைத்துக் கொண்டு குடல் தூய்மை செய்வார்.

11 மணி வரை காலைக் கடனும் நீராடுவதும் இறைவழிபாடும் நடைபெறும். பிறகு கஞ்சியுணவு கொள்வார். அவ்வுணவையும் ஆர அமர இருந்து சிறிது சிறிதாகப் பருகுவார். அதனுடன் பக்குவப்படுத்தப்பட்ட திராட்சை முதலிய பழவகைகளையும் சுவைத்து உண்பார். இட்டலியும் சில நாளில் உணவாகும். காலைச்சிற்றுண்டி முடிந்ததும் அரைமணி நேரம் மறுபடியும் உலவுவார். பிறகு இருக்கையில் இருந்து நூலாய்வார்; கடிதம் எழுதுவார்; நூல் எழுதுவார்.

அடிகளின் இருக்கையும் மேசையும் எழுதுகோலும் நூல்களும் தூயவைகளாக இருக்கும். எழுதுகோலும் நூல்களும் தமக்குரிய இடத்தை விட்டு மாறியிருந்தது எப்போதும் இல்லை.

மாளிகையின் கீழும் மேலும் தனித்தனியே மேசை நாற்காலி முதலிய படிக்கும் வசதிகள் உண்டு. ஓய்வாய் இருக்கும் போது சாய்ந்து படிக்கச் சாய்வு நாற்காலி பஞ்சணையுடன் உண்டு.

பகலுணவு $2\frac{1}{4}$ மணிக்கு மேல் 3 மணிக்குள்ளாக நடைபெறும். இந்துப்பையே கறி முதலியவற்றில் சேர்த்துக் கொள்வார். மிளகாயும் புளியும் சேர்க்க மாட்டார். ஆங்கிலக் காய்கறியும் பட்டாணியும் கோசுக் கீரையும் பொன்னாங்கண்ணிக் கீரையும் மிளகு நீருமே அடிகட்கு விருப்பம். எலுமிச்சம் பழமே புளிக்கு மாறாகச் சேர்க்கப்படும். எலுமிச்சம் பழத்தொக்கு அடிகளுக்கு மிகவும் விருப்பமானது. உண்ண அரைமணி நேரம் ஆகும்.

உணவுக்குப்பின் சிறிது உறங்குவார். பிறகு நூல்களுக்கு உறையிடுதலும் ஆங்கில நூல்களின் ஓரம் பிரித்தலும் செய்வார். 6 மணிக்கு இஞ்சி நீர் பாலுடன் கலந்து பருகுவார். மறுபடியும் எழுதுதலும் நூலாராய்தலும் ஒழுங்காகச் செய்வார். பதினோரு மணிக்கு நீரேற்றி வைத்துக் கொள்வார். வேது பிடிப்பார்.

இரவு ஒரு மணிக்கே சிற்றுண்டியும் பாலும் உண்பார். 2 மணிக்கே படுக்கைக்குச் செல்வார்.

காலையில் துயிலில் இருந்து எழுந்தவுடன் கண்ணாடியிலே தம் உருவத்தை நோக்கிக் ''கல்வி செல்வம் நலம்'' என்னும் தொடரைப் பன்முறை கூறுவார்.

ஆடையைக் காலைமாலை இருபோதும் மாற்றுவார். எண்ணெய் கலந்த சிற்றுண்டிகளைத் தொடவே மாட்டார். நெய்யே யாவற்றிற்கும் பயன்படல் வேண்டும். தாளிப்பதும் நெய்யிலேதான். கடுகு சேர்க்க மாட்டார். காப்பி தேயிலை முதலிய குடிவகைகள் அவருக்கு வெறுப்பானவை. பசும்பாலும் நெய்யுமே அவருடைய செலவில் மிகுதியான பொருளைக் கவரும். இவ்வாறு தம் உடலைப் பேணும் வகையில் மிகவும் விழிப்பாகவே இருப்பார். தாம் சொற்பொழிவு செய்யப் போகும் இடங்களிலும் இவ்வகை உணவே வேண்டுமென முன்னரே எழுதிவிடுவார்.

அடிகளுக்கு நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உண்டு. ஒவ்வொரு நாளும் தம் நூல் நிலையத்தில் உள்ள நூல்களில் ஒரு பகுதியை எடுத்துத் தூசி தட்டிப் பிரித்துப் பார்த்து வைப்பது வழக்கம். தம் கைப்படவே கடிதங்கள் எழுதுவார். விளக்குகளைத் தாமே துடைத்து வைப்பார். கடிகாரத்திற்குச் சாவி கொடுப்பார். நாட்காட்டியில் நாள்களை மாற்றுவார். வீட்டில் தூசி தும்புகள்

தோட்டத்தில் உதிர்ந்த சருகுகள் யாவும் அப்போதைக்கு அப்போதே நீக்கப் பெறல் வேண்டும். வீட்டில் உள்ள பொருள்கள் தத்தமக்குரிய இடங்களிலேயே இருத்தல் வேண்டும். இத்தகைய கட்டொழுங்குகளைப் போற்றியவர் அடிகளார் (மறைமலையடிகள் வாழ்வும் பணியும்; புலவர் அரசு. 124-126).

14. அடிகளின் இறுதிக் காலம்

அடிகளார் தம் மக்களுக்கு வேண்டும் கல்வியைத் தந்தார். உரிய காலத்தில் திருமணமும் செய்வித்தார். அவரவர் காலிலே நிற்கும் நிலை உண்டாகிய அளவில் தனிக்குடும்பமாக வாழ ஏற்பாடு செய்தார். இடை இடையே அவர்கள் வந்து செல்லவும், அடிகள் போய்க்கண்டு மகிழவும் ஆகிய நிலையில் வாழ்வு நடந்தது.

நீலாம்பிகையாரின் முதன் மகள் மங்கையர்க்கரசி என்பவர். அவர் தம் பன்னிரண்டாம் வயதில் இறந்தார். பேரன்புடைய அவர் மறைவு பெற்றோரை மிக வருத்தியது. நீலா நோய்ப்படுக்கையர் ஆனார். அவர்க்கு மருத்துவம் செய்யும்போதே திருவரங்கர் படுக்கையில் வீழ்ந்தார். அவர் 28.4.44 இல் பேரா இயற்கை அடைந்தார்.

மகள் பிரிவும் கணவர் பிரிவும் நோயுடன் சேர்ந்து வாட்டின. அதனால் நீலாம்பிகையார் 5.11.45இல் இயற்கை எய்தினார்.

அடிகளை மருகர் பிரிவும், மகள் பிரிவும் வருத்தின. நீலாவின் அன்னை சவுந்தரம் அம்மையார் நோயர் ஆனார். மூன்றாண்டுகள் அளவு, கிடந்த கிடையாகி 24.5.50இல் இயற்கையோடு ஒன்றினார்.

இப்பிரிவுகள் தொடர்ந்து எய்துங்கால் எவரைத்தான் வாட்டா!

15.8.1950இல் அடிகள் நோயெனப் படுத்தார். ஒரு கிழமை கஞ்சியும் பழச்சாறும் பருகினார். மருத்துவர் குருசாமி முதலியார் வந்து ஆய்ந்து, ‘‘ஈரற்பை வீங்கியுள்ளது. இனிப் பிழைப்பது அருமை’’ என்றார். அடிகளின் குடும்ப மருத்துவர் ஆனந்தர் வந்தும் மருத்துவம் புரிந்தார்.

அம்பலவாணர் திருவுருவை நோக்கிக் கொண்டு கைகுவித்தும் வாழ்த்தியும் இறையடியைச் சிந்தித்தே நின்றார் அடிகள். அவர் தேடிய செல்வம் நூல்கள், நூலகம் ஆகியவை பயன்படுத்தப்பட வேண்டிய வகை குறித்து இறுதியாவணம் (Will) எழுதினார்.

தாம் தொகுத்த மணிமொழி நூல் நிலையம் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் 'மறைமலையடிகள் நூல் நிலையம்' என்னும் பெயரால் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தம் நூல்களைப் பதிப்பித்து அதனால் வரும் வாரமுறை வருவாய் தம் குடும்பத்தைச் சார வேண்டும் என்றும் இப்பணியைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் எழுதினார். இதனை நிறைவேற்றற் குழுவினராக எழுவரையும் குறிப்பிட்டார்.

இறுதியாவணம் எழுதி அதன்பின் ஐந்து நாள்கள் அடிகள் தம் பருவுடலம் தாங்கியிருந்தார். 15.9.1950 மாலை 3.30 மணிக்கு அடிகளார் பூத உடல் நீங்கிப் புகழுடல் உற்றார்.

மறுநாள் மாலையில் அடிகள் உடல் பூம்பல்லக்கில் வைக்கப்பட்டு பல்லாவரம் நன்காட்டுக்குக் கொண்டு சென்று எரியூட்டப்பட்டது.

இரா.பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசனார், கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் தருமாம்பாள் முதலியோர் இரங்கலுரை ஆற்றினர்.

17.9.50இல் அடிகளார் உடற்பொடி கடலோடு கலந்தது.

15. புகழ் மாலை

''அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரரும் ஓருருக் கொண்டு வேதாசலனாராகப் போந்து இற்றைத் தமிழ் வளர்க்கிறார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனார் தமிழ் செந்தமிழ்-சங்கத்தமிழ் என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவும் செய்தது. இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ்நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனார்க்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறுவேன்.''

-திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் - 163

''தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகட்கு உண்டு. அவர் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும்; மரமும் முழங்கும்.''

''அடிகள் பேச்சு பல பேச்சாளரைப் படைத்தது; எழுத்து பல எழுத்தாளரை ஈன்றது; நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது; அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள் என்று கூறல் மிகையாகாது.

-திரு.வி.க., மறைமலையடிகளின் மாண்பு - முன்னுரை

''தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையும் செய்யுளுமாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிர் அளித்தவர் மாநிலத்தில் மக்கள் உள்ளவரை மறையாப் புகழ் பெற்ற மறைமலையடிகளே.

-ஞா. தேவநேயப் பாவாணர்; வடமொழி வரலாறு; முன்னுரை.

''மறைமலையடிகள் தனித்தமிழில் வீர நெஞ்சினர். ஆயினும் வடமொழியில் ஈரநெஞ்சினர்; அதன் பெருமையை நன்கு

கற்றறிந்தவர்; சாகுந்தல நாடகத்தில் தனிப் பற்றுக் கொண்டவர்; அதனை மொழி பெயர்த்ததோடு தனி ஆய்வும் எழுதியவர். அதனால் அன்றோ தவத்திரு காஞ்சி காமகோடிப் பெருமகனார் அடிகளின் மொழி பெயர்ப்புச் சாகுந்தலத்திற்குப் பரிசுதரும் அறக்கட்டளை வகுத்தருளினார். இவ்வொப்புதல் ஒன்றே அடிகளின் வடமொழியன்புக்குச்சாலும் கரியாகும்'' (சான்றாகும்)

வ.சுப. மாணிக்கனார்.

''விரித்தது தொகுத்தல் என்னும் உத்தி பற்றித் தமது சொற்பொழிவில் விரித்து ஓதப்பட்ட பொருள்கள் யாவற்றையும் முடிவில் தொகுத்துரைக்கும் திறம் அடிகளார்க்கென்றே அமைந்த அரும்பண்பாகும்.''

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

''மறைமலையடிகளும் கா.சு. பிள்ளையும் என் வலக்கையும் இடக்கையும் போன்றவர்''

பெரியார் ஈ.வே. இராமசாமி

சிலப்பதிகாரத்தில் 'சித்திரப்படத்துள்' என்னும் கானல் வரியில், 'யாழ்கையில் தொழுது வாங்கி' எனவரும் பகுதியைக் கேட்ட அடிகளார், யாழ்கையில் ''தொழுது வாங்கியவர் யார்? கொடுத்தவர் யார்?'' என வினவினார்.

''வாங்கியவர் மாதவி, கொடுத்தவள் வயந்தமாலை' என்றேன்.வயந்தமாலை ஏவற்பணிப்பெண்ணாகிய சேடியே அன்றோ!அவளை மாதவி எற்றுக்குத் தொழுதல் வேண்டும்? என வினவினார்.

வினாவை எதிர்பாராத யான் சிறிது தயங்கினேன். உடனே அடிகளார், ''மாதவி தொழுதது வயந்தமாலையை அன்று; யாழ்க் கருவியையே மாதவி தொழுதாள். இசைத் தெய்வம் அதன் கண் தங்கி உறைவதாகக் கலையுணர்வு மிக்க மாதவி கருதினாள்'' என்றார் அடிகள்.

-ந.ரா. முருகவேள்

''அடிகளார் நூல்களைத் தாம் பயன்படுத்தியபின் அதனைச் சேர்த்துத் தொகுத்து வைத்த முறை சுவையுடைய கனி கிழங்குகளைத் திரட்டி வைத்த சபரியின் செயலையே நினைவூட்டுவதாகும். சீராமன் இலக்குமணன் ஆகியவர்கள் சேவையில் ஈடுபட்டு அவர்களுக்கு அளிப்பதற்காகவே சபரி அவற்றைத் தொகுத்து வைத்தாள். மறைமலையடிகள் இத்

தொகுப்பைத் திரட்டியதும் இது போலப் பொதுமக்கள் சேவையை உளத்திற் கொண்டே தான் என்பது குறிப்பிடத் தக்கது''

நூலக இயக்குநர் முனைவர் அரங்கநாதன்; மறைமலையடிகள் நூலகத் திறப்புரை

வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலையடிகள் மறையாத் திருப் பெயர்-வாழ்த்.

ஆழ்ந்து கடலில் முத்தெடுப் பார் போல்
அகன்ற உலக இலக்கியம் அனைத்திலும்
வீழ்ந்து பொருளுண்மை விளக்கும் ஆற்றலால்
வெல்ல முடியாத நல்லா சிரியனை-வாழ்த்.

தென்னாடு சார்ந்த குமரிப் பெருநிலம்
திரைகடல் மறந்த உண்மைச் செய்திக்குப்
பொன்னேடு காட்டும் புலவர்க்குப் புலவனைப்
பொழுதெல்லாம் தமிழுக் குழைத்த தலைவனை-வாழ்த்.

மறையெனப்படுவது தமிழ் நான் மறைநூல்
மற்றை மறைநூல் பின்வந்த குறைநூல்
முறையாய் இவைகட்குச் சான்றுகள் காட்டி
முழக்கஞ் செய்த முத்தமிழ் அறிஞனை-வாழ்த்.

பாவேந்தர் பாரதிதாசனார்.

16. நினைவுச் சின்னங்கள்

மறைமலையடிகள் நூல் நிலையம்

சென்னை இலிங்கிச் செட்டித் தெரு, 261 ஆம் எண் இல்லம் 'மறைமலையடிகள் நூல் நிலையமாக விளங்குகின்றது. அவ்வில்லம் முன்னாளில் சோமு செட்டியார் என்பவருடையதாக இருந்தது. அவ்வில்லந்தான் வள்ளலார் இராமலிங்க அடிகள் தம் ஒன்பதாம் வயதில் சொற்பொழிவு செய்யத் தொடங்கிய இடமாகும்.

அடிகளார் ஆவணப்படி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகத்தின் கிளை நிறுவனமாகிய தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திகழ்கின்றது அந்நூலகம்.

அடிகளார் தம் ஆய்வுக்கெனத் தொகுத்து வைத்த மும்மொழி நாலாயிர நூல்களுடன், ஐம்பதாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டு 'உள்ளூர்ப் பழுத்த பயன்மரமாய்' இயங்கி வருகின்றது.

ஆய்வுப்பகுதி, அரங்குப் பகுதி, வழங்கு பகுதி, செய்திப் பகுதி என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. மேனிலைப் பட்டங்கள் பெறுவார்க்கும் ஆய்வுநூல் எழுதுவார்க்கும் தொகுத்து வைத்த கலைக் களஞ்சியமெனத் திகழ்கின்றது.

இந்நூலகம் பழமையான இதழ்கள், புலவர்களின் படங்கள், கடிதங்கள், கையெழுத்துகள் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. அடிகளார் மாண்புத் திருவுடலமாகத் திகழும் இந்நூலகம், இதன் நிறுவனர் தாமரைத்திரு(பத்மஸ்ரீ) வ. சுப்பையா பிள்ளை அவர்களின் பேருள்ளப் பெருஞ்சான்றாகவும் விளங்குகின்றது. 24.8.58 இல் நூலகம் திறக்கப்பட்டது.

மறைமலையடிகள் கலைமன்றம்

சென்னையின் தென்பால் நெடுஞ்சாலையில் உள்ள பல்லவபுரத்தில் அடிகளார் வாழ்ந்த பொது நிலைக் கழக மாளிகையே 'மறைமலையடிகள் கலைமன்ற' மாகத் திகழ்கின்றது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கிளைகளுள் ஒன்றான தென்னிந்திய சைவ சித்தாந்தச் சங்கத்தின் முயற்சியால் தமிழக அரசு, இந்திய அரசு ஆகியவற்றின் பொருளுதவியால் மறைமலையடிகள் கலைமன்றமாயிற்று.

அடிகளாரின் கையெழுத்துப் படிகள், நூலின் முதற்பதிப்புகள், இசைத்தட்டுகள் ஆகியவை கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப்புலவர் பெருமக்களின் உருவப்படங்கள் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

பயில்வார்க்குப் பயன்படும் வகையில் ஒரு நூலகமும் உள்ளது. அடிகளார் பயன்படுத்திய பொருள்கள், அவர் வழிபட்ட அம்பலவாணர் கோயில் ஆகியவை அப்படியே உள்ளன. இந்திய அரசுச் சுற்றுலாத்துறை, சிறந்த சுற்றுலா மையமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

கலைமன்றத் திறப்பு விழா 12.7.62 இல் நிகழ்ந்தது. நிறுவனர் வ. சுப்பையா பிள்ளை, ''இம்மாளிகையைச் சிறந்த கலைக் கூடமாக்கியும் சைவ சித்தாந்த வகுப்பு, திருக்குறள் வகுப்பு, தேவார திருவாசக இசை வகுப்புகள், இசை நாடகம் பற்றிய ஆராய்ச்சி முதலியன நடக்கும் ஆராய்ச்சிக் கூடமாக ஆக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்'' என்று தம் வரவேற்புரையில் உரைத்தார். இம்மன்றம் உருவாகத் துணை நின்றவர் சி. சுப்பிரமணியம் ஆவார்.

மறைமலையடிகள் பாலம்

சென்னைச் சைதாப்பேட்டைக்கும் கிண்டிக்கும் இடையே செல்லும் அடையாற்றுப் பாலம் 'மர்மலாங் பாலம்' எனப்பட்டது. அப்பாலம் மறைமலையடிகள் பாலமென அரசால் மாற்றப்பெற்றது. அப்பாலம் சென்னைக்கும் பல்லவபுரத்திற்கும் இணைப்புப் பாலமாக இருப்பது கருதத் தக்கது. இனிப் பல்லவபுரத்தில் உள்ள அரசு உயர் பள்ளி, மறைமலையடிகள் உயர்பள்ளி எனவும் வழங்கப்படுகிறது. இவை கலைஞர் மு. கருணாநிதி ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டவை.

மறைமலை நகர்

சென்னைக்குத் தெற்கே சென்னையில் இருந்து செங்கற்பட்டு செல்லும் தென் நெடுஞ்சாலையில் 40 கிலோ மீட்டர் தொலைவில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள நகர் மறைமலை நகராகும். ஓரிலக்கம் மக்கள் வாழத்தக்கது எனத் திட்டப்படுத்தி உருவாக்கப் பட்டது அது.

தொழிற்சாலை, வணிக நிறுவனம், போக்குவரத்து வாய்ப்பு, மருத்துவமனை, பள்ளிகள், பூங்கா, சிற்றுண்டிச்சாலை, மனமகிழ் மன்றம் என்பனவெல்லாம் கொண்ட நகர் அது. அந்நகரை அடுத்தே தொடர் வண்டி நிலையம் ஒன்றுள்ளது. அது மறைமலை நகர்த் தொடர் வண்டி நிலையம் தானே!

வேறுபல

அடிகளார் பெயர் தாங்கும் தெருக்கள், நூலகங்கள், படிப்பகங்கள், மன்றங்கள், பள்ளிகள் என்பவை ஆங்காங்குள. நாகப்பட்டினத்திலும் வேறு சில இடங்களிலும் அடிகளார் திருவுருவச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

மதுரை மாநகராட்சிப் பள்ளியொன்று மறைமலையடிகள் பெயரால் விளங்குகின்றது. புன்செய்ப் புளியம் பட்டியில் அடிகளார் பெயர் விளங்கு மன்றம், அவர்தம் தனித்தமிழ்த் தொண்டை நோக்கமாகக் கொண்டு கடனாற்றுகின்றது. அடிகளார் எழுத்துப்போல் எழுதும் ஆர்வலர் ஆங்காங்குளர். அடிகளார் திருப்பெயர் தாங்கிய நன்மக்களும் பலர்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்பதன் சான்றுகள் இவை.

17. அடிகள் ஆக்கிய நூல்கள்

நூலடைவு:

அடிகள் ஆற்றிய பொழிவுகள் நூலாயின; அவர்கள் இதழ்களில் எழுதியவை நூலாயின; அறிக்கைகளாக வெளியிட்டவையும் நூலாயின; கட்டுரைத் திரட்டுகளும் நூலாயின. நூல்களாகவே ஆக்கப்பட்டவையும் உள்ளன.

அடிகளின் நூல்களை மருத்துவம், மறை பொருளியல், இலக்கியம், இதழ்கள், சங்க இலக்கிய ஆய்வு, பாடல், நாடகம், புதினம், கடிதம், கட்டுரை, சமயம், தத்துவம், வரலாறு, சமூக இயல் எனப் பதினான்கு வகைகளில் பிரித்துள்ளனர். அவை வருமாறு:

1. மருத்துவம்

1.	மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை இருதொகுதிகள் முதற்பதிப்பு	*1933*
2.	பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் முதற்பதிப்பு	*1921*

2. மறைபொருளியல்

3.	மனித வசியம்: மனக்கவர்ச்சி; முதற்பதிப்பு	*1927*
4.	யோக நித்திரை: அறிதுயில்: முதற்பதிப்பு	*1922*
5.	தொலைவில் உணர்தல்; முதற்பதிப்பு	*1935*
6.	மரணத்தின் பின் மனிதர் நிலை; முதற்பதிப்பு	*1911*

3. இலக்கியம்

7.	சாகுந்தல நாடகம்; முதற்பதிப்பு	*1907*
8.	சாகுந்தல நாடக ஆராய்ச்சி; முதற்பதிப்பு	*1934*

4. இதழ்கள்

9.	ஞானசாகரம் மாதிகை; முதற்பதிப்பு	*1902*

10. ORIENTAL MYSTIC MYNA; முதற்பதிப்பு 1908
11. OCEAN OF WISDOM; முதற்பதிப்பு 1935

5. சங்க இலக்கிய ஆய்வு

12. ANCIENT & MODERN TAMIL POETS முதற்பதிப்பு 1937
13. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் முதற்பதிப்பு 1936
14. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை 1903
15. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை 1906
16. முதற்குறள் வாத நிராகரணம் 1898
17. திருக்குறள் ஆராய்ச்சி; முதற்பதிப்பு 1951

6. பாடல்

18. முனிமொழிப் பிரகாசிகை; முதற்பதிப்பு 1899
19. மறைமலையடிகள் பாமணிக் கோவை; முதற்பதிப்பு 1977

7. நாடகம்

20. அம்பிகாபதி அமராவதி; முதற்பதிப்பு 1954

8. புதினம்

21. கோகிலாம்பாள் கடிதங்கள்; முதற்பதிப்பு 1921
22. குமுதவல்லி: நாகநாட்டரசி; முதற்பதிப்பு 1911

9. கடிதம்

23. மறைமலையடிகளார் கடிதங்கள்; முதற்பதிப்பு 1957

10. கட்டுரை

24. அறிவுரைக் கொத்து; முதற்பதிப்பு 1921
25. அறிவுரைக் கோவை; முதற்பதிப்பு 1971
26. உரைமணிக் கோவை; முதற்பதிப்பு 1972
27. கருத்தோவியம்; முதற்பதிப்பு 1976
28. சிந்தனைக் கட்டுரைகள்; முதற்பதிப்பு 1908
29. சிறுவர்க்கான செந்தமிழ் 1934
30. இளைஞர்க்கான இன்றமிழ் 1957

11. சமயம்

31.	திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை	1900
32.	மாணிக்கவாசகர் மாட்சி	1935
33.	மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்	1930
34.	மாணிக்கவாசர் வரலாறு	1952
35.	சோமசுந்தரக் காஞ்சியாக்கம்	1901
36.	சோமசுந்தர நாயகர் வரலாறு	1957
37.	கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா	1948
38.	திருவாசக விரிவுரை	1940

12. தத்துவம்

39.	சித்தாந்த ஞான போதம், சதமணிக்கோவை-குறிப்புரை	1898
40.	துகளறு போதம் - உரை	1898
41.	வேதாந்த மத விசாரம்	1899
42.	வேத சிவாகமப் பிரமாண்யம்	1900
43.	SAIVA SIDDANTA AS A PHILOSOPHY OF PRACTICAL KNOWLEDGE	1940
44.	சைவ சித்தாந்த ஞான போதம்	1906
45.	சிவஞான போத ஆராய்ச்சி	1958

13. வரலாறு

46.	CAN HINDI BE A LIQUA FRANCA OF INDIA	1969
47.	இந்தி பொது மொழியா?	1937

14. சமூக இயல்

48.	சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்	1913
49.	TAMILIAN AND ARYAN FROM OF MARRIAGE	1936
50.	தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்	1936
51.	பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்	1938
52.	வேளாளர் நாகரிகம்	1923

53. தமிழர் மதம் 1941

54. பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் 1906

இவ்வடைவு நூலகத்துறை இயக்குநர் அரங்கநாதன் அவர்களும், மறைமலையடிகள் நூலக நூலகர் முத்துக்குமாரசாமி அவர்களும் இணைந்து அமைத்த அடைவாகும்.

சில நூல்களின் விளக்கம்

மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை:

இந்நூல் அறிவுக் கடலின் ஐந்தாம் மலர் 2, 3 ஆம் இதழ்களில் தொடங்கிச் சிறுபகுதி வெளிவந்தது. பின்னர்ப் பத்தாம் மலரிலும் பதினைந்து பதினாறாம் மலர்களிலும் தொடர்ந்து நிறைவுற்றது.

இந்நூல் தொடங்கி முடிய இருபது ஆண்டுகள் ஆயின. தமிழ், ஆங்கிலம் ஆரிய மொழிகளில் அடிகள் கண்ட அரிய மருத்துவக் குறிப்புகளையெல்லாம் திரட்டி அருமையாக வரைந்த பெருநூல் இது.

உயர்ந்த நூல்கள் பலவற்றைப் பயின்ற அளவில் நில்லாது அவற்றைத் தாமே செய்து பார்த்தும் தம்மைச் சார்ந்தாரிடத்தே செய்து பார்த்தும் எவை சிறந்தனவாகவும் செலவில்லாதன வாகவும் எளிதிற் செய்து பயன் பெறத்தக்கனவாகவும் தெளியப்பட்டனவோ அவற்றை வரைந்திருப்பதாக முகவுரையில் கூறுகிறார். மக்களின் குறுகிய வாழ்வைக் கண்ட இரக்கமே இந்நூலை இயற்றி வெளியிடத் தூண்டியது என்றும் குறிக்கிறார். 'ஆண் பெண் சேர்க்கை', 'மக்கட்பேறு' 'கருவிலக்கு' முதலான பகுதிகளில் சொல்ல வேண்டுவனவெல்லாம் வெளிப்பட வரைந்திருத்தல், வழிவழிப் பெருகும் பெருந்தீங்கினை விலக்குவதற்கே என்று இயம்புகின்றார். நோயில்லா நீண்ட வாழ்க்கை என்னும் ஏழாம் பகுதி மட்டும் அளவாலும் பொருளாலும் தனிநூலாகும் சிறப்புடையதாகும்.

தூய தமிழால் மருத்துவ நூல்களை எழுதமுடியும் என்பதை நிலை நாட்டிய பெருநூல் இந்நூல்.

பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்:

மக்கட்குப் பொருந்திய உணவு இது என்பதைக் காட்டும் நூல் இது. சமயங்கள் பலவும் கொல்லாமை புலாலுண்ணாமை என்பனவற்றை வலியுறுத்துதலையும், கண்ணப்பர் புலாலுண்டதனை இறைவன் ஏற்றுக் கொள்ளாமையையும், புலாலுணவைக் கொள்பவர்கள் கூறும் கருத்துகளின் மறுப்பும்

இந்நூலில் இடம் பெற்றது. இதன் முதற்பதிப்பினும் (1921) இரண்டாம் பதிப்பு (1929) விரிவுடையதாயிற்று.

மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி:

பிறரை வயப்படுத்தவல்ல மனவளக் கலையை விரித்துச் சொல்வது இந்நூல். இத்துறையிலும், அறிதுயில் திறத்திலும் அடிகளார் தேர்ந்து விளங்கியவர். இவற்றைச் செயன்முறைப் படுத்தி வெற்றியும் கண்டவர். உலகளாவிய அளவில் 'மனக்கவர்ச்சி'த்திறம் போற்றப்படுதலைச் சான்றுகளுடன் விளக்குகிறார். தீயவழிகளுக்குப் பயன்படுத்தும் இக்கலை நல்வழிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்னும் ஆர்வத்தால் இந்நூலை அடிகள் எழுதியுள்ளார். அறிவுக்கடல் இதழில் 1910 முதல் 1937 வரை இடைப்பட்டு வந்து முடிவுற்ற நூல் இது.

யோக நித்திரை அல்லது அறிதுயில்:

அடிகளார் பெற்ற சிவயோகப் பயிற்சியின் விளைவு இந்நூலாகும். பேராசிரியர் கந்தசாமியாரை அறிதுயிலில் அமர்த்தித் தம் கட்டளைகளையெல்லாம் அவர் செய்யுமாறு அவையில் காட்டினார், அடிகள். அவர் மகனார் திருநாவுக்கரசின் இளைப்பு இருமலை இத்துயிலால் அகலச் செய்தார்.

ஒவ்வொருவர் அறிவும் உணர்ச்சியும் அறிதுயிலில் சென்ற அளவிலே பேரொளியோடு விளங்கிக் கண்ணும் காதும் உணராத மறைபொருள்களை அறியும். தீரா நோயரையும் மருந்தில்லாமல் நலப்படுத்தலாம்; தீய தன்மையும் செயலும் உடையவரை அவற்றில் இருந்து விலக்கலாம்; பின்வருவதை முன்னர் அறிந்து கொள்ளலாம்; வாழ்வுக்கு வேண்டும் நலங்கள் எல்லாம் கைவரப் பெறலாம்; இறைவன் திருவருளை இப்பிறப்பிலேயே அடைந்து பேரின்பப் பெருநிலை எய்தலாம். இவை அறிதுயிலால் அடையப்பெறுவன என்பதை இனிய தூய தமிழில் விளக்குவது இந்நூல். 1922 இல் வெளிவந்தது.

தொலைவில் உணர்தல்:

அறிவுக் கடல் வழியே பிறந்த நூல் இது. 1911 இல் தொடங்கப் பெற்றும் 1935 ஆம் ஆண்டிலேயே இடைத் தடையுற்று நிறைவுற்ற நூல்.

ஐம்புலன்களுக்கும் எட்டாத் தொலைவிலுள்ள பொருள் களையும் உயிர்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் நம் உள்ளத்தால் உணர்தலே. தொலைவில் உணர்தலாகும்.

இத்திறம் அனைவர்க்கும் உள்ளதே; ஒவ்வொருவரும் ஒவ்வொரு போது உணர்ந்ததே. எனினும் முழுவதாகப் பலராலும் அறிய முடிவதில்லை. பாசி மூடிய நீர் பாசி விலகினால் விளங்குவது போன்றும், மழை பெய்யும் போது முகிலால் மறைக்கப்பட்ட திங்கள் மழையும் முகிலும் நீங்கிய பின் தெளிவாகத் தெரிவது போன்றும் நம்மிடம் இருக்கும் அறியாமை இருள் நீங்கினால் தொலைவில் உணரும் திறம் உண்டாகும் என்பதை மேலை நாட்டு அறிஞர்கள் எழுத்து, சான்று ஆகியவை கொண்டு தெளிவாக எழுதப்பட்டநூல். படிக்கும்போதே நமக்கும் அத்திறம் கைவரக் கூடியதே என்பதைத் தெளிவிக்க வல்லநூல்.

மரணத்தின் பின் மனிதர் நிலை அல்லது இறந்தபின் இருக்கும் நிலை:

இதுவும் அறிவுக்கடல் ஐந்தாம் மலரில் இருந்து ஏழாம் மலர் வரை வெளிவந்து நூலுருப் பெற்றது ஆகும்.

இந்நூலில் இம்மை மறுமை, நுண்ணுடம்பின் காட்சி, அதன் உருவம், ஆவிவடிவில் நின்ற ஒரு மாதின் கடிதம், ஆவியான கிளாஸ்டன் துரையுடன் உரையாடல், ஆவி வடிவங்கள் தோன்றக் காரணம், பணப்பற்றுள்ள ஓர் ஆவியின் வரலாறு, ஹாம்லெட்டின் ஆவி வடிவம், கொலையைக் காட்டிய ஒருவனின் நுண்ணுடல், அறக்கடவுளின் ஒளியுடம்பு, ஒளி வானத்தின் இயல்பு, ஒளி வானின் உலகங்கள், நுண்ணொளியுலக வாழ்வு, வேறுபல உலகங்கள், கோளுலகங்கள், கடந்த பிறவியின் நினைவுகள், வரும் பிறவியின் நினைவுகள் முதலிய பகுதிகள் அடங்கியுள்ளன.

சாகுந்தல நாடகம், சாகுந்தல நாடக ஆராய்ச்சி:

இவ்விரு நூல்களும் ஒன்றை ஒன்று சார்ந்தவை என்பது பெயரானே விளங்கும். வடநாட்டில் உச்சயினியில் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காளிதாசப் பெரும்பாவலர் படைத்த சாகுந்தல நாடகத்தின் நேரான தமிழாக்கமும், அதனைப் பற்றிய ஆய்வுமாக வெளிவந்தவை இவை. முன்னது 1907 ஆம் ஆண்டும் பின்னது 1934 ஆம் ஆண்டும் நூலாயின.

சாகுந்தல நாடகம் அறிவுக்கடலின் தொடக்கத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து, பின்னே நூலாக்கம் பெற்றது.

செய்யுள்கள் இடை இடையே வர, முதனூற் கருத்து மாறாமல் தூய தமிழ் நடையில் செய்யப்பட்டது முதல் நூலாகும். பின்வந்த பதிப்புகளிலும் மீளவும் மூல நூலொடும் ஒப்பிட்டுச் சிறந்த திருத்தங்களைப் பெற்றது. ஆராய்ச்சி நூல், நாடக இயல்பு, நாடக

வரலாறு, நாடக அமைப்பு, நாடகக் கதையமைப்பு, நாடக மாந்தர் இயற்கை, கதை நிகழும் காலமும் இடமும், காளிதாசரது காலம், காளிதாசரது நல்லிசைப் புலமை எனப் பல பகுதிகளையுடையது. ஒரு நூலை எவ்வாறு ஆராய வேண்டும் என்னும் ஆய்வு இலக்கணமாகவே திகழ்வது.

ஆய்வில் குணம் நாடல், குற்றமும் நாடல் என்பவை கொள்ளப்படல் முறை. அவ்வகையில், ''சகுந்தலையின் உடலழகைப் புதிது மலர்ந்த மல்லிகை மலரின் நிறத்தொடு மட்டும் உவமை காட்டுவது உயர் நலம் உடையது; பிற புலவர்கள் போல் அடிமுதல் முடிவரை அழகு புனைதலாம் மிகைப்பாடு ஆங்கு இல்லை'' எனப்பாராட்டுகிறார்.

சகுந்தலையின் தோழியர் துசியந்தனைக் கண்ட போதே, அவனைச் சகுந்தலை மணத்தல் தகும் என்பது மகளிரின் இயல்பான நாணத் தன்மைக்கு மாறானதாகும் என்பார். இவ்வாறே பிறவும் உள.

முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்:

சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுப்புலவர் பேரவை 1933 இல் திருநெல்வேலியில் நிகழ்ந்தது. அம் மாநாட்டுத் தலைமை ஏற்ற அடிகள் ஆங்கு ஆற்றிய உரையே 1936 இல் ''முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்'' என்னும் பெயரில் வெளிப் பட்டதாகும்.

முற்காலத் தமிழ்ப் புலவர்கள் உண்மை நெறியில் செந்தமிழைத் தம் உயிரினும் போற்றித் தூய சொற்களால் நூல் இயற்றி வளப்படுத்தினர் என்றும், சென்ற அறுநூறு ஆண்டுகளாக விளங்கிய தமிழ்ப்புலவர்கள் அவ்வுண்மை நெறியை விட்டுச் செந்தமிழின் தூய்மையையும் புறந்தள்ளிப் பிற சொற்கள் விரவப் பொய்ப் பொருள் கலந்த பாக்களையும் நூல்களையும் எழுதி வைத்தனர் என்றும் பற்பல சான்றுகளால் விளக்குகிறார் அடிகள்.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை: பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை:

இவ்விரு நூல்களும் கிறித்தவக் கல்லூரியில் கலை, நூற் பயிற்சி பெற்ற மாணவர் விருப்பப்படி அவர்கள் பொருட் கொடையால் முறையே 1903, 1906 ஆம் ஆண்டுகளில் வெளியிட்ட நூலாகும். இவற்றைப் பற்றிய குறிப்புகள் முன்னே உள.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியில்,

பாட்டின் இயல்பு இன்னதென விரித்துக் காட்டும் அடிகள்.

''புலவன் எழுதும் பாட்டு பருப்பொருள்; உலகின் அழகு பாட்டின் நுண் பொருள்; நீலக்கடலிலும் கோலக் குன்றிலும் நாட்டிலும் பிற இடங்களிலும் பாட்டின் இயல்பு பரந்து கிடக்கின்றது; பாட்டு என்பது 'மக்கள் அறிவினின்று வடித்து இறக்கப்பெற்ற தூய அமிழ்தம்' என்று மில்டனார் கூறுகிறார் - என்பதை விளக்கிக் கூறுகிறார். பின்னர்ப் பழந்தமிழ்ப் பாட்டின் இயல்பு, முல்லைப் பாட்டின் பருப்பொருள், நச்சினார்க்கினியர் உரை, முல்லைப் பாட்டு ஆய்வு, விளக்கம், அருஞ்சொற்பொருள் என்னும் பகுதிகளில் நூல் நடையிடுகின்றது.

பட்டினப்பாலையும், பாட்டின் இயல்பு, பாட்டு, பொருட் பாகுபாடு, பாட்டின் வரலாறு, ஆக்கியோன் வரலாறு, பாட்டுடைத் தலைவன், பாட்டின் நலம் வியத்தல், வரலாற்றுக் குறிப்புகள், பாவும் பாட்டின் நடையும், விளக்கவுரைக் குறிப்புகள், அருஞ்சொற்பொருள் என்னும் பிரிவுகளைக் கொண்டுளது.

முனிமொழிப் பிரகாசிகை:

''தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்''

என்னும் ஔவையார் வெண்பாவில் வரும் 'முனிமொழி' என்பதற்கு 'வியாசர் எழுதிய வேதாந்த சூத்திரம்'' என்று முன்னோர் உரை கூறி வந்தனர். அதற்குத் திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் சபாபதி நாவலர், 'முனிமொழியும் கோவை திருவாசகமும்' என இணைத்து, அம்முனிவராவார் மாணிக்கவாசகரே என்று ஒரு கட்டுரை எழுதினார். முன்னவர்கள் கண்ட உரையே சரியானது என்று கொண்ட சோமசுந்தர நாயகர் தூண்டலால் அறிவுக் கடலில் எழுதிய மறுப்புக் கட்டுரையே இந்நூலாம். இந்நூல் நடையை நோய்ப் படுக்கையில் இருந்த சபாபதி நாவலர் படித்து, ''எமக்குப் பின்னர்ச் சிறந்த உரைநடை எழுதுவார் இவரே'' என்று பாராட்டினார் என்பர்.

கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி அல்லது நாகநாட்டு அரசி:

கோகிலாம்பாள் என்பாள் எழுதும் கடிதங்களே தன் கதையாக அமைந்த புனைகதை நூல் இது. கடிதங்கள் அவள் காதலனுக்கு வரையப்பட்டவையாகும். அடிகளார் புனைந்த தமிழ்மூலம்

உடையது இது. சீர்திருத்தம், நல்லறிவு, கல்வித்திறம், சுவையுணர்வு, நடைநலம் ஆகியவற்றைக் கற்பார் அடையும் வகையில் அமைந்த நூல். குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்பது ஆங்கிலத்தில் 'இரெனால்டு' என்பார் எழுதிய 'லீலா' என்னும் புனைகதையின் மொழி பெயர்ப்பாக எழுதப்பட்டது. எளிய தூய தமிழ் நடையினது. பெயர் இடம் முதலியனவும் தமிழொடு இயைந்ததாகச் செய்யப்பட்டது.

மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் (இரண்டு தொகுதிகள்)

மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கு முன்னவர் என்றும், பின்னவர் என்றும் இருவேறு ஆய்வாளர்கள் உளர். மாணிக்க வாசகர் சொல்நடை, சங்க நடைசார்ந்ததாதலின் மூவர்க்கு முன்னவர் என்றும், சுந்தரர் பாடிய திருத் தொண்டத் தொகையில் மாணிக்கவாசகர் பெயர் குறிப்பிடப்படாமையால் அவர்க்குப் பின்னவர் என்றும் இருசாராரும் கூறுவர். இச்சிக்கலை அகற்றும் உறுதியால், அடிகளார் ஆழமாக ஆராய்ந்து மாணிக்கவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டே என்று முடிவுகட்டினார்.

மாணிக்கவாசகர் வரலாறு புராண நூல்களில் வெவ்வேறாகக் காணப்படுவதால் அவற்றை உண்மையெனக் கொள்ளாமல் திருவ்ாசகம் திருக்கோவை நூல்களில் காணப்படும் குறிப்பு களையே வரலாற்றுச் சான்றாகக் கொள்ள வேண்டும் என்னும் தேர்ந்த முடிவில் ஆய்ந்து வரைந்த பெருநூல் இஃதாகும்.

அப்பர் தம் தேவாரத்தில் குறிப்பிட்ட சில திருவிளை யாடல்கள் மணிவாசகர் பொருட்டு நிகழ்ந்தன ஆதலால், மூவர்க்கும் முந்தியவர் மணிவாசகர் ஆவார்.

திருவாசகமும் திருக்கோவையும் பண்டைத் தமிழ்வழக்கே தழுவியவை; செய்யுட்களும் சங்கச் செய்யுட்களே போன்றவை. திருவாசகத்திலுள்ள திருக்கோத் தும்பி, திருத்தோள் நோக்கம், திருச்சாழல், திருவுந்தி, திருப்பொற் சுண்ணம், திருப்பூவல்லி, திருப்பள்ளியெழுச்சி முதலியவை பண்டை இசைத் தமிழ் நாடகத் தமிழ் நூல்களிலும் உள்ளவை என அடியார்க்கு நல்லார் காட்டியுள்ளார். இவை காலத் தொன்மை காட்டுவன என்கிறார்.

மணிவாசகர் வரலாறு காலம் ஆயும் வகையால் தமிழக - தமிழிலக்கிய ஒட்டு மொத்த ஆய்வையே அடிகளார் மேற் கொண்டுளார் என்பது இந்நூலால் தெளிவாகும். 1930 இல் நூலுருக் கொண்டது இது.

சோமசுந்தரக் காஞ்சியாக்கம்

சோமசுந்தர நாயகர் இயற்கை எய்திய காலையில் இரங்கிய அடிகளார் இயற்றியது இது என்றும், பின்னே புலவர்கள் பழநூன் முறைக்கு மாறானது என்று குறை கூறியபோது, அக்குறையெதுவும் அற்றது எனத் தெளிவித்ததும் ஆகிய இந்நூற் செய்தி முன்னே வரலாற்றொடும் சொல்லப்பட்டது.

இது கையறு நிலை, தாபத நிலை, மன்னைக் காஞ்சி என்னும் முப்பிரிவுகளையுடையது.

நாயகரின் சிவத்தோற்றம், பண்பு, திருப்பணி, நாடடைந்த இழப்பு என்பன இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா

15.10.1927 ஆம் நாள் திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த சைவ சித்தாந்த மாநாட்டுத் தலைமையேற்று அடிகள் ஆற்றிய உரை, 1929 இல் நூலுருக் கொண்டு இப் பெயரால் வெளிப்பட்டதாகும்.

''கேட்டாரும் அறியாதான்'' என்னும் திருவாசகப் பாட்டின் விரிவுரையே இந்நூல் என்பது தகும்.

உண்மைச் சைவக் கொள்கை, போலிச் சைவக் கொள்கை என்பவை எவை என்பதைத் தெளிவித்துள்ளார். புராணக் கதைகளும் பொருந்துவன பொருந்தாதன என்பவற்றையும் ஆய்ந்து நிறுவுகிறார்.

அறிவுரைக் கொத்து

சைவசமய பரிபாலனம், கோயில் வழிபாடு, சிறு தெய்வங் கட்கு உயிர்ப்பலியிடலாமா?, சீவகாருணியம், கடவுளுக்கு அருளுருவம் உண்டு. கல்வியே அழியாச் செல்வம், தமிழ்த்தாய், அறிவு நூற்கல்வி, தமிழிற் பிறமொழிக் கலப்பு, உடன் பிறந்தார் ஒற்றுமை, வணிகக் கூட்டுறவு, பெண் மக்களின் கடமை, பெற்றோர் கடமை என்னும் கட்டுரைகளைக் கொண்டது இந் நூலாகும். அறிக்கைகளாகவும், சிறு நூல்களாகவும் வெளியிடப் பட்டவற்றின் தொகுப்பே இது. வெளிவந்த ஆண்டு 1921.

சிந்தனைக்கட்டுரைகள்:

முருகவேள் கண்டகாட்சி, படைப்பின் வியத்தகு தோற்றங்கள், துன்பமாலை, முருகவேள் கனவிற் கண்ட ஓவியச்சாலை, மராட்டன் கண்ட காட்சி, பேய்களும் ஆவிகளும் என்னும் ஆறு கட்டுரைகளைக் கொண்டது இந்நூல். இது எடிசன் என்பார் ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரைகளைத் தழுவியது 1908

இல் வெளிவந்தது. 'முருகவேள்' என்னும் புனை பெயரால் அடிகள் எழுதிய நூல் இது. இதில் எடிசன் வரலாறும், அடிகளின் இளந்தைப் பருவ வரலாறும் உண்டு.

சிறுவர்க்கான செந்தமிழ்

சிறுவர்களுக்கு அறிவு புகட்டும் கதைகளும் கட்டுரைகளும் கொண்ட நூல் இது. நடையாலும் சிறுவர்களுக்குத்தக அமைந்தது. அதிலேயமைந்த சொல்லாய்வுப் பகுதி ஒன்று:

பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டை 'வல்லை' என்றும், சிறுமரங்கள் மிடைந்த காட்டை 'இறும்பு' 'குறுங்காடு' என்றும், சிறு தூறுகள் பம்பின காட்டை 'அரில்', 'அறல்', 'பதுக்கை' என்றும், மிக முதிர்ந்த முற்றிப்போன மரங்களையுடைய காட்டை 'முதை' என்றும், மரங்கள் கரிந்து போன காட்டைப் 'பொச்சை', 'சுரம்' 'பொதி' என்றும், அரசனது காவலிலுள்ள காட்டைக் 'கணையம்', 'மிளை', 'அரண்' என்றும் பண்டு தொட்டுத் தமிழ்மக்கள் வழங்கி வந்திருக்கின்றனர். (பக்.44.) இது 1934 இல் வெளிவந்தது.

திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை

''எமக்கு உண்டான கொடிய நோய் தீர்த்த முருகப்பிரான் திருவருளை வியந்து இயற்றிய எமது மும்மணிக்கோவை'' என இரண்டாம் பதிப்பில் அடிகளார் எழுதிய எழுத்தால், இந்நூல் இயற்றப் பெற்ற நோக்கம் விளக்கமாகும். அடிகளின் பழந்தமிழ்ப் புலமையும் சமயத்திறமும் விளங்க அமைந்த நூல். அவற்றின் பிழிசாறாகத் திகழ்கின்றது. அந்நாள் பெரும்புலவர்களான அரசஞ் சண்முகனார், மு. இராகவ ஐயங்கார் முதலியவர்கள் பாராட்டுப் பெற்றது இந்நூல்.

''சோம சுந்தரத் தோமறு குருவன்''
''நாராயணன் எனும் குருவனும்''

என்பன போன்றவற்றால் தம் ஆசிரியர்கள் மேல் அடிகள் கொண்ட பற்றுதல் வெளிப்படும். அடிகளின் மாணவர் இளவழகனார் இந்நூலுக்கு அரிய விரிவுரை வரைந்துளார். இந்நூல் பாடி முடிக்கப்பட்டது 1900 செப்டம்பர் 28.

சைவ சித்தாந்த ஞானபோதம்

''அடிகள், 1906 முதல் ஆங்காங்குப் பலநகர்களிலும் சொற்பொழிவாகத் தெளிக்கப்பட்ட சைவ சித்தாந்தத்

தேன்துளிகள் அடங்கிய கிண்ணமே இந்நூல்'' என்கிறார் புலவர் அரசு (மறைமலையடிகள் 154).

சைவசித்தாந்த நுண்பொருள்களை உணர்த்தும் நூல்கள் உயரிய செந்தமிழ்ப் பாக்களாகவே இருத்தலால், அறிவுத்துறை முற்றிய புலவர் பெருமக்களுக்கேயன்றி மற்றையோராற் கற்க இயலாமல் உள்ளன. மற்றுப் பலரும் அறிந்துய்ய எளிய உரைநடையிற் சைவசித்தாந்த நுண்பொருள் தெரிவிக்கும் நூல்களும் இல்லை. இக்குறைபாட்டை நீக்கவே இந்நூல் அடிகளாரால் எழுதப்பட்டதாகும். இதுவும் அறிவுக்கடல் வழியாக நூலுருப் பெற்றதாகும்.

இந்தி பொது மொழியா?

அரசினர் 1937 இல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கச் சட்டமியற்றிய போது அதனை எதிர்த்து அடிகளார் மேடையில் பேசியதோடு, நூலாகவும் எழுதினார். அதுவே இந்நூலாகும்.

மேல்நாட்டு இந்தி, கீழ்நாட்டு இந்தி, பிகாரி இந்தி என அது முப்பெரும் பிரிவானதாய் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற உருவிலே பேசப்பட்டு வருகின்றதை எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் இந்தி மொழியின் வரலாறு, இந்தி மொழி நூல்கள், தமிழைப் பொதுமொழியாக்குதலின் நன்மை, தமிழ் அல்லாத மொழிகள் நிலை, தமிழ் மக்கள் நிலை என்பவற்றையெல்லாம் விளக்கமாக வரைந்துள்ளார் இந்நூலில்.

சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்

சாதி வேற்றுமையால் நாடு கெடுகின்ற கேட்டை விளக்குவது இந்நூல். சாதி நோய் சைவத்துள் புகுந்து அச் சைவருக்குள்ளேயே உயர்ந்த சைவர், தாழ்ந்த சைவர் எனப் பிரிக்கும் கொடுமையையும் விளக்குவது இந்நூல்.

அடிகளாரின் இந்நூலை உணர்ந்து கற்பவர் சாதியைப் பாராட்டார். சாதிப் பிரிவுகளை வெறுத்து ஒதுக்குவார் என்பது உறுதியாம்.

இந்நூலின் சீர்திருத்தம் என்னும் பகுதியில் உள்ள சாதி ஒழிப்பு என்னும் உட்பகுதியில், இதன் கருத்துகள் சில காண்க. இந்நூல் 1913 இல் வெளிவந்தது.

பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்

1929 ஆம் ஆண்டு திருப்பாதிரிப் புலியூரில் நிகழ்ந்த சைவர் மாநாட்டிற்குத் தலைமையேற்று அடிகள் ஆற்றிய உரை

இந்நூலாகும். இந்நூற் கருத்தை மறுத்தார் ஒருவரை மறுத்தும் தம்முரை செவ்விய உரையே என்பதை நிலைப்படுத்தியது இந்நூலின் இரண்டாம் பகுதியாயிற்று.

சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளாகிய இறை உயிர் தளை என்பன தொல்காப்பியர் நாள் தொட்டே வழக்கில் உள்ளமையும் இன்பமும் பொருளும் அறனும் என்னும் முப்பொருள் கொள்கைச் சிறப்பும், சீர்திருத்தமென நாம் விரும்புவனவெல்லாம் பண்டே கொண்டிருந்த சிறப்பும் விளக்குவது இந்நூல்.

வேளாளர் நாகரிகம்

1921 தைத்திங்கள் முதல் நாள் யாழ்ப்பாணத்தில் அடிகளார் 'தமிழர் நாகரிகம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். அச்சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்தது. அப்பொழிவுச் செய்தி நூலாக்கம் பெறல் வேண்டும் என்னும் ஆர்வத்தால் ந.சி. கந்தையா பிள்ளையும், குமாரசாமி என்பவரும் இருநூறு ரூபா வழங்கி அப்பொழிவைத் தமிழர் நாகரிகம் என்னும் பெயரால் வெளியிட வேண்டினர். அதன்பின் 1923 இல் தனவைசிய ஊழியன் இதழில் 'வேளாளர் சூத்திரர்' என்றொரு கட்டுரைச் செய்தி வெளிவந்தது. அதனைக் கண்டிக்கும் வகையில் 'தமிழர் நாகரிகம்' அல்லது 'வேளாளர் யார்?' என்னும் பெயரில் இந்நூலை வெளியிட்டனர். இரண்டாம் பதிப்பில் அது 'வேளாளர் நாகரிகம்' என்னும் பெயரில் வெளிவந்தது.

வேளாளர் சூத்திரர் அல்லர் என்றும், ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழர் நாகரிக முதிர்வொடு விளங்கினர் என்றும், அந்நாகரிகத் தமிழரே தம்மைச் சார்ந்த ஆரியரைத் திருத்தினர் என்றும் விளக்கும் நூல் இது.

தமிழர் மதம்:

1940 இல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடிய அனைத்திந்தியத் தமிழர் மதமாநாட்டுத் தலைமையேற்ற அடிகள், அத்தலைமைப் பொழிவுக்கு எழுதியதும், பொழிவாற்றியது மாகியவையே தமிழர் மதம் என்னும் நூலாகும். தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களில் இருந்தும் இருக்கு வேதம் முதலிய வடநூல்களில் இருந்தும் ஆங்கில நூல்களில் இருந்தும் காணப்பெறும் அரிய கருத்துகளைக் கொண்டது இந்நூல்.

தமிழர்களின் ஒளி வழிபாடும் தீப்பிழம்பில் இருந்து சிவமும், நீரின் நீல நிறத்தில் இருந்து அம்மையும் காணப்பட்டமையும்,

அம்மையையே திருமாலாகக் கண்டவர் என்பதையும் விளக்குகிறார். மேலும் காலைக் கதிர் முருகன் எனவும் மாலைக் கதிர் சிவன் எனவும் வழிபடப்பட்டமையையும் குறிப்பிடுகிறார்.

எரியோம்பல் தமிழர்க்கு உண்மையையும், அம்மி மிதித்தல் அருந்ததி காட்டல் என்னும் சடங்கு ஒழிந்த மற்றைய திருமணச் சடங்குகள் தமிழர்க்குப் பண்டே உண்டு என்றும் காட்டுகிறார். ஊழ்வினைக் கொள்கையும் தமிழர்க்கு உண்டு என்று உறுதிப்படுத்துகிறார். இது 1941 இல் வெளிவந்தது.

அம்பிகாபதி-அமராவதி

அடிகளார் நாடகமாக எழுதிய நூல் இது. அவர் வாழ்ந்த காலத்தில் நூல்வடிவு பெறாமல் 1954 இல் கழகத்தால் வெளியிடப்பட்டது. அதற்கு ஐந்து ஆண்டுகளின் முன் (1949) அடிகளார் எழுதிய நாடகம் இது. இதுவே, அடிகளார் இயற்றிய இறுதி நூல்.

புலவர் புராணம், புலவர் வரலாறு ஆகியவற்றில் சொல்லப்படும் கம்பர் மகன் அம்பிகாபதிக்கும், அமராவதிக்கும் ஏற்பட்ட காதல் அதன் துயரமான முடிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரைந்த துன்பியல் நாடகம் இது.

ஐந்து நிகழ்வுகளும் 30 காட்சிகளுமாக நாடகம் இயல்கின்றது. வடமொழிப் பில்கணீயக்கவியும், அவன் மாணவியும், ஒளியிழந்தவனாகவும் நோயுடையளாகவும் மறைத்துக் காட்டப்பட்டதும், வெண்மதி பற்றி அவன் பாடியமையால் உண்மை வெளிப்பட்டு அவர்கள் காதலர் ஆகியதும் போன்ற அமைப்பை இந்நாடகத்தில் மேற் கொள்கிறார். ஆங்கில நாடக உத்திகளையும் அடிகள் மேற்கொண்டு நாடகத்தை இயக்குகிறார். இறுதிக்காட்சி முழுவதும் அவலமாய் உணர்வை உருக்குகின்றது.

மறைமலை அடிகள் (1876-1950) (இயற்பெயர் சுவாமி வேதாசலம்) தமிழ்ப் பெரும்புலவர்களில் ஒருவர். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் வல்லுநர். சைவசமயத்தில் மிகுந்த பற்று உடையவர். நல்லாசிரியராகவும், ஆராய்ச்சியாளரெனவும் புகழ் பெற்றவர். தனித் தமிழ் இயக்கம் கண்டது இவரது தலையாய தொண்டாகும். பழமையிலும் புதுமையிலும் ஏற்றம் பெற்றவர். சீர்திருத்தச் செம்மல். மூடப்பழக்கவழக்கங்களையும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத வற்றையும் ஒதுக்கி அறிவியல் நெறியில் அறநெறி மேற்கொண்டவர். இவரது நினைவாக மறைமலை அடிகள் நூலகம், மறைமலையடிகள் கலைமன்றம் முதலியவை விளங்குகின்றன.

இந்நூலாசிரியர் இளங்குமரன் பல்வேறு நிலைகளில் ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் 42 ஆண்டுகள் பணிசெய்தவர். இலக்கியம், இலக்கணம், வரலாறு, ஆராய்ச்சி என்னும் வகைகளில் 200க்கு மேல் நூல்கள் இயற்றியவர். பாவாணர் நூலகம், திருவள்ளுவர் தவச்சாலை என்பனவற்றின் நிறுவனர். இச்சிறு நூலில் பிறமொழிவாசகர்களையும் கருத்தில் கொண்டு, மறைமலை அடிகளின் வாழ்க்கைமற்றும் நூல்கள் பற்றிய விவரங்களை எளிமையாக எடுத்துரைத்துள்ளார் இந்நூலாசிரியர்.

Maraimalaiadigal (Tamil) **Rs. 15**

ISBN 81 - 7201 - 743-X